# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 305 புரட்டாதி 13ஆம் நாள் திங்கட்கிழமை 30 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


அரச தலைவர் தேர்தலில்

# யாருமே எதிர்பார்க்காத முடிவையும் எடுப்போம்

கூட்டமைப்பு அதிரடி

யாழ்ப்பாணம், செப். 30
அரச தலைவர் தேர்தலில் எவரும் எதிர்பாராத தீர்மானத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கக்கூடும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். வடமராட்சி, கெருடாவில் நற்பணி மன்றத்தின் ஆறாவது ஆண்டு நிறைவு விழாவும் மதிப்பளிப்பு நிகழ்வும் நேற்று மாலை நடை 23

சஜித் வேட்பாளராகவுள்ள நிலையில்

# ரணில் - கூட்டமைப்பு இன்று அவசர சந்திப்பு

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 30**
**ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக நீண்ட இழுபறியின் பின்னர் சஜித் பிரேமதாச அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், அந்தக் கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் இடையிலான அவசர சந்திப்பு இன்று மாலை அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.** 23

## பெரும்பான்மைச் சமூகத்தினர் ஏமாற்றுவதில் கெட்டிக்காரர்கள்

*செய்தியாளர் சந்திப்பில் சரா எம்.பி. சாட்டை*



யாழ்ப்பாணம், செப். 30
பெரும்பான்மைச் சமூகத்தினர் ஏமாற்றுவதில் கெட்டிக்காரர்கள். இது வரலாறு. இந்தப் பின்னணியில் நடைபெறவுள்ள 04

கோத்தாவின்

## இரட்டைக்குடியுரிமை ஆவணங்கள் இல்லை

கைவிரிக்கின்றன அரச திணைக்களங்கள்

கொழும்பு, செப். 30
கோத்தபாய ராஜபக்சவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பான பதிவுகள் எவையும் தம்மிடம் இல்லை என்று, பாதுகாப்பு அமைச்சும், குடிவரவு, குடியகல்வு திணைக்களமும் தெரிவித்ததாக, குற்ற விசாரணைப் பிரிவு, கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. 04

## கோத்தாவின் குடியுரிமை செல்லுபடியானதா?

நீதிமன்றில் மனு

கொழும்பு, செப். 30
கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமையின் செல்லுபடித்தன்மையை சவாலுக்குட்படுத்தும், ரிட் மனுவொன்று, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக் 04

## அரச தலைவர் வேட்பாளராக மகேஷ் சேனநாயக்க அறிவிப்பு

கொழும்பு, செப். 30
இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அரச தலைவர் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறி 04

## சஜித்துக்கு ஆதரவு வழங்கவே முடியாது

ஐ.தே.கவின் கடிதத்துக்கு சு.க. பொதுச் செயலர் பதில்

கொழும்பு, செப். 30
அரசதலைவர் தேர்தலில் இணைந்து செயற்பட முன்வருமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது 04

## கோத்தாவின் பணிமனை திறப்புக்கு ஏமாற்றி அழைத்துவரப்பட்ட மக்கள்

கிளிநொச்சி, செப். 30
உதவித் தொகை வழங்கவுள்ளதாகத் தெரிவித்து எங்களை ஏமாற்றி அழைத்து வந்தனர். இவ்வாறு கிளிநொச்சியில் கோத்தபாயவின் பணிமனை திறப்பு விழாவில் கலந்துகொண்ட 23

## மொட்டுச் சின்னத்துக்கு ஆதரவு வழங்கமாட்டேன்

* ரணிலுடன் தனிப்பட்ட ரீதியில் பிரச்சினையில்லை
* சு.கவின் புண்ணியத்திலேயே மகிந்த இப்போதும் எம்.பி.

மைத்திரி திட்டவட்டமாக அறிவிப்பு

குருநாகல், செப். 30
தேசிய வேலைத்திட்டமொன்று முன்வைக்கப்பட்டால் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கோத்தாவுக்கு ஆதரவளிக்கலாம். ஆனால், தாமரை மொட்டு சின்னத்துக்கு ஆதரவளிக்கவே முடியாது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 23

### பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது

கொழும்பு, செப். 30
இலங்கை நிர்வாக சேவை சங்கம் தனது தொழிற்சங்க நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானித்துள்ளது.
அமைச்சரவை உபகுழுவுடன் இன்று 04

### சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிப்பும் முடிவுக்கு வருகிறது

யாழ்ப்பாணம், செப். 30
முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பிக்குவின் உடலை தகனம் 04

## நீதிமன்றத் தீர்ப்பை மீறியவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுங்கள்

மைத்திரிக்கு சம்பந்தன் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 30
நீராவியடிப் பிள்ளையார் ஆலய சம்பவம் தொடர்பில் முறையான சுயாதீனமான விசாரணைகள் இடம்பெறாத பட்சத்தில், தொடர்ந்தும் இத்தகைய விதிவிலக்கு கலாசார நிலமை தொடர்வதை ஊக்கப்படுத்துவதாக அமையும். அதே வேளை நாட்டுக்கும் எல்லா மக்களுக்கும் மிகப் பாரதூரமான விளைவுகளை உள்நாட்டிலும் பன்னாட்டு 23

பொலிஸார், பிக்குகளுக்கு எதிராக

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்கிறது கூட்டமைப்பு

முல்லைத்தீவு, செப். 30
முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் பிக்குவின் உடலை தகனம் செய்ய வேண்டாம் என்று மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டபோதும் பொலிஸாரின் பாதுகாப்புடன் நீதிமன்றக் கட்டளையை மீறி ஆலய தீர்த்தக் குளத்தின் அருகே பிக்குவின் உடல் எரி 04

# நல்வாழ்வு அருளும் நவராத்திரி



'நவம்' என்றால் ஒன்பது என்று பொருள். ஒன்பது நாள்கள் பராசக்தியின் ஒன்பது விதமான அம்சங்கள் கொண்ட ஒன்பது தேவியரை வழிபடும் பண்டிகைதான் நவராத்திரி. பெண்மைக்கு முக்கியத்துவம் தந்து, 'தீமையை அழிக்கும் வலிமை கொண்டது பெண் சக்தி' என்று உலகத்தாரை உணரவைத்த மகாசக்தி பொருந்திய பெண் தெய்வத்தின் போர் வரலாறுதான் இந்த நவராத்திரி விழாவின் அடிப்படை.

புராணங்களின்படி தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் பெருங்கொடுமைகள் புரிந்தவன் மகிஷன் என்னும் அசுரன். எருமை தலை கொண்டதால் மகிஷன் என்று பெயர் பெற்றார். இவனை அழிக்க மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் தங்களின் சக்திகளில் இருந்து தோற்றுவித்த மகாசக்தி, தொடர்ந்து ஒன்பது நாள்கள் இரவு பகலாக அவனை எதிர்த்துப் போராடி பத்தாம் நாள் அவனை வெற்றி கொண்டு மகிஷாசுரமர்த்தினியாக அருள்புரிந்த நிகழ்வே நவராத்திரியாக கொண்டாடப்படுகிறது.

இந்த நவராத்திரி விழாவானது, புரட்டாசி மாதத்தின் வளர்பிறை பிரதமை திதியில் தொடங்கி ஒன்பது நாள்கள் விரதங்கள், இரவு நேர பூசை வழிபாடுகளோடு நடைபெறும். பத்தாம் திதியான அம்பிகை, அசுரனை வெற்றிகொண்ட தசமி திதியுடன் இந்த விழா நிறைவு பெறும்.

எம்மால் கொண்டாடப்படும் ஒவ்வொரு பண்டிகைகளின் பின்னணியிலும், மகத்தான காரணம் ஒன்றை நம் ஆன்மிகம் வைத்திருக்கும். அதன்படி நவராத்திரி விழாவும் அதன் நாயகிகளான துர்க்காதேவி, மகாலட்சுமி, சரஸ்வதி ஆகிய சக்திகளை முன்னிறுத்தி சக்தியின்றி இயங்காத வாழ்வின் சத்தியத்தை நமக்கு புரியவைக்கிறது.

ஒன்பது நாள்கள் கொண்டாடப்படும் இதன் முதல் மூன்று நாள்கள் வணங்கப்படும் துர்க்காதேவி, இச்சாசக்தியாக எமக்குள் மறைந்திருக்கும் தீய எண்ணங்களை அழித்து நல்ல மனிதனாகும் வல்லமையை அருள்கிறாள். அடுத்து வரும் மூன்று நாள்கள் மனித வாழ்வுக்குத் தேவையான எல்லா செல்வங்களையும் தந்து எம்மை கவலைகள் அற்ற முழு மனிதனாக்கும் கிரியாசக்தியாக அன்னை மகாலட்சுமி வணங்கப்படுகிறாள். கடைசி மூன்று நாள்கள் மனித வாழ்வின் அனைத்தும் உணர்ந்து ஞானம் பெற்று மோட்சம் அடைய வழிகாட்டும் ஞானசக்தியான சரஸ்வதியை வணங்கி இம்மை வாழ்விலேயே நற்பேறு பெறுகிறோம்.

மனங்களின் வேறுபாடுகளை களைந்து அனைவரும் ஒன்றுகூடி மகிழும் நவராத்திரியில், நவதேவியரை வழிபட்டு நல்வளங்கள் பெறுவோம்.

# பிள்ளையாரை வீட்டில் வைத்து வழிபடும் முறைகள்



இந்து மதத்தின் முழுமுதற் கடவுள் என்றால் அது விநாயகர்தான். மகிழ்ச்சியையும், வெற்றியையும் வழங்கும் கடவுளான பிள்ளையார் தன்னை வழிபடுபவர்களுக்கு அதிர்ஷ்டத்தையும் வழங்குகிறது. எம் வாழ்வில் தடைகள் ஏற்படும் போதெல்லாம் நம்மை காப்பாற்ற அங்கு பிள்ளையார் இருப்பார். அதனால்தான் எந்தச் செயலையும் தொடங்குவதற்கு முன் அந்த செயல் வெற்றிகரமாக முடிய பிள்ளையாரை வழிபட்டு தொடங்குகிறோம். பிள்ளையாரை வீட்டில் வைத்து வழிபடும்போது அவரை எப்படி வழிபட வேண்டும், எங்கு வைத்து வழிபட வேண்டும் என்று பலருக்கும் தெரிவதில்லை. வாஸ்து சாஸ்திரத்தின் படி பிள்ளையார் சிலையை எந்த இடத்தில் வைத்து எப்படி வழிபட வேண்டும் என்று பார்க்கலாம்.

- **முதல் விதி**: உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி, அமைதி மற்றும் செழிப்பு வேண்டுமென்று விரும்பினால் உங்கள் இல்லத்தில் வெள்ளை பிள்ளையாரை வைத்து வழிபட வேண்டும். இல்லையெனில் வெள்ளை பிள்ளையாரின் படத்தை வீட்டில் வைத்து வழிபடலாம்.

- **இரண்டாம் விதி**: ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் தனிப்பட்ட முன்னேற்றம் என்பது மிகவும் அவசியமானதாகும். எனவே சுய முன்னேற்றம் வேண்டுமென்று விரும்புபவர்கள் தங்கள் வீட்டில் குங்கும நிற பிள்ளையாரை வைத்து வழிபடுவது நல்லது.

- **மூன்றாம் விதி**: பொதுவாக அமர்ந்திருக்கும் நிலையில் இருக்கும் பிள்ளையாரை வழிபடுவது நல்லது. நின்று கொண்டிருக்கும் பிள்ளையாரை விட அமர்ந்திருக்கும் பிள்ளையார் அதிக பலன்களை வழங்கக்கூடியவர். இந்த பிள்ளையார் அதிர்ஷ்டத்தையும், மகிழ்ச்சியையும் வழங்கும்.

- **நான்காம் விதி**: விநாயகரின் துதிக்கை அவரது இடது கை பக்கமாக இருக்கும் சிலையை வீட்டில் வைத்து வழிபட வேண்டும். விநாயகரின் துதிக்கை வலது பக்கமாக இருக்கும் விநாயகரை வழிபடுவது மிகவும் கடினமாகும்.

- **ஐந்தாம் விதி**: உங்கள் வீட்டில் வைத்து வழிபட அமர்ந்திருக்கும் விநாயகர் சிலையை வைக்க வேண்டும். அதுவே பணியிடங்களில் வைத்து வழிபட நிற்கும் நிலையில் இருக்கும் பிள்ளையார் சிலையை வைக்க வேண்டும். இது ஆற்றலையும், உற்சாகத்தையும் வழங்கும்.

- **ஆறாம் விதி**: விநாயகர் சிலையை வீட்டில் வைத்து வழிபடும் போது அதனுடன் எலி மற்றும் கொழுக்கட்டை ஆகியவையும் கண்டிப்பாக இருக்க வேண்டும். இது மிகவும்



# இன்றைய நாள்

**மேடம்:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். விலகி சென்றவரும் அன்பு பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். கூடுதல் பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு சமரச பேச்சு வார்த்தையில் சுமுக தீர்வு ஏற்படும்.

**இடபம்:** முக்கியமான செயலை பிறரிடம் ஒப்படைக்கக் கூடாது. நிதானித்து பேசுவதால் நற்பெயரை பாதுகாக்கலாம். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.

**மிதுனம்:** செயல்களில் நிதானம் பின்பற்ற வேண்டும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை உடனடியாக சரி செய்வது அவசியம். ஆடம்பர பணச்செலவு தவிர்க்கவும்.

**கடகம்:** மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். திட்டமிட்ட பணிகளை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை முன்னேற்றம் பெறும். உபரி பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய பணிகள் மனதில் சஞ்சலம் ஏற்படுத்தும். நற்பெயரை பாதுகாக்க சிலரது உதவியை நாடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். குடும்ப தேவைக்கான பணச்செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** உங்களை அவமதித்தவர் தன்குறை உணர்ந்து அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். ஆதாய பணவரவு கிடைக்கும். வீட்டு உபயோக பொருள் வாங்குவீர்கள்.

**துலாம்:** சுய லாபத்திற்காக சிலர் உங்களை புகழ்ந்து பேசுவர். தொழிலில் இலக்கை அடைய கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுக்கு பயன்படும்.

**விருச்சிகம்:** வெகுநாள் தாமதமான செயலில் புதிய திருப்பம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். நிலுவை பணம் வசூலாகும். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.


**தனுசு:** இஷ்ட தெய்வத்தின் அனுக்கிரகம் துணை நின்று உதவும். சிறு செயலையும் நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து மனநிறைவை தரும்.

**மகரம்:** மன உறுதியுடன் பணிபுரிவதால் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பிறர் பார்வையில் தெரியும்படி அதிக பணம் செலவு செய்ய வேண்டாம்.

**கும்பம்:** உங்கள் மனதில் குழப்பமான சிந்தனை உருவாகி சிரமம் தரலாம். நண்பரின் மதிநுட்பம் நிறைந்த ஆலோசனை நம்பிக்கை தரும்.

**மீனம்:** செயல்களின் நல்ல மாற்றம் பின்பற்றுவீர்கள். சூழ்நிலை அனுகூலமாக அமைந்து உதவும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

# காட்டில் போட்டி!




மிருகங்கள் எல்லாம், காட்டில் பொங் கல் விழாக் கொண்டாட முடிவு செய்தன. சர்க்கரைப் பொங்கல், வெண்சாதப் பொங்கல், வடை, பாயசம் என, உணவு வகைகள் தயாராயின.

விருந்துக்கு முன், விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. ஏதாவது ஒரு போட்டியில் பங்கேற்று, பரிசு வாங்க முயன்றது ஆமை.

ஓட்டப் பந்தயத்தில், புள்ளிமான் வென்றதாக அறிவித்தது நடுவர் நரி.

"இப்போதான் துவங்கியது அதற்குள்ளாகவா ஓட்டப்பந்தயம் முடிந்தது" என்றபடி ஆமை, அதிர்ச்சியுடன் பார்க்க, 'கலகல' என, நகைத்தன கூடியி ருந்த மிருகங்கள். மிகவும் கேலியாக,"ஆமையாரே பழைய நினைப்போ உமக்கு."என்று கூத்தாடியது முயல். ஒரு காலத்தில், ஓட்டப் பந்தயத்தில் தன்னை வென்ற ஆமைக்கு, தக்க பாடம் புகட்டும் ஆத்திரத்தில் இருந்தது.

"அடுத்து குதிக்கும் போட்டி" என்ற அறிவிப்பை கேட்டு, அதிலும் கலந்து கொண்டது ஆமை. முன்னங் கால்களை ஊன்றி, தாவ முயன்ற போது, 'கிர்' என்று ஒரு சுற்று சுற்றி யது. அடுத்த வினாடி, குட்டிக் கரணம் போட்டு, நிலைக்கு வந்தது.

"குதிப்பதிலும் முயல் தான் முதல் பரிசு" என்றது நரி. ஆமையைச் சூழ்ந்த மிருகங்கள், அதன் தோல்வியை கேலி செய்து, கும்மாளமிட்டன.

"நான் நிதானமாக நடப்பதால் எந்த போட்டியிலும் கலந்துகொள்ளக்கூடாதா" என, பரிதாமாக கேட்டது ஆமை. கேட்டு முடிப்பதற்குள் அடுத்த போட்டியை அறிவித்தது நரி.

"ஒளிந்து கொள்ளும் போட்டி இது கண்களை மூடி, காணும் வரை எண்ணுவேன். அதற்குள் எங்கே யாவது ஒளிந்து கொள்ளுங்கள். பின் கண்டுபிடிக்க வருவேன்; நான் கடைசியாக கண்டுபிடிப்பவரே, வெற்றி பெற்றவர்" என்றது நரி.

ஓட்டப்பந்தயம், நீளம் குதித்தல், நீச்சல் என, தோல்வியால் துவண்டு போயிருந்த ஆமை, "நான் இந்தப் பாறைக்கு அருகில் ஒளிஞ்சுருக்கி றேன்" என, நகர்ந்தது. அதன் துரதிர்ஷ்டம். மரத்தின் வேர் தடுக்கி, மல்லாந்து விழுந்தது ஆமை. நல்ல வேளை, கேலி செய்ய அருகில் யாரும் இல்லை; எல்லாரும் ஒளிந்து கொள்ள போய் விட்டன. வழக்கமாக உதவிக்கு வரும் ஆந்தையும் இல்லை. முயன்று நிமிரப் பார்த்தது ஆமை; சுற்றி சுழன்றதே தவிர, நிமிரவே முடியவில்லை. பல முறை சுழன்றதால் களைத்து, தலை, கால்களு டன், வாலையும் ஓட்டுக்குள் இழுத்தபடி அசையா மல் கிடந்தது. அது பாறைத் துண்டு போல இருந் தது. சற்றைக்கெல்லாம்,"அதோ முயல் இதோ மான் . அதோ ஆந்தை" என, ஒளிந்திருந்தவற்றை கண்டுபிடித்த மகிழ்ச்சியில் குதூகலித்தது நரி.

"ஆமாம்ஆமையை எங்கே காணோம்." என, எல்லா மிருகங்களும் தேடின. கண்டுபிடிக்கவே முடியவில்லை. வேறுவழியின்றி,"ஆமையாரே நீர் தான் வெற்றி பெற்றீர் மறைவிடத்திலிருந்து, வெளியே வாரும்." என்றது நரி.

அது காதில் விழுந்தும், ஆமையால் நிமிர முடியவில்லை; ஆமையின் அசைவை பார்த்த முயல், "இதோ, மல்லாந்து கிடக்கிறார் ஆமையார்." என்று, துள்ளிக்குதித்து ஆர்ப்பரித்தது.

உடனே, அது நிமிர்ந்த நிலைக்கு வர உதவிய நரி, "ஒளிந்து கொள்ளும் விளையாட்டுப் போட்டியில், முதல் பரிசு ஆமையாருக்கே" என்று பாராட்டியது.

ஆசைப்பட்டது போல் பரிசு வாங்கிய ஆமை மகிழ்ந்தது. ஆமை எப்படி முயற்சி செய்து பரிசு பெற்றது பார்த்தீர்களா... அதேபோல, முயற்சி செய்தால் நிச்சயமாக வெற்றி உண்டு!

## மரண அறிவித்தல்

### செல்வி சுசிலாதேவி அருளானந்தம்

(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளரும் கலைப்பீடத்தின் தலைவியும்)



நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட செல்வி சுசிலாதேவி அருளானந்தம் (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளரும் கலைப்பீடத்தின் தலைவியும்) நேற்று (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வி இராதா அருளானந் தம் (யாழ்.தாதியர் கல்லூரி சிரேஷ்ட போதனாசிரியர்), செல்வி மனோரதி அருளானந்தம் (ஓய்வூதிய குடும்பநல உத்தியோகத்தர்), திருமதி படைவீரசிங்கம் தவமணிதேவி, திருமதி இராஜகோபால் கமலா , அற்புதராசா, கலாநாதன், கனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற தபோதினி கௌரிராம் (France), சுமித்திரன் (Italy), சுபோதினி (India), உதயகுமார் (France), ஹரிகரன், லோகீ சன், நிதீசன், தனுசன் ஆகியோரின் அள்வு கடந்த பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

C11360(16/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

நுணாவில் மேற்கு, நுணாவில்.

077 690 9672, 021 227 0183

## பணிப்புறக்கணிப்பு...

இடம்பெறும் கலந்துரையாடல் மற்றும் அரச தலைவர் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் பணிகள் இடம்பெறவிருப்பதால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சங்கத்தின் தலைவர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

ஆள்பதிவுத் திணைக்களம், குடிவரவு, குடியகல்வு திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் உள்ளிட்ட நிர்வாக சேவைப் பணிகள் வழமை போன்று இடம்பெறும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். அமைச்சரவை துணை க்குழுவுடன் இன்று இடம்பெறும் பேச்சு மற்றும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் தமது சம்பள முரண்பாடு தொடர்பில் சாதகமான பெறுபேறு கிட்டும் என்றும் அரச நிர்வாக சேவை சங்கம் எதிர்பார்ப்பதாக பிரசாத் சந்திரகீர்த்தி மேலும் தெரிவித்தார்.

(ஒ,5)

## நீதிமன்ற அவமதிப்பு...

யூட்டப்பட்டபோது, நீதிமன்றின் உத்தரவை நடைமுறைப்படுத்தாத பொலிஸார் மீதும் இரு பிக்குகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்காந்தராசா, அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார்.

பிக்குவின் உடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் எரியூட்ட எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றம் கடந்த 23ஆம் திகதி, ஆலயத்துக்கு அருகில் எரியூட்டத் தடைவிதித்தது. அத்துடன் மன்றின் கட்டளையை நடைமுறைப்படுத்துமாறு முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரைப் பணித்திருந்தது.

இருப்பினும் நீதிமன்ற உத்தரவு மிதிக்கப்பட்டு பிக்குவின் உடல் எரியூட்டப்பட்டது.

நீதிமன்றத் தீர்ப்பை மீறிய பிக்குகள் இருவர் மற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கும் எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றில் நாளை மறுதினம் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தெரியவருகின்றது.

(ஒ,5,105)

## சட்டத்தரணிகளின்...

செய்வது தொடர்பாக நீதிமன்றின் உத்தரவை அவமதித்தமை மற்றும் சட்டத்தரணிகள் தாக்கப்பட்டமை தொடர்பாக சட்டத்தரணிகள் கடந்த 23ஆம் திகதி தொடக்கம் மேற்கொண்டுவந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்றுடன் கைவிடப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்க செயலர் சட்டத்தரணி எஸ்.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் தப்புல டீ லிவேரா, மூத்த சட்டத்தரணியும் வன்னி வலய சட்டத்தரணிகள் சங்க உபதலைவருமான அன்ரன் புனிதநாயகத்தை தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்த விவகாரம் தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்படும் என்று வழங்கிய வாக்குறுதியையடுத்தும் பிரதி சொலிஸ்டர் ஜெனரல் குமார் ரட்ணம், முல்லைத்தீவு சட்டதரணிகள் சங்க செயலர் சட்டதரணி எஸ். கெங்காதரனை தொடர்புகொண்டு வழங்கிய உறுதிமொழியையடுத்தும் இதுவரை நாள்களாக நடைபெற்று வந்த சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிப்பை கைவிட்டு இன்று முதல் கடமைகளில் ஈடுபடவிருப்பதாகவும் தெரிவித்தார். (ஒ,5)

## சஜித்துக்கு...

தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலரால் அனுப்பட்ட கடிதம் எனக்கு கிடைத்துள்ளது. எனினும், ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கும் முடிவை நாம் எடுக்கவில்லை. அந்தக் கட்சிக்கு எதிராக பலமானதொரு கூட்டணியை கட்டியெழுப்பும் நிலைப்பாட்டிலேயே இன்னும் இருந்து வருகின்றோம். இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருநாகலையில் நேற்று நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின்கீழ் நாட்டுக்கு ஏற்படவிருந்த பெரிய பாதிப்புக்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே தடுத்து நிறுத்தினார். அதுமட்டுமல்ல நாட்டுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வெளிநாட்டு ஒப்பந்தங்களையும் நிராகரித்தார்.

நெருக்கடியான சூழ்நிலையிலும் ஒரே நாளில் ஐந்து அரசிதழ் அறிவித்தல்களைவிடுத்து மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக்கினார். ஆனால், மறுநாளே சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்து மகிந்த அணியினர் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டனர்.

இதனால் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி சவாலுக்குட்படுத்தப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் என்ற அடிப்படையில் மகிந்த அமரவீர அனுப்பிய கடிதத்தால்தான் மகிந்த தரப்பினர் தப்பினார்கள். இதனை மறந்துவிட்டு இன்று சிலர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையை மகிந்த அணியினருக்குப் பெறமுடியாமல்போனதற்கு அரச தலைவர் பொறுப்பாக முடியாது. அதனை அவர்கள்தான் செய்திருக்க வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாமல் எவராலும் அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற முடியாது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பலமானதொரு சக்தியைக் கட்டியெழுப்பும் நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். எனவே, எமது விட்டுக்கொடுப்புகளைப் பல வீனமாகக் கருத வேண்டாம் - என்றார். (ஒ,5,22)

## அரச தலைவர்...

வித்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நேற்றுப் பிற்பகல் நடந்த தேசிய மக்கள் இயக்கத்தின் மாநாட்டிலேயே, அந்த அமைப்பின் சார்பில் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக, ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அறிவித்தார். இலங்கைக்கு மாற்றுச் சக்தி தேவைப்படுவதாகவும், அந்த மாற்று சக்தியாக தாம் இருக்க முடியும் என்று நம்புவதாகவும், ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

கடந்த மாதம் இராணுவத்தில் இருந்து விலகிய ஜெனரல் சேனநாயக்க, தேர்தலில் போட்டியிடுமாறு தம்மை மக்கள் குழுவினர் அழைத்தனர் என்றும் குறிப்பிட்டார். இராணுவத்தில் இருந்து நாட்டுக்கு நல்ல சேவையாற்றியதாக தாம் உணருவதாகவும், ஆனாலும், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேவை இருப்பதாகவும், அவர் கூறினார். அரசியல் நாட்டைப் பாழாக்கி விட்டதாகவும், எனவே நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த சுதந்திரமான சக்தி ஒன்று அவசியம் என்றும் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார். தமது குழுவில் அரசியல்வாதிகளுக்கு இடமில்லை என்றும், கல்வியியலாளர்களும் ஏனைய நிபுணர்களுமே இருப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்புப் படைகளிலும், பொலிஸ் துறையிலும் அரசியல்வாதிகளின் தலையீடு இருப்பதாகவும், அந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றும் ஜெனரல் சேனநாயக்க தெரிவித்தார்.

நிலையான பொருளாதாரத்தை உறுதி செய்வதும், நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதும் தனது கொள்கையாக இருக்கும் என்றும், அரசமைப்புச் சீர்திருத்தங்களும் தொடரப்படும் என்றும், புதிய அரசமைப்புக்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விரைவில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்றும் ஜெனரல் சேனநாயக்க கூறினார். (ஒ,5)

## கோத்தாவின்...

கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச தலைவர் தேர்தலில் முக்கிய போட்டியாளர்களில் ஒருவராகக் கருதப்படும் கோத்தபாய ராஜபக்சவுக்கு இலங்கைக் குடியுரிமை எப்போதாவது சட்டபூர்வமாக வழங்கப்பட்டதா என்பது பற்றிய கேள்விகளை எழுப்பும் வகையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்துடன், கோத்தபாய ராஜபக்ச இலங்கைக் குடிமகன் என்று கூறுவதைத் தடுக்கும் வகையில், இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்குமாறும், கோரப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்த மனுவை சிவில் செயற்பாட்டாளர்களான காமினி வியாங்கொட, பேராசிரியர் சந்ரகுப்த தெனுவர ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு தொடர்பாக, கோத்தபாய ராஜபக்சவின் சட்ட விவகாரங்களைக் கையாளும் குழுவின் தலைவரான சட்டவாளர் அலி சப்ரியிடம் கேள்வி எழுப்பியபோது, தற்போது இதுகுறித்து எந்தக் கருத்தையும் தெரிவிக்க முடியாது எனக் கூறியுள்ளார். எனினும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் இதுதொடர்பான அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது என்பதை, ராஜபக்சவின் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல உறுதிப்படுத்தியுள்ளார். (ஒ,5)

## பெரும்பான்மைச்...

அரச தலைவர் தேர்தலில் அவர்கள் உடன்படிக்கைகள் ஏதுமின்றிக் களமிறங்க முனைப்புக் காட்டுகின்றனர். இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தல் நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள கோத்தபாய ராஜபக்ச, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள சஜித் பிரேமதாச ஆகியோர் சிறுபான்மைக் கட்சிகளுடன் இனப் பிரச்சினை தொடர்பான எவ்வித உடன்படிக்கையும் செய்யத் தயாரில்லை என்று தெரிவித்துள்ள நிலையில் இந்த விடயத்தில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும்பான்மைச் சமூகத்தினரில் எனக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் வழங்கிய பல்வேறு வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் உள்ளன. இது வரலாறு. 70 வருடங்களாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் நாடாளுமன்றத்தில் கிழித்து எறியப்பட்ட சம்பவங்களும், எரியூட்டப்பட்ட சம்பவங்களும்கூட இடம்பெற்றுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சிதான் இந்தத் தீர்வுத் திட்டங்களை எரித்தது, கிழித்தது.

தற்போது அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள சஜித் பிரேமதாசவின் தகப்பனார், ரணசிங்க பிரேமதாச அரச தலைவராக இருந்தகாலத்தில்கூட எவ்விதத் தீர்வுத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை. புலிகளே தீர்வைக் குழப்பினர், தமிழர் தரப்பே தீர்வைக் குழப்பியது என்றும்கூட அவ்வப்போது தெரிவிக்கின்றனர். இது தவறு. பெரும்பான்மைக் கட்சிகளில் ஒன்றுடன் நாம் உடன்படிக்கையொன்றை வெற்றிகரமாக முன்னெடுக்கும்போது மற்றைய கட்சி அதைக் குழப்பியமை பதிவுகள். எனவே நடைபெறப்போகும் அரச தலைவர் தேர்தலில் எழுத்து மூல உடன்படிக்கையானது அவசியமாகிறது - என்றார்.

(ம)

## இரட்டைக்குடியுரிமை...

கோத்தபாய ராஜபக்சவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பாக சிவில் சமூக செயற்பாட்டாளர்களான காமினி வியாங்கொட, சந்ரகுப்த தெனுவெர ஆகியோர் செய்த முறைப்பாடு குறித்து நடத்தப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பான பி அறிக்கையிலேயே குற்ற விசாரணைத் திணைக்களம் இவ்வாறு கூறியுள்ளது.

கோத்தபாய ராஜபக்சவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பான ஆவணங்களை கேட்டு குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திடம் எழுத்து மூலம் தாம் கோரியிருந்ததாகவும், அதற்கு குடிவரவுத் திணைக்களம் அனுப்பியுள்ள பதிலில், 2005ஆம் ஆண்டு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்ட காலத்தில் பாதுகாப்பு அமைச்சே அந்த விவகாரத்தை கையாண்டது என்றும், தம்மிடம் எந்த ஆவணங்களும் இல்லை என்று கூறியுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சிடம் ஆவணங்களைக் கோரி எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் இரட்டைக் குடியுரிமை தொடர்பான விடயங்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தாலேயே கையாளப்பட்டுள்ளன என்றும், கோரப்பட்ட ஆவணங்கள் எதுவும் பாதுகாப்பு அமைச்சிடம் இல்லை என்றும் பதிலளித்துள்ளது.

இந்த நிலையில், கோத்தபாய ராஜபக்சவின் இரட்டைக் குடியுரிமை சான்றிதழ் தொடர்பான ஆவணங்களை குற்ற விசாரணைத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு, குடிவரவுத் திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவு பிறப்பிக்கு மாறு கொழும்பு தலைமை நீதிவானிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கோரப்பட்டது. இதையடுத்து, கொழும்பு தலைமை நீதிவான் லங்கா ஜெயரத்ன, குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கோரிக்கையை ஏற்று, குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு குடிவரவுத் திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

(ஒ,5)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 28.09.2019 | வெற்றி வாரம் 2631 | வர்ணம் இளம் நீலம்
கடகம்
வெற்றி இலக்கங்கள் 03 11 18 40
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 068, 022/=
29.09.2019ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 29.09.2019 | வெற்றி வாரம் 2632 | வர்ணம் ஊதா
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 16 30 37 40
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,191.184/=
30.09.2019ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

O 27 28 51 53
2 0 8 2 3
சீட்டிழுப்பு வாரம் 500 | திகதி 2019 செப் 27 | பச்சை | வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.141,508,233/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1048
சீட்டிழுப்பு திகதி 2019.09.28 சனிக்கிழமை
J 10 24 53 75
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 746
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.09.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,598,275/-
வெற்றி இலக்கங்கள் 02 43 51 71 Z
விசேட வெற்றி இல. 1419

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மீசாலை வடக்கு ஞான வைரவர் ஆலய பரிபாலன சபைத் தலைவராக விளங்கும்

உயர்திரு **கனகசபாபதி கனகேஸ்வரன்**

அவர்கள் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளமையை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் ஞானவைரவர் அருள்பெற்று மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று விளங்க வாழ்த்துகின்றோம்.

C32514(16

**மீசாலை வடக்கு ஞானவைரவர் ஆலய பரிபாலனசபை, திருவிழா உபயகாரர்கள், வழிபடுவோர் சபையினர்,ஆலய பூசகர்**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கமலவேணி யோகநாதன்**

தோற்றம் 26 . 05 . 1946 | மறைவு 24 . 09 . 2017

பூமி சுமக்கும் முன்னே நம்மை சுமந்தீர்கள் நீங்கள்
எங்கள் குணம் அறியும் முன்பே எங்களை நேசித்த இதயம்
நீங்கள் அம்மா!

எம்மைவிட்டு சென்று ஆண்டு இரண்டு மறைந்துவிட்டது
ஆனால் உங்கள் நினைவுகள் எம்மோடு என்றும் வாழ்கின்றது அம்மா!

**இணுவில் மேற்கு, இணுவில்.**
**என்றும் உங்கள் நினைவோடு துயருறும் குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சரவணபவன்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)



தோற்றம் 16.10.1938 | மறைவு 29.09.2019

அல்வாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சரவணபவன் அவர்கள் நேற்று (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் தம்பதியினரின் அன்பு மகனும், நேசம்மாவின் பாசமிகு கணவரும், பாலசரஸ்வதி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை - பருத்தித்துறை) காலஞ்சென்ற பாலபாரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C11359(16717)


**அல்வாய் கிழக்கு, அல்வாய். தகவல்: குடும்பத்தினர்.**

---

ஓம் விராட்விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

### சின்னவன் ஆச்சாரி சுந்தரம்



தோற்றம் 24.01.1940 | மறைவு 29.09.2019

வண்ணார்பண்ணை சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் **114/ 1**, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் ஆச்சாரி சுந்தரம் நேற்று (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் ஆச்சாரி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் பார்வதி, இராமகிருஷ்ணன் லெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2019) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் (114/1, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காககோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : மருமக்கள், பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்**

---

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்கள்



தோற்றம் 04 . 01 . 1948 | மறைவு 27 . 09 . 2019

### வைத்திலிங்கம் தியாகராஜா

கொக்குவில் மேற்கு சொர்ணவடலியை வசிப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் தியாகராஜா கடந்த (27.09.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பொன்னாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் உதயகுமாரியின் அன்புக்கணவரும் இரத்தினம், பரமேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் பஞ்சரத்தினம், நடராஜா, நவரத்தினம், நாகேஸ்வரி, செல்வராணி, காலஞ்சென்ற சந்திரகலா, ஆகியோரின் மைத்துனரும் ஜானகி **(Holland)**, ஜெயராணி (கொழும்பு), துசியந்தன் **(Elephant House)**, கஜேந்திரன் (HNB Finance Ltd -Jaffna) ஆகியோரின் அன்புத்தந்தையும் நிர்மலா **(Holland)**, சிவாயினி **(Holland)**, சிவராஜா **(Holland)**, சாந்தன் **(Aircom Travels Col- Jaffna)**, தனுசியா, ரஞ்சினி, ஆகியோரின் மாமனாரும் சிவனேசன் **(Holland)**, கோபிரஞ்சன் **(London)** ஆகியோரின் சித்தப்பாவும் சஞ்சு, சரணிகா, விஸ்ணு, அபிசியா, அபினாஸ், அக்ஷயா, ஜானுஜன், லிந்துஜன், அஞ்ஞனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**துஷியந்தன் - 076 961 8246, கஜேந்திரன் - 0777 244 962**

---

# தீவுகளும், கடல் சார் உயிரினங்களும்!



உலகில் உள்ள தீவுகளை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். ஒன்று கண்டம் சார்ந்தது; மற்றது சமுத்திரம் சார்ந்தது.

கடலில் இருந்து துருத்தி கொண்டிருக்கும் கண்டங்களின் அடுக்கில், அங்கம் வகிப்பது தான் கண்டம் சார்ந்த தீவுகள் எனப்படும். உதாரணத்துக்கு, பிரிட்டன் போன்ற நாடு ஒரு காலத்தில் அருகில் இருக்கும் கண்டத்தோடு மிக கீழ்நிலை நிலத்தால் இணைக்கப்பட்டு இருந்தது. அப்பொழுதிலிருந்து உயரும் கடல் நீர் மட்டத்தால் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளானது. மடகாஸ்கர் போன்றவை, கண்டங்களின் அடுக்கின் பகுதிகளாக இருந்து உடைந்து, தனியாக நகர்ந்து, பின் இப்போது ஆழ் கடல் நீரால் சூழப்பட்டுள்ளது.


கடல் சார்ந்த தீவுகள் வெடிப்பினால் உருவானது. பொதுவாக, சொல்வதென்றால் இவை கண்ட(ம்) தீவுகளைவிட வயதில் சிறியவை.

அதோடு இவை கடலின் வெகு தொலைவான இடத்தில் அமைந்திருக்கும். கலாபேகாஸ் மற்றும் ஹவாய் தீவுகளை இவற்றுக்கு உதாரணமாக சொல்லலாம்.

கடல் சார் தீவுகளுக்கென தாவரங்கள் உண்டு. அந்தத் தாவரங்களை தேடிவரும் விலங்குகள் அங்கு நிலவும் சூழலுக்கு ஏற்றபடி தங்களை மாற்றிக் கொள்கின்றன. நீர் மற்றும் நிலம் என இரண்டிலும் வாழும் சில விலங்கு கூட்டங்கள், இது போன்ற கடல் சார் தீவுகளில் காணப்படுவதில்லை. காரணம், அவைகளால் கடலில் தீவு நோக்கி பயணிக்கும் பயணத்தை மேற்கொள்ள முடிவதில்லை.

## மரண அறிவித்தல்கள்

தோற்றம் 14 . 02 . 1954



மறைவு 29 . 09 . 2019

# நடராஜா சிறிவிஜயா

**(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)**

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சிறிவிஜயா (இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்) நேற்று 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா இராசம்மா தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு கமலாதேவி தம்பதிகளின் மருமகனும் யோகேஸ்வரியின் (இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்) கணவரும் தாரணி (அவுஸ்திரேலியா), கிருஷ்ணகுமார் (UK), பாமினி ஆகியோரின் அன்புத்தந்தையும் துவாரகன், பிரதீபா, ரதீசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அர்ஜுன், மித்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் சிறீகாந்தா, வசந்தா, சாந்தா, சிறீமகேஸ்வரி, சோமாவதி, அனுசா, ஆகியோரின் அன்புச் சகோதரனும் நீலாம்பிகை, கணேசராசா, தவராசா, சிவராசா, அருட்கந்தராசா, பாஸ்கரன், நாகேஸ்வரி சின்னத்தம்பி, குலேந்திரன், தனலட்சுமி அன்னலிங்கம், விஜயாபவன், காலஞ்சென்ற இராஜேஸ்வரி செல்வேந்திரன், மகேந்திரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (3.10.2019) வியாழக்கிழமை மு.ப 9.00 மணிக்கு கந்தர்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

260/3, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 021 222 6592, 077 517 6158

## மரண அறிவித்தல்கள்




# கந்தப்பு தாமோதரம்பிள்ளை

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு தாமோதரம்பிள்ளை நேற்று (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெகசோதியின் பாசமிகு கணவரும் வேலாயுதபிள்ளையின் (கனடா) சகோதரனும் ரவிராஜ் (நோர்வே), வசந்தி (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெகராஜ் ஆகியோரின் அன்புத்தந்தையும் சுனித்தா, (நோர்வே) செல்வக் குமரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அக்ஷயா (நோர்வே), அபிலாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் பாலசிங்கம், மலர்சோதி, தங்கராசா, பவளம், ரவிந்திரராசா, காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நவாலி ஆரியம்பிட்டி இந்துமயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 665 5636 - வசந்தி (மகள்) தகவல்: குடும்பத்தினர்



# முருகேசு பத்மநாதன்

நெடுந்தீவுமேற்கு 4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பத்மநாதன் கடந்த 27.09.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மற்றும் பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் குணவதியின் அன்புக் கணவரும் திருமாறன், அனுஜா, வனஜா, ரகுமாறன், தனுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் செந்தூரன், சிவகுமார் ஆகியோரின் மாமனாரும் ஹசினியின் பேரனும் தனலட்சுமி, கனகலட்சுமி, சண்முகநாதன், பேரின்பநாதன், புஸ்பராணி, பத்மசோதி, தில்லையம்பலம், யோகநாதன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ஆனந்தன் - பத்மாவதி, சயீலாவதி, சுகுணாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4.00 மணியளவில் நெடுந்தீவு தெற்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுந்தீவு சாரபிட்டி
4 ஆம் வட்டாரம். தகவல்: குடும்பத்தினர்

தோற்றம் 01 . 08 . 1940



மறைவு 29 . 09 . 2019

# நாகம்பிள்ளை கந்தசாமி

**(S.N.K புடைவைக்கடை)**

அச்சுவேலி தெற்கு, உலவிக்குள பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு பழைய தபாற்கந்தோர் அருகாமை பருத்தித்துறை வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்பிள்ளை கந்தசாமி நேற்று (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகம்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற புஸ்பரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கிருஷ்ணர், சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் புரமேஸ்வரி காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனரும் சியாமளா, பிரேமிளா, சிவகரன் (இத்தாலி), நிர்மளா, ஐங்கரன் ஆகியோரின் பெரியப்பாவும் காலஞ்சென்றவர்களான கண்மணி, சிவசுப்பிரமணியம் (மரக்கூட்டுத்தாபனம், வவுனியா), செல்வராணி (வவுனியா) மற்றும் சற்குணநாயகி, மனோரஞ்சிதமலர், சிவஞானேஸ்வரன் (இ.போ.ச - வவுனியா), கலைமகள், காலஞ்சென்ற கலைரூபன் மற்றும் கலைரூபி, கலைமோகனராஜ் (தி.ப.கு . இ.போ.ச - கோண்டாவில்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

077 276 0123 தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
24 . 09 . 1948



ஆண்டவன் அடியில்
28 . 09 . 2019

### திருமதி இரத்தினேஸ்வரி திருவாதிரை

காரைநகர். வலந்தலை. இலகடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் K.K.S வீதி. கோபால் ஒழுங்கை மற்றும் கொழும்பு -13. புதுச்செட்டித்தெருவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினேஸ்வரி திருவாதிரை 28.09.2019 சனிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.இராமலிங்கம் திருவாதிரை (ஸ்ரீ திருப்பதி (PVT)LTD, COL -11) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தில்லையம்பலம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராமலிங்கம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் செந்தமிழ்ச்செல்வி. சாந்தி. இராஜராஜன். ரஞ்ஜினி. இராமகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத்தாயாரும் உருத்திரசிங்கம். சண்முகலிங்கம். ஸ்ரீஷயானா. கலாதரன். சுமித்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் நிவேதிகா. இராசாராம். யசோதை. துளசி. பானுமதி. பரசுராம். சங்கவி. கிரிஷான். விஷ்ணு. சத்யஸ்ருதி. சக்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு. தேவராசா. மற்றும் விஸ்வலிங்கம்.காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் நாகேஸ்வரி. இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம். ஞானாம்பிகை மற்றும் வடிவழகாம்பாள் காலஞ்சென்றவர்களான தவமணிதேவி. மகேசன் மற்றும் கணேசமூர்த்தி. நாகரத்தினம். பரமேஸ்வரி. புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் லோகாம்பிகை. காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் குகதாசன் ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 70. 1/1. Marigold Apt. புதுச்செட்டித்தெரு. கொழும்பு - 13 அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 01.10.2019 செவ்வாய்க்கிழமை காலை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.70, 1/1, புதுச்செட்டித்தெரு,**
**கொழும்பு - 13.**
(CS 24066) (14.17)

**தகவல் : பிள்ளைகள், குடும்பத்தினர்.**

**0777 486113/0777 233981/ 0771 396435**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்மணி மாரிமுத்து (பொன்னார் ரீச்சர்)
**(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை)**



வட்டு.தென்மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மணி மாரிமுத்து 27.09.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம். சபாபதிப்பிள்ளை. சுந்தரலிங்கம் ஆகியோரின் சகோதரியும். காலஞ் சென்றவர்களான சிவயோகம். சிவபாக்கியம். கனகேஸ்வரி. அன்னம்மா. மங்கையற்கரசி ஆகியோரின் மைத்துனியும். வடிவேலுவின் அன்புத் தாயாரும் குணவதனியின் அன்பு மாமியாரும். வினோதனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள். தகனக்கிரியைகள் என்பன இன்று (30.09.2019) திங்கட்கிழமை St.John's Norway (Cemetory & Ceramatorium Toranto, Canada இல் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆலோலை வீதி,**
**வட்டு தென்.மேற்கு, வட்டுக்கோட்டை.** (CS/28377) (11,17)

**தகவல் : மருமக்கள்**
**077 233 4150**

### திருமதி தவனேஸ்வரி மகேந்திரன்



தேவசூரி வீதி. குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவனேஸ்வரி மகேந்திரன் 28.09.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - சாரதாதேவி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் புனிதவதி தம்பதிகளின் மருமகளும் துரைசிங்கம் மகேந்திரன் இன் பாசமிகு மனைவியும் தயாளினி. முருகதாஸ். கிருஷ்ணதாஸ். ஹரிஸ்தாஸ் ஆகியோரின் சகோதரியும் ஆனந்தன். கனகலிங்கம். சிவகுமார் மற்றும் காலஞ்சென்ற சிவகவி ஆகியோரின் மைத்துனியும் அபிதா. லவீனா. வைஷ்ணவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2019) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குரும்பசிட்டி கிழக்கு,**
**தெல்லிப்பழை.**

**தகவல் : கணவர் (மகேந்திரன்)**

**077 711 0737**

"நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை: வரப்போகின்றதையே நாடித் தேடுகின்றோம்" (எபி 13 : 14)

## மரண அறிவித்தல்

# செபஸ்ரியான் எட்வேட்

**(அவுட் போட் மோட்டார் மெக்கானிக்)**



பிறப்பு 25.04.1949 | மகிமைக்குள் 24.09.2019

குருநகர் பற்றிக்ஸ் றோட்டைப் பிறப்பிடமாகவும் 2ஆம் குறுக்கு மணியம்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அனைவராலும் மாமா என அழைக்கப்படும் செபஸ்ரியான் எட்வேட் (அவுட் போட் மோட்டார் மெக்கானிக்) 24.09.2019 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியான் - அனந்தாசி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கிறகோரி, மமான்ஸ் மற்றும் அக்கினேஸ் காலஞ்சென்றவர்களான ஞானமணி, விக்ரர், யோசை மற்றும் பிலோமினா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யோசப், சேவியர், றெஜினோல்ட் மார்க், காலஞ்சென்றவர்களான காணிக்கை, ஞானம் மற்றும் இன்பம் (நோர்வே), மரியா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 01.10.2019 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு 2 ஆம் குறுக்கு மணியம் தோட்டத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, வசந்தபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2 ஆம் குறுக்குத்தெரு,**
**மணியம்தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: உறவினர்கள்.**

(cs.28384(13.17)

## நாஹா மருத்துவ நிலையம்

கை, கால் நீட்ட முடியாமல் செயலிழத்தல், பாரிசவாதம், தீராதபுண்கள், குழந்தைகளை துடிக்கச் செய்யும் கிரந்திபுண்கள், கடுமையான ஆஸ்மா, மரணப்படுக்கைநோய் - சிறப்பு சிகிச்சை

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு)
மானிப்பாய்.

தொடர்பு : 077 321 2740

## SANNITHY INSTITUTE

கலட்டி வீதி (நாச்சிமார் கோயிலடி)
யாழ்ப்பாணம்.

ஆங்கில, சிங்கள வகுப்புக்கள்
அடிப்படையிலிருந்து
கற்பிக்கப்படுகிறது.

சந்நிதி மனோ 077 767 7773

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ் கல்லூரிக்கு அண்மையில் மகளிர் விடுதிக்குப் பின்புறம் 3 படுக்கையறையுடன் கூடிய வீடு 3 பரப்பு காணியில் வட்டுக்கோட்டையில் விற்பனைக்கு உண்டு. **077 102 0520** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

கொற்றாவத்தை சந்திராங்கூடல் ஞான வைரவர் ஆலயத்தின் கட்டட நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பிற்கான பரிசு பெறுவோர் விபரம்

**1ஆம் பரிசு ஆர். உஷாகரன் யாழ்ப்பாணம்**
**2ஆம் பரிசு எஸ். கிரிதரன் ஆனைக்கோட்டை**
**3ஆம் பரிசு க. ஜனகன் கொற்றாவத்தை**

**10ஆறுதல் பரிசு:**

ச.டெனிசன்(பொலிகண்டி), கனித்திரா(யாழ்ப்பாணம்), நி.ரியான்சி(கொற்றாவத்தை), சுதிப்ஸன் (சமரபாகு), நிரூபரன்(வதிரி), ராஜ்குமார் (மல்லாகம்), ந.பிரபாகரன்(யாழ்ப்பாணம்), ச.அபிஷன்(கொற்றாவத்தை), ரா.அனித்தராசா(சமரபாகு), சிவானந்தம் (கொற்றாவத்தை) C32515(16/17)

**077 539 7288**

## வேலையாள்கள் தேவை

கடை ஒன்றில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை ஆண் / பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
(வயது 18-25) **077 159 5826**

# நினைவஞ்சலி

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 22 | 10 |
| 05 | 09 |
| 1959 | 2019 |



## அமரர். அனுசூயா ரவிராஜ

திதி : ஆவணி மாத பூர்வபக்க துவாதசி

எம் குடும்பத்தின் அணையாத் தீபமான அமரர் திருமதி அனுசூயா ரவிராஜ் அவர்கள் அரனின் தாளிணைகள் சேர்ந்த செய்தி அறிந்து தொலை நகல், தொலைபேசி, மின்னஞ்சல், மற்றும் சமூகவலையத்தளங்கள் மூலமும், பத்திரிகை வழியாகவும், அனுதாபமும், ஆறுதலும் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரிகைகளில் நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அமரர் நோயுற்றிருந்த வேளையில் சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிமார்கள், சுகாதார ஊழியர்கள் ஆகியோருக்கும் பிரார்த்தனை செய்தோருக்கும், பல வழிகளில் உதவிபுரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எம் இதய பூர்வமான நன்றிகள்

Dr. ரவிராஜ், Dr. யோகவினாயகன், திரு. இரமணா குடும்பத்தினர்

இல 33/1, அருத்துசா லேன், வெள்ளவத்தை
கொழும்பு 6

## இந்தியா வீபூதி விற்பனைக்கு

எம்மிடமிருந்து இந்தியா வீபூதி **1 Kg** பக்கற்றினை மொத்தமாகவும் **(RS-100)** சில்லறையாகவும் **(RS-110)** பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் வீபூதி, சந்தனம், குங்குமம் **25g** பக்கற் முதல் **1Kg** பக்கற் வரை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்)
**021 222 2567**

## மரண அறிவித்தல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 20 | 27 |
| 01 | 09 |
| 1950 | 2019 |

### திருமதி குமாரநாயகம் ரூபவதி

யாழ்ப்பாணம் நல்லூரை பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. குமாரநாயகம் ரூபவதி அவர்கள் கடந்த (27.09.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி முத்துசண்முகம் சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற குமாரநாயகத்தின் அன்பு மனைவியும் மீனாட்சிரத்தினம், கோபாலகிருஷ்ணன், நாகேஷ்வரி முத்துகிருஷ்ணகுமார் ஆகியோரின் சகோதரியும் ஜெசிந்தா, பிரசாந் (அக்ரம்), கண்ணன் ஆகியோரின் அன்பு தாயாரும் மதிராஜ், சஹிமா, ஆஷா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (01.10.2019) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் 20, சட்டநாதர் வீதி நல்லூர் முகவரியில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: பிள்ளைகள், சகோதர சகோதரிகள்
நாகேஷ்வரி-சாந்தகுமாரன்,
சண்முகம் முத்துக்கிருஷ்ணகுமார்.

077 202 9104
077 725 2091

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 | 29 |
| 02 | 09 |
| 1932 | 2019 |



CS28387(16/17)

### சின்னத்தம்பி செல்லம்மா

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லம்மா அவர்கள் நேற்று (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
076 607 9705, 077 411 1253

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ 10.08.1953
விண் நெகிழ 10.10.2018

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும்,
லண்டனை
வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள்
அன்புத் தெய்வம்

### அமரர் செல்லப்பா மகேந்திரன்

திதி:- பூர்வபக்ஷ துதிவை
30.09.2019 திங்கட்கிழமை

வாழ்க்கைப் பாதையில் வழிகாட்டி –
நாங்கள்
வாழ்வை வென்று விட்டோமென்று
விண்ணோடு நீங்கள் சென்று விட்டீர்கள்!!!
ஏங்கித் தவித்து இன்று
ஓராண்டை கடந்து விட்டோம்
நித்தமும் எம் நினைவில் நின்று கொண்டு
நிஜத்தில் இறைவனுடன் கலந்திட்ட – உங்கள்
ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீரை –
மலர்களாய்
காணிக்கையாக்கி பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

என்றும் நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (CS/28242)(11.17)

## 31ஆம் நாள் இதய அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 31 |
| 04 | 08 |
| 1934 | 2019 |



### அமரர் நாகமுத்து இராசரத்தினம்



அன்பொடு அறிவைத் தந்து
அகிலம் போற்ற நற் குடும்பத்தைத் தந்து
எண்மராய் எம்மை நல் உலகிற் கீந்து
எம்மை விட்டு இறையடி சேர்ந்த
எம்மினிய தந்தைக்கு எம் மனம் நெகிழ்ந்த
**இதய அஞ்சலிகள்**

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.09.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (cs 28383) (13.17)

இணுவில் தெற்கு, பாலாவோடை. குடும்பத்தினர்.



# அந்தக் காலத்து மலாலா

துப்பாக்கியால் சுடப்பட்டு உயிர் பிழைத்த தற்குப் பிறகு, மலாலாவுக்குக் கிடைக்காத மதிப்புக்களே இல்லை. அமைதிக்கான நோபல் பரிந்துரையில் ஆரம்பித்து அன்னை தெரேசா விருது, 'ரைம்ஸ்' பத்திரிகையின் 'செல்வாக்கு மிக்க 100 பேர்' பட்டியலில் கிடைத்த இடம் என்று நீண்டு கொண்டே போகின்றன. மலாலாவின் அசாத்தியமான துணிச்சலும் பெண் கல்வி, சமாதானம் ஆகியவற்றில் அவரின் ஈடுபாடும் உண்மையிலேயே உத்வேகமளிக்கக் கூடியவை. ஆனாலும், அவர் மீது தொடர்ச்சியாகச் சூட்டப்படும் புகழ் மாலைகள் ஒருவித அசௌகரிய உணர்வை ஏற்படுத்துகின்றன. தீவிரப் பழமைவாத சமூகமாகவும் தந்தைவழி சமூகமாகவும் பொதுவாகக் கருதப்படும் பஷ்டூன் சமூகத்தைச் சேர்ந்தவர் மலாலா. ஆப்கன், பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் இந்தச் சமூகம் பரந்திருக்கிறது. மலாலாவின் குரல்தான் இந்தச் சமூகத்திலேயே தனித்த் குரல் என்றும் மலாலா கிட்டத்தட்ட முன்னுதாரணமற்ற நிகழ்வு என்றும் கருதுவதும்தான் அந்த அசௌகரிய உணர்வுக்குக் காரணம். தீவிரவாதிகள் பதுங்குமிடங்கள், பழங்குடியினருக்கு இடையேயான குருதிக் களரி, மத வெறியர்கள், பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் இப்படி எல்லாம் குத்தப்படும் முத்திரைகள் அந்தப் பிரதேசத்துக்கு எவ்வளவு தீங்கு விளைவிக்கின்றன என்பதை மிகச் சிலரே புரிந்துகொள்வார்கள். மேற்குறிப்பிட்ட முத்திரைகள் எல்லாம் முழுக்கவும் பொய் இல்லை என்றாலும், அவையெல்லாம் பன்முகத்தன்மை கொண்ட சமூகமொன்றின் ஒரு பக்கம்தான்.

> தீவிரப் பழமைவாத சமூகமாகவும் தந்தைவழி சமூகமாகவும் பொதுவாகக் கருதப்படும் பஷ்டூன் சமூகத்தைச் சேர்ந்தவர் மலாலா. ஆப்கன், பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் இந்தச் சமூகம் பரந்திருக்கிறது. மலாலாவின் குரல்தான் இந்தச் சமூகத்திலேயே தனித்த குரல் என்றும் மலாலா கிட்டத்தட்ட முன்னுதாரணமற்ற நிகழ்வு என்றும் கருதுவதும்தான் அந்த அசௌகரிய உணர்வுக்குக் காரணம்.

உண்மை என்னவென்றால், ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான காந்திய அகிம்சைவழிப் போராட்டத்தின் குறிப்பிடத்தக்க ஒரு மையமாக இந்தப் பிரதேசம் பல ஆண்டுகளாக இருந்தது. அது மட்டுமல்லாமல் ஆன்மிகக் கவிதைகள், சூபி இசை போன்றவற்றுக்கும் எழுச்சிமிகு பெண் தலைவர்களுக்கும் தாயகமாக இந்தப் பிரதேசம் இருந்திருக்கிறது.

**மைவாண்ட் மலாலா**

இந்தப் பிரதேசத்தில் நிகழ்ந்த முதல் மேற்கத்திய காலனிய ஊடுருவல்பற்றி எழுதும்போது மைவாண்ட் கிராமத்து மலாலாயைத் தவிர்க்க இயலாது. இந்த மைவாண்ட் மலாலாயின் நினைவாகத்தான் எம் காலத்து மலாலாவுக்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. பஷ்டூன் சமூகத்தைச் சேர்ந்தவர்களிடம் மலாலா என்று சொன்னால் பெண் கல்விக்காக இப்போது போராடும் இளம் பெண் மலாலா என்று அவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் ஆங்கில-ஆப்கன் போரின்போது முக்கியமான தருணத்தில் போரின் போக்கையே தீரத்துடன் மாற்றிய இளம் பெண் மலாலாய் என்பவரைச் சொல்கிறோம் என்று அவர்கள் நினைத்துக் கொள்வார்கள். மைவாண்ட் போரைப் பற்றிய ஆங்கிலேயர் தரப்பு ஆவணங்களில் மலாலாய் என்ற பெயர் காணோம். ஆனால், ஆப்கன் தரப்பு வரலாறு சொல்வது உண்மையாக இருக்கும் பட்சத்தில், 19ஆம் நூற்றாண்டில் நடந்த போரொன்றில் ஆங்கிலேய சாம்ராஜ்ஜியம் சந்தித்த மாபெரும் தோல்விக்குக் காரணம் மலாலாயின் தீரச்செயல்கள்தான்.

பஷ்டூன் சமூகத்தின் வாய்வழிச் செய்திகளின்படி, 1880 ஜூலை 27ஆம் திகதி நடந்தது இது: பிரிட்டிஷ் படையைவிடப் பெரிய படையை பஷ்டூன் வீரர்கள் திரட்டி வந்திருப்பதைப் பார்த்த ஆங்கிலேயர்கள், தங்களிடமுள்ள பீரங்கிகளைக் கொண்டு ஆப்கன் வீரர்களைத் துரத்தியடித்தனர். மலாலாய் போரில் இறங்கிய பிறகுதான் போக்கு மாறியது. சரமாரியாக வந்து விழும் பீரங்கிக் குண்டுகளால் தன் வருங்காலக் கணவன் வீழ்த்தப் பட்டதைக் கண்ட மலாலாய், கீழே கிடக்கும் கொடியொன்றைப் பற்றிக்கொண்டு (அவளுடைய பர்தாவின் முகத்திரை என்றும் சிலர் சொல்வதுண்டு) இந்தக் கவிதையை உச்சாடனம் செய்கிறாள்:

'என் அன்பே, மைவாண்ட் போர்
உன்னை மகத்துவப்படுத்துமெனில்,
என் கூந்தல் கற்றைகளைக் கொண்டு
உனக்கொரு சவப்பெட்டி செய்வேன்.'

கடைசியில் பார்த்தால், மைவாண்ட் போரில் மகத்துவப்படுத்தப்பட்டது மலாலாய்தான், புனித யாத்திரைகள் மேற்கொள்ளப்படும் தலமாக அவளுடைய கல்லறை மாறியிருக்கிறது.

**ஒரு மலாலா மட்டும் அல்ல...**

மலாலாய் மட்டுமல்ல... ஆங்கில - ஆப்கன் போரைப் பற்றி பிரிட்டிஷ் தரப்பு ஆவணங்கள் நீங்கலாக, பஷ்டூன் தரப்பு ஆவணங்களைப் படிக்கப் படிக்க அந்த வரலாற்றில் மிக முக்கியமான பெண்கள் இருந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் உல்முல்க் சுல்தான் (ஆப்கன் அதிபர் ஹமித் கர்சாய்க்கு நேரடி மூதாதை) வாபா பேகம் என்ற பஷ்டூன் இனத்துப் பெண்ணை மணந்திருந்தார். அரசின் உண்மையான அதிகார மையமாக பேகம்தான் இருந்தார் என்பது அக்காலத்தைச் சேர்ந்த பலரின் கருத்து. பேகத்தின் நிதானத்தையும் தீரத்தையும் பிரிட்டிஷ்காரர்களே பாராட்டி இருக்கிறார்களாம்.

ஆட்சியிலிருந்து ஷா தூக்கியெறியப்பட்டு, காஷ்மீரில் சிறைவைக்கப்பட்டார். ஷாவின் விடுதலைக்காக, உலகிலேயே மிகப் பெரிய வைரமான கோஹினூர் வைரத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்து உரிய ஏற்பாடுகளைச் செய்தவர் பேகம்தான்.

இரண்டாம் முறையாக, லாகூரில் ஷா சிறைவைக்கப்பட்டபோதும் அவரை விடுவிப்பதில் பேகம்தான் முக்கியப் பங்குவகித்தார். சுரங்கப்பாதை, பிறகு கழிவு நீர்ப்பாதை, படகு, வரிசையாகக் குதிரைகள் என்று ஷா தப்பிப்பதற்கு விரிவான ஒரு திட்டம், பேகத்தின் உதவியோடு செயற்படுத்தப்பட்டது.

தனக்குத் தஞ்சமளிக்கும்படியாக ஆங்கிலேயரை வசப்படுத்தினார்.

அதன் மூலம் அவரது குடும்பத்தி னர் காபூலில் அரியணை ஏறுவதற்கான அடித் தளத்தை அமைத்துக் கொடுத்தார். ஆப்கன் அரியணையில் ஷாவை மறுபடியும் ஆங்கிலேயர்கள் அமர்த்துவதற்குச் சற்று முன்னால், 1838 ஆம் ஆண்டில் பேகம் காலமானார். ஷாவின் ஆட்சியும் நீடிக்கவில்லை. கடைசியில், நிகழ்ந்த சீரழிவுகளுக் கெல்லாம் காரணம், மதியூகம்மிக்க பேகம் இல்லாமல் போனதுதான் என்று பலரும் கருதுகின்றனர்.

**காந்தியம் செழித்த பஷ்டூன்**

பஷ்டூன் பிரதேசத்தின் அமைதி வழிப் போராட்ட மரபு நெடியது. 1930ஆம் ஆண்டுகளில், பிரிட்டிஷ் இராஜ்ஜியத்துக்கு எதிரான காந்தியப் போராட்டத்தின் மையமாக வடமேற்கு எல்லைப் பகுதி உருவெடுத்ததை யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். பஷ்டூன் இனத் தலைவர் பாட்ஷா கானின் தலைமையில் இந்தப் போராட்டம் நடந்தது. குதாய் கித்மத்கார்கள் (கடவுளின் ஊழியர்கள்) என்ற முக்கியமான இயக்கத்தினர் காந்திய சேவை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் காந்தி பின்பற்றிய கட்டுக்கோப்பான அகிம்சை வழி, ஒத்துழையாமை போன்றவற்றால் ஊக்கம்பெற்றனர். அதுமட்டுமல்லாமல், பழமைவாத உலமாக்களின் ஆதிக்கத்தை அகற்றும் விதத்தில் கல்விப் பணிகளிலும் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். பிரிவினைக்குப் பிந்தைய பாகிஸ்தானின் வரலாற்றிலிருந்தே குதாய் கித்மத்கார்கள் துடைத்தெறியப்பட்டுவிட்டதை இந்த இயக்கத்தின் வரலாற்றாசிரியரான முக்குலிகா பானர்ஜி எமக்குக் காட்டுகிறார்.

முஸ்லிம்கள் என்றாலே, குறிப்பாக பஷ்டூன் இனத்தவர் என்றாலே அவர்கள் தீவிரவாதிகள்தான் என்று நாம் தவறான எண்ணம் கொண்டிருப்பதால்தான் மேற்குறிப்பிட்ட வரலாறு எம்மை ஆச்சரியத்துக்கு உள்ளாக்குகிறது. 1980ஆம் ஆண்டுகளில் சோவியத் ஒன்றியத்தை ஏதிர்ப்பதற்காக அமெரிக்காவும் சவூதியும் பாகிஸ்தானின் உளவுத் துறையும் பெஷாவரில் மத அடிப்படைவாதிகளுக்கு ஆயுதங்களை அளித்தன. அப்போதிலிருந்தே ஆப்கன் பாகிஸ்தான் எல்லையின் இரு பகுதிகளும் கடுமையான வன்முறைகளாலும் பெண்கள் மீதான ஒடுக்குமுறையாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுவந்திருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மைதான்.

ஆனால், இந்தத் தீவிரவாதத்துக்கு முக்கிய எதிர்ப்பாளர்கள் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அதே பஷ்டூன் மக்கள்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எழுத்துமூல வாக்குறுதி பெறப்படுதல் அவசியம்

அரசதலைவர் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பெரும்பான்மைக் கட்சிகள் தத்தமது வேட்பாளர்களை அறிவித்துள்ளன. சுதந்திரக் கட்சி, கூட்டணி அமைப்பதா அல்லது தனித்துக் களமிறங்குவதா என்பது தொடர்பில் மதில்மேல் பூனையாக உள்ளது. பெரிதும் எதிர்பார்க்கப்படும் வேட்பாளர்களான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கோத்தபாய ராஜபக்ச, ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாச ஆகியோர் தேர்தல் பரப்புரைகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

தமது வெற்றிகளுக்காகக் கட்சிகளின் ஆதரவைக்கோரி இருவரும் ஒவ்வொரு அரசியல் கட்சிகளையும் அவற்றின்பிரதிநிதிகளையும்சந்திக்கவுள்ளனர். இந்தச்சந்திப்பின்போது எவ்வித எழுத்துமூல வாக்குறுதிகளையும் வழங்கப்போவதில்லை என்று இருவருமே அறிவித்துள்ளனர். எந்தக் கட்சியை ஆதரிப்பது என்றாலும், தமிழ்த்தேசியப்பிரச்சினையைத்தீர்த்துவைப்பதற்கான எழுத்துமூலஉத்தரவாதத்தைவேட்பாளர்களிடமிருந்து பெறவேண்டும்என்றுதமிழர்தரப்புவலியுறுத்திவரும் நிலையில், முதன்மை வேட்பாளர்கள் இருவரும் அதற்கு இம்மியளவும் தயாரில்லை என்பதும், பிடிகொடுக்காமல்அவர்கள்வெளிப்படுத்தியுள்ளகருத்துக்களும் இங்கு நோக்கத்தக்கவையாக அமைகின்றன.

வாய்மொழி வாக்குறுதிகளை இன்றல்ல நேற்றல்ல மூன்றுதசாப்தங்களுக்கு மேலாகதமிழர்தரப்புகண்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்டுள்ளஎந்தவாக்குறுதியும் இதுவரையில்நிறைவேற்றப்படவில்லை. அவற்றுக்கு உதாரணமாக, அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் பௌத்த மயமாக்கலை தவிர்ப்பது, கல்முனை பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவது என்று எண்ணற்ற விடயங்களை இவ்வாறு அடுக்கிக்கொண்டே செல்லலாம். இந்த நிலையில், நடைபெறப்போகும் அரசதலைவர்தேர்தலைதமக்குரிய மிகச்சிறந்தவாய்ப்பாகப் பயன்படுத்த தமிழர்கள் சிந்திக்கவே செய்வார்கள். அதற்காக எழுத்துமூல உத்தரவாதத்தை அவர்கள் கேட்பதில் தவறொன்றும் இல்லை.

மகிந்தஅரசாலும்,ரணில்அரசாலும்முன்னெடுக்கப்பட்ட சப்பைக் கட்டுக்களுக்கு ஒரு விதத்தில் பாத்திரவாளிகளாக இருந்த வேட்பாளர்கள்இருவரும் இந்தவிடயத்தைச்சிந்தித்துப்பார்க்கவேண்டும். வெறுமனேவாக்கு வங்கிகளைக் கருத்தில்கொண்டு எழுச்சிக் கதைகளையும், கடும்போக்கு பரப்புரைகளையும் முன்னெடுப்பதைத் தவிர்த்து, தமிழர் தரப்புடன் இணைந்து ஆக்கபூர்வமாக நகர்வுகளில் ஈடுபட வேண்டும்.

'எனக்கு எவரும் பாடம் கற்றுத்தரத் தேவையில்லை. நான் பல்வேறு பாடங்களைக் கற்றுள்ளேன். இந்த நாட்டை ஆட்சிசெய்தரணசிங்கபிரேமதாசவின்மகனே நான்' என்று தெரிவித்துள்ள அமைச்சர்சஜித்பிரேமதாச, ரணசிங்கபிரேமதாசவேதமிழர்தாயகத்தின்இனப்பிரச்சினைக்கான தீர்க்கமான நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்கவில்லை என்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வு எதையும் ரணசிங்க பிரேமதாச கொண்டிருந்தால், இந்த நாட்டில் மூன்று தசாப்தமாக உள்நாட்டுப்போர் இடம்பெற்றிருக்காது. 1990களிலேயே தமிழர், சிங்களவர் என்ற இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு வெளிப்பட்டிருக்கும்என்றபுரிதல்அவருக்குவரவேண்டும். ஆக, எழுத்துமூல வாக்குறுதியைக் கேட்பதில் தவறில்லை. கேள்வி என்னவெனில், எழுத்துமூல உத்தரவாதம் தந்தாலும் அதை வேட்பாளர்கள் நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்.

# சவால்கள் நிறைந்தது அரச தலைவர் தேர்தல்

■ இந்துமதி

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது உறுதியாகிவிட்டது. பலரும் எதிர்பார்த்ததைப் போன்று சஜித் பிரேமதாசவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் பச்சைக்கொடி காட்டிவிட்டார். இதை அவர் தானாகவே எடுத்த ஒரு முடிவெனக் கூறமுடியாது. இந்த முடிவை எடுப்பதற்கு அவர் தள்ளப்பட்டு விட்டார் என்று கூறுவதுதான் பொருத்தமானது. ஆனாலும் மிகச் சரியானதொரு முடிவை எடுத்ததற்காக ரணிலைப் பாராட்டியே தீரவேண்டும்.

இதேவேளை, கோத்தபாய ராஜபக்ச நவம்பர் 16ஆம் திகதி அரச தலைவராகத் தாமே தெரிவு செய்யப்படவுள்ளதாக உறுதியாகக் கூறியுள்ளார். அது மட்டுமல்லாது தமது அண்ணனான மகிந்தவைத் தாம் தலைமை அமைச்சராக நியமிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் இது சாத்தியமாகுமா என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

சஜித் பிரேமதாச அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதில் வேறெந்தத் தடைகளும் இருக்கப்போவதில்லை. ஆனால் ரணில் விக்கிரம சிங்கவின் ஆதரவாளர்கள் அவரை முழுமையாக ஏற்றுக்கொள்வார்களா என்பதில்தான் சந்தேகம் நிலவுகின்றது. ரணில்தான் இதைச் சரிசெய்ய வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அவர் தமது பொறுப்புக்களிலிருந்து விலகி நிற்க முடியாது.

### கோத்தாவின் பிம்பம் வெளிப்பட்ட முல்லை - நீராவியடி விவகாரம்

நீராவியடிச் சம்பவத்தை நியாயப்படுத்திக் கூறியதன் மூலமாக கோத்தபாய தமது உண்மையான பிம்பத்தை வெளிக்காட்டி விட்டார்.



பௌத்த பிக்குகள் எந்தத் தவற்றைப் புரிந்தாலும் அதை அவர் ஆதரிக்கவே செய்வார் என்பதும் வெளியாகிவிட்டது. இந்த நிலையில் அவர் அரச தலைவர் கதிரையில் அமர்ந்து கொண்டால் என்ன நடக்கும் என்பது சிதம்பர இரகசியமல்ல. கடந்த தடவை தமிழர்கள் தம்மைக் கைவிட்டதை மகிந்த மறந்திருக்க மாட்டார். இம்முறையும் தமிழர்கள் தமக்கு ஆதரவு வழங்கமாட்டார்கள் என்பதும் அவருக்கு நன்கு தெரியும். இதனால் தமிழர்கள் மீது அவர் வெறுப்பைக் காட்டவே செய்வார். அதுமட்டுமல்ல அரச தலைவரால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் குழப்பத்தின்போது அவருக்கு வழங்கப்பட்ட தலைமை அமைச்சர் பதவி பறிக்கப்படுவதற்கும் தமிழர்களே காரணமாக இருந்துள்ளனர். இவை யாவும் சிந்திக்க வேண்டிய விடயங்களாகும். நாடு போகின்ற போக்கைப் பார்த்தால் எந்தவொரு தென்பகுதி அரசியல்வாதியும் பௌத்த சங்கங்களையும் பிக்குகளையும் பகைத்துக்கொண்டு அரசியல் செய்ய முடியாது என்பது தெளிவாகத் தெரிகின்றது. அந்த அளவுக்கு பௌத்த மதவாதிகளின் கரங்கள் ஓங்கி உயர்ந்து காணப்படுகின்றன.

### அரசதலைவர் தேர்தலை தமிழர்கள் எதிர்பார்க்கலாமா?

புதிய அரசதலைவர் தொடர்பாகத் தமிழர்கள் நம்பிக்கைகொள்ள வேண்டிய தேவை இல்லையென்றே கூறவேண்டும். ஏனென்றால் மேற்படி பதவிக்கு உரியவர் வழக்கமான கூட்டத்தில் இருந்துதான் தெரிவுசெய்யப்படப்போகிறார். அவர் இந்த நாட்டின் வழக்கமான சம்பிரதாயங்களை மீறவே முடியாது. ஆகவே தேர்தல் வேளைகளில் வழங்கப்படுகின்ற இனிப்பான



வாக்குறுதிகளைத் தமிழர்கள் ஒரு காதால் கேட்டு மறு காதால் வெளியே விடுவதே புத்திசாலித்தனமானது.

தமக்கு ஏற்பட்டுள்ள தடைகள் யாவற்றையும் தாண்டி கோத்தபாய தேர்தலில் போட்டியிட்டால் சஜித் பிரேமதாச அவருக்குச் சவாலாகவே இருப்பார் என்பது திண்ணமாகும். வழக்கமாகப் போலன்றி கிராமப்புற வாக்குகளும் அவருக்குக் கிடைக்குமென்பதை உறுதியாகக் கூற முடியும். ஏழை மக்களுக்கு அவர் ஏற்படுத்திக்கொடுத்துள்ள வீட்டுத்திட்டங்களால் அந்த மக்களின் ஆதரவை அவர் சம்பாதித்துள்ளார். அதுமட்டுமல்லாது சிறுபான்மையின மக்களும் அவரை ஆதரிக்கவே செய்வார்கள்.

கோத்தபாய பாதுகாப்புச் செயலராக இருந்தபோது இடம்பெற்ற விடயங்களை நாட்டு மக்கள் மறந்துவிட்டார்களெனக் கூறிவிடமுடியாது. அவருக்கு எதிரான வழக்குகளும் நிலுவையில் உள்ளன. அதுமட்டுமல்லாது அவருக்கு எதிரான இன்னும் சில விவகாரங்களுக்கு முடிவு காண வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. கடந்த கால அனுபவங்களைப் பார்க்கும்போது சிறுபான்மையின மக்களின் ஆதரவு இவருக்குக் கிடைக்குமா? என்பது சந்தேகமாக உள்ளது. எது எப்படி இருப்பினும் இடம்பெறப்போகும் அரச தலைவர் தேர்தல் சவால்கள் நிறைந்ததாக இருக்கப்போவது திண்ணமாகும்.



# ரஷ்யா ரஷ்யர்களுக்கே!

ஒரு பெரிய கலவர களேபரத்துக்குத்தயாராகிக்கொண்டிருக்கிறது ரஷ்யா. கடந்த சில மாதங்களாகவே அங்கே 'ரஷ்யா ரஷ்யர்களுக்கே' என்னும் கோஷம் தீவிரமடை யத் தொடங்கியது. என்னடா விவகாரம் என்று கேட்டால், உள்நாட்டில்ரஷ்யர்களுக்குவேலை வாய்ப்பே இல்லை. எல்லா நிறுவனங்களும் பிற தேசத்தவருக்கே வேலை கொடுத்துக்கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள்.

**தீவிரமடைகிறது போராட்டங்கள்**

இதுதான்பிரச்சினையா? என்றால், இது ஒரு பெரிய பிரச்சினை ஆகிக் கொண்டிருப்பதில்சந்தேகமில்லை. ஆனால் இதனைக் காட்டிலும் வலுவான காரணங்களை வைத்துக் கொண்டு ரஷ்யர்கள் இப்போது கோஷம்போட்டுக்கொண்டு வீதிக்கு இறங்கியிருக்கிறார்கள்.

அரசுக்கு என்ன செய்வது என்று புரிய வில்லை. போராட்டக்காரர்களை அடக்குவது என்பது எளிய தொடக்கம். ஆனால் நாளுக்கு நாள் பல்வேறு நகரங்களில் கொடி பிடித்து ஊர்வலம் செல்லும் கூட்டம் பெரிதாகிக் கொண்டே இருப்பது தான்பெருங்கவலையாகிநிற்கிறது. பழைய சோவியத் ஒன்றியத்தில் இருந்து விலகிப்போன பல்வேறு குட்டி தேசங்களில் இருந்து உத்தியோக நிமித்தம் ரஷ்யாவுக்கு வந்து குடியிருப்போரும், இனக்குழு அடையாளத்துடன் தனித் தேசமாகப்பிரிந்துசென்றபோது இடம்பெயராமல் ரஷ்யாவிலேயே தங்கிவிட்டோரும்தான்ரஷ்யர்களின் இலக்கு. தங்கள் வேலைகளை அவர்கள் ஆக்கிரமித்துக்கொள்கிறார்கள். தங்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளைக் கிடைக்கவிடாமல் செய்துவிடுகிறார்கள். அத்துடன் தேசமெங்கும் தினசரி நடக்கும் பல கொலைச் சம்பவங்களுக்கு இந்த அயலான்களே காரணமாயிருக்கிறார்கள். ஒன்று, இரண்டு, மூன்று என்று தொடங்கி சம்பவ உதாரணங்களை எடுத்துப் போடுவதில் அவர்களுக்குப்பிரச்சினைஇல்லை. ஆனால் என்ன சொன்னாலும் அரசு தரப்பில் இதற்குச் சரியான பதில் இல்லாததுதான்கொதிப்படையச் செய்திருக்கிறது.

> ரஷ்யர்கள் வெளியேற்ற நினைக்கும் வெளிநாட்டவரின்எண்ணிக்கைகிட்டத்தட்ட ஒரு கோடியே பத்து லட்சம் பேர். எங்களை எப்படி வெளிநாட்டவர் என்று சொல்லலாம்? நாங்கள் பிறந்ததிலிருந்து இங்கேயே தானே இருக்கிறோம் என்கிறார்கள் மாற்று இனக் குழு மக்கள் பிரதிநிதிகள். அதுதான் உங்கள் இனத்தவர்கள் தனிநாடு வாங்கிக்கொண்டு பிரிந்து போய் விட்டார்களே, நீங்கள் எதற்காக இங்கேயே கடை விரிக்கி றீர்கள் என்பது ரஷ்யர்களின் கேள்வி.

ரஷ்யாவில் ஏகப்பட்ட இனக்குழுக்கள் உண்டு. அதிகாரபூர்வமாக185 இனக்குழுக்கள் இருப்பதாக ஒரு கணக்கு இருக்கிறது. ஆதி ரஷ்யர்கள், டாதர்கள், பாஷ்கிர்கள், செச்னியர்கள், அவார்கள், ஆர்மீனியன்கள், கசக்கியர்கள், டார்கின்கள் என்று தொடங்கி தேசமெங்கும் பரவிக்கிடக்கும் மக்களுக்கு இடையே பெரும்பஞ்சாயத்துகள்ஏதும்இதற்கு முன்வந்ததில்லை. பிரச்சினைஎன்றால் அது அரசிடமிருந்து வரும். ஒன்று ஏற்றுக்கொள்வார்கள், அல்லதுஎதிர்ப்பார்கள். தீர்வுகிடைக்கும் அல்லது சகித்துக்கொள்வார்கள். இதுதான் நடந்த சரித்திரம்.

தத்தமது இனத்தாருக்குத் தனித் தேசம் வேண்டும் என்று ஒரு கட்டத்தில் வாங்கிக்கொண்டு பிரிந்தும் சென்றார்கள்.

அப்படிப்போனவர்கள் ஏன் மொத்தமாகப் போகவில்லை என்பதுதான் ரஷ்யர்களின் இப்போதைய கேள்வி. ரஷ்யாவுக்குள் இருக்கும் அயல்தேசத்தவர்அத்தனைபேரும் மொத்தமாகவெளியேறவேண்டும் என்று கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஏழைமை ஆற்றவும் பட்டோம். இனி என்றும் பேச்சுக்கு வாரோம். முதலில் அவர்களை வெளியே அனுப்புகிறாயா? இல்லையா? இரண்டிலொரு பதில் வேண்டும்.

என்ன ஒரு பத்து பதினைந்தாயிரம் பேர் இருப்பார்களா? என்றால், பிரச்னையே அங்கேதான். ரஷ்யர்கள் வெளியேற்ற நினைக்கும் வெளிநாட்டவரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒருகோடியேபத்துலட்சம்பேர். எங்களை எப்படி வெளிநாட்டவர் என்று சொல்லலாம்? நாங்கள் பிறந்ததிலிருந்து இங்கேயேதானே இருக்கிறோம் என்கிறார்கள் மாற்று இனக்குழு மக்கள் பிரதிநிதிகள். அதுதான் உங்கள் இனத்தவர்கள் தனிநாடுவாங்கிக்கொண்டுபிரிந்து போய்விட்டார்களே, நீங்கள் எதற்காக இங்கேயே கடை விரிக்கி றீர்கள்? என்பதுரஷ்யர்களின் கேள்வி.

**என்று முடிவுக்கு வரும்**

இது இப்போதைக்குத் தீராது என்று தட்டிவிட்டு நகர்ந்து போய்விட முடியாத அளவுக்கு நாளொரு பேரணி, பொழுதொரு கடையடைப்பு, கலவரம் என்று ரஷ்யாவின் பல்வேறு முக்கியநகரங்கள்தினசரி தீபாவளி நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன.

வேலைவாய்ப்புபெரும்பிரச்சினையாக இருக்கும்சூழ்நிலையில்ரஷ்ய மக்களை இந்தப் போராட்டத்துக்குள் இழுக்கிற வேலை போராட்டக்காரர்களுக்குச்சுலபமாகவும் இருக்கிறது. தொழிற்சங்கங்கள், கல்லூரிகள், பெண்கள் அமைப்புகள் என்றுதேடித்தேடிப்போய்பரப்புரை செய்து போராட்டத்துக்குக் கூப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. போராட்டத்தின் அடுத்த கட்டம் மேலும் தீவிரமடைந்து அபாய எல்லையைத் தொடலாம் என்று உளவுத்துறை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். குறைந்த பட்சம் சிலநூறு கொலைகள் விழக் கூடுமென்றுஅச்சமூட்டியிருக்கிறார்கள். அதற்குள் ஏதாவது செய்ய வேண்டும். என்ன செய்யப் போகிறார் புடின்?

## ஆசிரியருக்கான கடிதம்

# அமலமரித் தியாகிகளின் பணிகள் விரிவாக்கப்படவேண்டும்

கத்தோலிக்க திருச்சபையின் அமலமரித் தியாகிகளின் சபையினர் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் கடந்த 25 வருடங்களாக மேற்கொண்டு வரும் பணிகளின் மாணிக்கவிழா பற்றிய வாழ்த்துச் செய்திகளும் ஆசிச் செய்திகளும் கடந்த 22ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. இந்தச் செய்திகளுடன் கரவையூர் செல்வம் என்பவரின் முன்னுரையொன்றும் வெளியாகியிருந்தது. அமலமரித் தியாகிகளின் சேவை யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்குட்பட்ட ஒன்றாக மட்டுமே உள்ளது. இந்தச் சேவை ஏனைய மருத்துவமனைகளுக்கும் கிடைக்குமானால் அது மிகவும் பயனுள்ளதாக அமையும். ஆளணி பற்றாக்குறை இருக்குமானால் பணிசெய்ய ஆர்வமுள்ள பொது நிலையினரையும் இணைத்துக் கொள்ளலாம். பொது நிலையினரும் சேர்ந்து செயற்படும் பட்சத்தில் இந்தப் பணி மேலும் சிறப்படையும். சிந்திப்பார்களா சம்பந்தப்பட்டவர்கள்.

ப.யேசுபாதம்

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

## தென்மராட்சி உணவகங்களில் தொடர் பரிசோதனைக்கு திட்டம்

சாவகச்சேரி.செப்.30

தென்மராட்சி பிரதேசத்தில் சுத்தமான, சுகாதாரமான உணவுகள் மக்களுக்கு கிடைக்கச் செய்வதற்காக, சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் தொடர் பரிசோதனைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். மழை காலம் ஆரம்பித்துள்ளதால் உணவு மூலம் நோய்கள் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்கள் பாதுகாப்பாக வைத்தல், சமைத்த உணவுகளை இலையான் போன்றவை மொய்க்காதவாறு மூடி வைத்திருத்தல், பாதுகாப்பான கழிவுநீர் முகாமைத்துவம், பாதுகாப்பான திண்மக்கழிவு முகாமைத்துவம், உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் போன்றவற்றில் பணியாற்றுவோர் தனிநபர் சுகாதாரம் பேணுதல், உரிய மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் போன்றவற்றுடன் உணவகம் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் போன்ற வற்றின் சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருத்தல் உள்ளிட்ட அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான குறைபாடுகள் தொடர்ச்சியாகக் காணப்படும் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத உணவகம் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் மறு அறிவித்தல் வரை மூடவேண்டிய நிலமை ஏற்படும் என்றும் அறிவித்துள்ளனர். (க-9)

# 10ஆயிரம் பனம் விதைகள் கள்ளிக்குளத்தில் நடுகை

வவுனியா, செப். 30

சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஒரு லட்சம் பனை விதைப்புச் செயற்றிட்டத்தின் ஐந்தாம் கட்டமாக 10 ஆயிரம் பனை விதைகள் நடுகை வவுனியா கள்ளிக்குளம் கிராமத்தில் நேற்று ஆரம்பமாகியது.



கள்ளிக்குளம் கிராம அலுவலர் சர்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற பனை விதைப்பில் கள்ளிக்குள கிராம அபிவிருத்தி, மாதர் அபிவிருத்தி, விளையாட்டு இளைஞர் கழக சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் சுயாதீன தமிழ் இளைஞர் அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பனை வளம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தாடல்களும் இடம்பெற்றன.

தொடர்ந்து வீதி ஓரங்கள், மைதானங்கள், குளக்கரைகள், காடுகளின் எல்லைகள் என்பனவற்றில் பனை விதைகள் நடப்பட்டன. அதுமட்டுமன்றி, ஒவ்வொரு குடும்பத்துக்கும் பத்து விதைகள் வீதம் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## நவராத்திரி பூசை வழிபாடு ஆரம்பம்

நவராத்திரி பூசை வழிபாடுகள் நேற்று அனைத்து இடங்களிலும் ஆரம்பமானது.தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள், குடியிருப்புகள், ஆலயங்களில் நவராத்திரி வழிபாட்டுக்கான கும்பம் வைத்தல் இடம்பெற்றன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலைகள் விடுமுறைநாள் என்றபோதிலும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் வருகை தந்து கும்பம் வைத்து நவராத்திரி வழிபாட்டை ஆரம்பித்தனர்.தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (க-9)

## பொதுச் சுகாதார பரிசோதகர் ரொனால்ட்டுக்கு தேசிய விருது

யாழ்ப்பாணம்.செப்.30

அர்ப்பணிப்பு மிக்க பொதுமக்கள் சேவைக்காக பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பிரிவில் பருத்தித்துறை பிரிவு 11 பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் ரொனால்ட்டுக்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ரீதியில் பொது சுகாதார சேவைகள் சங்கத்தால் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்டு. சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்தினவால் அவருக்கான விருது வழங்கப்பட்டது.

அகில இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் 84 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் கடவத்தை றோஸ்கார்டின் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் அர்ப்பணிப்புமிக்க சேவையை வழங்கியமைக்காக யாழ். மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் பரிந்துரையின் அடிப்படையில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கடந்த வருடம் ஓய்வுபெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு பாராட்டு விருதுகளும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)



## மருத்துவர்கள் போராட்டம் பண்ணையாளர்கள் அவதி

சாவகச்சேரி, செப். 30

கால்நடை மருத்துவர்களின் தொடர் பணிப்புறக்கணிப்பால் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம் என்று பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை மருத்துவர்களிடமிருந்து பெறமுடியவில்லை. கால்நடைகளுக்கு சிகிச்சை பெறச் செல்லும் பண்ணையாளர்கள் மருத்துவர்கள் இல்லாத நிலையில் ஏமாற்றமடைகின்றனர். அங்கு கடமையாற்றுவோர் பாதிக்கப்பட்ட கால்நடைகளைத் தனியார் நிலையத்தில் கொண்டு சென்று, சிகிச்சை பெறுமாறு கூறுகின்றனர். இதனால் தனியார் கால்நடை மருத்துவநிலையங்களில் சிகிச்சை பெறும்போது அதிகளவு கட்டணம் அறவிடுகின்றனர் என்றும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர். (த-9)

## விவசாயிகளுக்கு நாளை கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.30

வாதரவத்தை கமக்கார அமைப்பின் கமக்காரர்களுக்கான 2019ஆம் ஆண்டு பெரும்போக நெற் செய்கை தொடர்பான கூட்டம் நாளை செய்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ,வாதரவத்தை பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த கூட்டத்தில், பெரும் போக நெற்செய்கைக்கான மானிய உரம் விநியோகத்துக்கான பதிவுகள் இடம்பெறும் என்று புத்தூர் கமநல சேவைகள் நிலைய அலுவலர் அறிவித்துள்ளார். (க-7,11)

# தீர்வு கிடைக்கவில்லையேல் மீள 5 நாள்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 30

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடு உட்பட 6 கோரிக்கைகள்ள முன்வைத்து 26ஆம் 27ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுகவீன விடுப்புப் போராட்டம் பெரு வெற்றியளித்துள்ளது. இதற்கும் தீர்வு கிடைக்கவில்லையேல் மீண்டும் 5 நாள்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தை மேற்கொள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் தீர்மானித்துள்ளன என்று மக்கள் ஆசிரியர் சங்கம் தெரிவிக்கின்றது.

இது பற்றி சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் முன்பாக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பெருந்தொகையான ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களும் பங்கு கொண்டனர். பேரணி லிப்டன் சுற்று வட்டம் வரை சென்றிருந்தது.

22 வருட கால சம்பள முரண்பாட்டைத் தீர்த்து ஆசிரியர் அதிபர்களின் சம்பளத்தை உயர்த்து. அரசியல் பழிவாங்கல் என்ற போர்வையில் வழங்கும் அனைத்து நியமனங்களையும் உடன் நிறுத்து. படிவங்கள் நிரப்புதல் உட்பட அழுத்தம் கொடுக்கும் அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்தி ஆசிரியர்கள் வகுப்பறையில் சுதந்திரமாக கற்பிப்பதற்கான ஒழுங்கை ஏற்படுத்து. பெற்றோரிடம் பணம் அறவிடுவதை நிறுத்தி கல்விக்கு தேசிய வருமானத்தில் 6 வீதத்தை ஒதுக்கு. 2016 தொடக்கம் நிராகரிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்து. பிரிவெனா நன்கொடை பெறும் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அரச ஓய்வூதியத்தை நடைமுறைப்படுத்து ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. 30க்கும் மேற்பட்ட ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்தே போராட்டத்தில் ஈடுபட்டனர். என்றுள்ளது. (த)

## அனுமதி பெறாது மணலேற்றினரென சிலாவத்துறையில் மூவர் கைது

மன்னார், சிலாவத்துறையில் அனுமதிபெறாது மணல் ஏற்றினரென்று 3பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் மணல் ஏற்றப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், கடந்த புதன்கிழமை உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிக்கொண்டிருந்த போதே மூவரும் கைது செய்யப்பட்டனர். உழவுஇயந்திரம் மற்றும் மணல் என்பனவற்றுடன் அவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# வன்முறைகளைக் கட்டுப்படுத்த உளவள ஆலோசனை அவசியம்

## கலாநிதி தனபாலன் வலியுறுத்து

மன்னார்,செப்.30

**போரின் தாக்க விளைவுகள், அதன் பின்னராக சமூகப் பொருளாதார கலை, கலாசார மாறுதல்கள், போதைப் பொருள்களின் தாக்கம், இளைஞர் வன்முறைகள், பொருத்தமற்ற லீசிங் கடன்களின் விளைவாக உயிர்மாய்ப்புக்கள், குடும்ப வன்முறைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த மனநலம் மற்றும் உள சமூகப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கலாநிதி பா.தனபாலன் தெரிவித்தார்.**

மடு வலயக் கல்வி அலுவலக ஆசிரியவான்மை மத்திய நிலையத்தில் கடந்த வாரம் ஆசிரியர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது எதிர்காலச் சந்ததிகளான பாடசாலை மாணவர்களிடையே நடத்தைகளில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களின் தாக்கம், தவறான நட்புகள், பொருத்தமற்ற வீட்டுச் சூழல், பொருத்தமற்ற பாடசாலைச் சூழல், பொருத்தமற்ற சமூக, நாட்டுச் சூழல் காரணமாக பெருமளவு மாண வர்களில் உள்ளம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை அதிபர்கள், ஆசிரியர்கள் புரிந்துகொண்டு வளர்ப்புப் பெற்றோராக, உளவளத் துணையாளர்களாக மாறி, மாணவர்களின் உள்ளத்தை வளப்படுத்தி, ஆளுமை விருத்தியை ஏற்படுத்தும் திறன்களையும், தேர்ச்சிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட அனைவரும் தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்வதற்குரிய குணமாக்கும் உள சமூகச்செயன்முறையை நடைமுறைப் படுத்த வேண்டும். இதன் மூலம் உளரீதியாகக் குணமடையும் சமூகமாக எம் மக்கள் அனைவரையும் மாற்ற முடியும்.

சாதாரண மனிதர்களால் செய்யப்படுகின்ற மனித நேயச் செயற்பாடுகளே பெரிய உளவியல் உதவியாகவும், சமூகப் பண்பாகவும் அமைகின்றன. ஓர் உதவும் உறவாடல் கலாசாரம் எமது தமிழர் பாரம்பரிய வாழ்வியல் வழிபாடு கலைகளில் உள்ளன. அவ்வறை அழியவிடாது பாதுகாத்து வலுவூட்ட வேண்டும்.

ஒரு மனிதனுக்கு உடல்நலம் எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு உளநலனும் முக்கியம். எமது சமூகத்தில் உடல்நலம் அளவுக்கு உளநலத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. மற்றைய நாடுகளில் உள்வாங்கப்படும் அளவுக்கு எமது மண்ணில் உளநலம் பற்றிய எண்ணக்கரு உள்வாங்கப்படவில்லை- என்றார். (க)

# மயங்கி வீழ்ந்து முதியவர் சாவு

கொடிகாமம், செப்.30

மயங்கி விழுந்த முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் கொடிகாமம் மடத்தடி ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த வன்பொருள் விற்பனை நிலைய உரிமையாளரான தம்பிஜயா இராசேந்திரம் (வயது- 69) என்பவரே உயிரிழந்தார்.

கடையைப் பூட்டி விட்டு கொடிகாமம் மடத்தடி ஒழுங்கையில் உந்துருளியிற்சென்று கொண்டிருந்த வேளை குறித்த பகுதியில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

வீதியில் கிடந்ததை கண்ட மக்கள் உடனடியாக அவசர நோயாளர் காவு வண்டி மூலம் அறிவித்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அவர் ஏக்கனவே இறந்து விட்டதாக மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் தினமும் திறன் வகுப்பறை திறப்பு விழாவும்

கொடிகாமம்,செப்.30

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் சிறுவர் தினமும் திறன் வகுப்பறை திறப்பு விழாவும் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியில் இடம்பெறும்.

அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஓய்வு நிலை ஆசிரியர்கள் தர்மலிங்கம் தம்பித், சிறப்பு விருந்தினராக உலக சேவை பிராந்திய இணைப்பாளர் கே.சற்குணதேவன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)



# சாரணர்களுடன் கலந்துரையாடல்

கொடிகாமம்,செப்.30

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்க ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள சாரணர் ஒன்று கூடல் தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிரேமதாஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. பிரதீபா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதி அதிபர் ப. பாலபவன், சாரணர் சங்கத் தலைவர் கி. விக்னராஜா மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் மு. பிரேம்குமார், உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மற்றும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் பங்கேற்கும் மாவட்ட சாரணர் ஒன்று கூடல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 3 தினங்கள் நடைபெறவுள்ளது. (க-159)

# நாட்டில் மத நல்லிணக்கம், சமத்துவம் பாடசாலைகளில் ஆரம்பமாக வேண்டும்

## ஜெபரட்ணம் அடிகளார் தெரிவிப்பு

கொடிகாமம்,செப்.30

நாட்டில் மத நல்லிணக்கம், சமத்துவம் பாடசாலைகளில் ஆரம்பிக்க வேண்டும். சிறுபிராயத்தில் இத்தகைய சிந்தனைகளை உருவாக்கினால் எதிர்காலத்தில் மதங்களுக்கிடையே வன்முறை, பிரிவினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இருக்காது.

இவ்வாறு மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிள்ளைகள் சிறுபராயத்திலேயே மற்றைய மதத்தை மதிக்க, ஏற்றுக்கொள்ள பழக்கப்படுத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. இல்லையென்றால் அவர்கள் வளர்ந்த பிற்பாடு தங்களுடைய மதங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதும், ஏனைய மதங்களைப் பின்தள்ளுவதும், அவர்களை மதிக்காமல் வாழ்கின்ற நிலைமையும். ஏற்படும். அப்படியான தொரு நிலமையைத் தான் எமது நாட்டில் தற்போது காண்கின்றோம்.

நாட்டில் ஒவ்வொரு குடிமகனும் என்னுடைய நாடு என்று சொல்லக்கூடிய சுதந்திரம், உரிமை கொடுக்கப்பட வேண்டும். அது தான் அந்த நாட்டின் உண்மையான சுதந்திரம். சிங்கள பௌத்த நாட்டுக்குக் கீழே ஏனைய மதங்கள் இருக்க விரும்பினால், அது உண்மையான [illegible] தத்துவமாக இருக்க முடியாது. இந்த [illegible] வாழ்க்கையிலே தத்துவத்தை பாடசாலை வாழ்க்கையிலே பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இது எங்களுடைய பாடசாலை, எங்களுக்கு இங்கே எல்லாச் சுதந்திரமும் உண்டு என்ற உணர்வோடு வாழ வேண்டும்.

இதனை சிறு வயதிலிருந்தே நாங்கள் கொடுக்க தவறினோம் என்றால் பிற்காலத்தில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் இப்படியான தவறுகள் பாடசாலைகளில் இடம்பெற்றதால்தான் இன்று எங்களுடைய நாட்டிலே இப்படியான ஒரு பாரதூரமான தொரு விளைவு ஏற்பட்டுள்ளது.

சிங்கள- பௌத்த பாடசாலை என்றால் அங்கே படித்த ஏனைய மாணவர்கள் இந்துக்களாக இருக்கலாம் அல்லது கிறிஸ்தவர்களாக இருக்கலாம். அவர்கள் எந்தவொரு உரிமையுமில்லாமல் அந்த பாடசாலையில் படிக்க நிர்ப்பந்திப்பப்பட்டார்கள். அதனால் பெரும்பான்மையானவர்களின் மனதில் அது, இது என்னுடையது, மற்றவர்களுக்குரியது அல்ல என்ற எண்ணம் உருவானது.

வெறுமனே நாங்கள் பெரும்பான்மை இனத்தை மட்டும் குற்றஞ் சொல்லக்கூடாது. எங்களிலும் அந்த தவறுகள் இருந்தன. கத்தோலிக்கப் பாடசாலைகளை எடுத்துக் கொண்டாலும், கத்தோலிக்க பாடசாலைகளில் படித்த இந்து மாணவர்களைப் புறக்கணித்த சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. அதனை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இப்படியான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படக் கூடாது. எல்லா மாணவர்களும் எல்லா உரிமையோடும் சமத்துவத்தோடும் வாழ்கின்ற நிலை உருவாக வேண்டும்- என்றார். (க-159)

# பாம்புக் கடிக்கு இலக்கான நபர்

சாவகச்சேரி,செப்.30

வேலை முடிந்து வீடு திரும்பிய குடும்பத் தலைவர், வீதியில் பாம்புக் கடிக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் மந்துவில் கிழக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.


57 வயதுடைய நபர், வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது. வீதியோரத்தில் மறைந்திருந்த பாம்பு தீண்டியுள்ளது.

பாம்பினால் தீண்டப்பட்டவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-9)

# திடீரென பற்றிய மின்மாற்றி

யாழ்ப்பாணம்,செப்.30

அளவெட்டி முதன்மை வீதியில் மலைவேம்படியில் அமைக்கப்ப்ட்டிருந்த மின்மாற்றியின் மின்கடத்தி திடீரெனத் தீப்பற்றியது.



இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

மின்மாற்றி தீப்பற்றியதை அடுத்து சிறிது நேரம் வீதி சென்றவர்கள், அயலில் உள்ளவர்கள் பதற்றம் அடைந்தனர்.

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. அங்கு விரைந்த ஊழியர்கள் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-63)


# சட்டத்தை மதிக்காதவர்களை சட்டத்தின்முன் நிறுத்துங்கள்

## யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 30
முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் ஆலயவளாகத்தில் சட்டத்தை மதிக்காது பிக்குவின் சடலம் தகனம் செய்யப்பட்ட விடயத்தில், அனைவரும் சட்டத்தின் முன்நிறுத்தப்படவேண்டும் என்று யாழ்ப்பாணமாவட்ட சர்வ மதப் பேரவை வலியுறுத்தியுள்ளது.



யாழ்ப்பாண நாக விகாரையில் கடந்தவெள்ளிக்கிழமைநடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேரவையினர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் சமாதானம், சாந்தி, நல்லிணக்கம்ஆகியனஉருவாகுவதற்கு பலர் உழைத்துக் கொண்டு இருக்கும் நிலையில் இவ்வாறான ஒரு சம்பவம் கவலையளிக்கிறது. இந்த விடயத்தில்சட்டம்மதிக்கப்படவேண்டும். சட்டம் அனைவருக்கும் பொதுவானது. அது நிலைநாட்டப்பட வேண்டும். சமயவணக்கதலங்கள், சமயத் தலைவர்கள் மதிக்கப்பட வேண்டும். இந்த நிலை காணப்படும் போது சமய தலைவர்கள் சார்பாகப் பிரச்சினை ஒன்று உருவாக்கப்பட்டால், அது முழு நாட்டின் நல்லிணக்கத்தையும் குழப்பி விடும்.
ஏனைய மதங்களை இன்னொரு மதப் பிரிவினர் மதிக்கும்போது அன்பு, நல்லிணக்கம் ஏற்படும். நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற விடயத்தில் சட்டம் மதிக்கப்படவில்லை. சட்டத்தை மீறியவர்கள் யார் என்றாலும் தண்டிக்கப்பட வேண்டும். இதற்கு அரசு முன்வரவேண்டும். ஒருபிரச்சினை ஏற்பட்டால் மதத் தலைவர்கள் ஒன்றுகூடி கலந்துரையாட வேண்டும். அதிலும்தீர்வுகிடைக்கவில்லை என்றபடியால்தான்நீதித்துறையை நாடிச்செல்லவேண்டியதேவைஏற்படும். சிலர் இனங்களுக்கு இடையே குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிப்பார்கள். ஆகவே நாம் அதனைப் புரிந்து கொண்டு ஒற்றுமையாகச் செயற்படவேண்டும்-என்றனர். (து-7)



# கனகேஸ்வரனுக்கு மக்கள் மதிப்பளிப்பு



சாவகச்சேரி,செப்.30
யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலராகக் கடமையேற்றுள்ள தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கனகசபாபதி கனகேஸ்வரனுக்கு மக்களால் மதிப்பளிக்கப்பட்டது.
இந்த நிகழ்வு கொடிகாமம் நட்சத்திர மகால் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
கொடிகாமம் சந்தியிலிருந்து விழா நாயகன் ஊர்வலமாக மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார். அங்கு அவருக்கான மதிப்பளிப்பு இடம்பெற்றது. தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியமும், தென்மராட்சிப் பிரதேச மக்களும் இணைந்து நிகழ்வை நடத்தினர். ஒன்றியத் தலைவர் தம்பு கந்தையா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். (க-9,131)



# வீதி விபத்தில் இருவர்காயம்


வவுனியா,செப்.30
உந்துருளியும், ஈருருளியும் மோதிக்கொண்டதில் இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து வவுனியா, குட்செட்வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.
ஆலடிச் சந்தி நோக்கிப் பயணித்த ஈருருளியுடன் அதே திசையில் பயணித்த உந்துருளி மோதியதில்விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் ஈருருளியில் பயணித்த முதியவர் மற்றும் உந்துருளியில் பயணித்த இளைஞர் ஆகிய இருவரும் காயமடைந்திருந்தனர்.
இந்த நிலையில் அங்கிருந்த பொதுமக்கள்1990என்றஅவசர நோயாளர் காவு வண்டிக்கு அழைப்பைஏற்படுத்தி, அதனூடாக [illegible] காயமடைந்த இருவரையும்வவுனியாமருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-ரி4)

# நெல்லியடி பேருந்துத் தரிப்பிடத்தில் குடிகொண்டுள்ள மயிர்கொட்டிகள்

## பயணிகள் பெரும் சிரமம்



யாழ்ப்பாணம்,செப்.30
நெல்லியடி பேருந்துத் தரிப்பிடத்தில் மயிர் கொட்டிகள்அதிகரித்துக் காணப்படுவதால், பயணிகள் பெரும் சிரமத்தைஎதிர்நோக்கியுள்ளனர்.
குறிப்பாக கொழும்பில் இருந்து வரும் பயணிகள் மற்றும் இரவு நேரத்தில் வேறு மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளும்மயிர்கொட்டிகளுக்குஇலக்காகி பெரும் சிரமத்தை எதிர் கொண்டு வருகின்றனர்.
பேருந்துத் தரிப்பிடத்துக்குஅருகில்கொடிகள் படர்ந்து காணப்படுவதால், மயிர் கொட்டிகள் பெருகியுள்ளன. இது தொடர்பாக கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஐங்கரனுக்குத் தெரியப்படுத்தியபோதும், அவர் கண்டுகொள்வதாக இல்லை.
எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்குமாறும் பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-422)





# திறன் வகுப்பறை திறப்பு

முல்லைத்தீவு,செப்.30
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் 10 ஆவது திறன்வகுப்பறை கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம், முல்லை வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி தட்சாயினி வஜிகரன், புதுக்குடியிருப்பு கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சுப்பிரமணியேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
திறன் வகுப்பறைக்குரிய உபகரணங்களை ஆனந்த சாமி நிலவன் நினைவாக அவரது [illegible] சகோதரர்கள் வழங்கி [illegible]றுதனர். (ஜ-222)

# இனந்தெரியாதோரால் உந்துருளி எரிப்பு




வவுனியா,செப்.30
வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளி ஒன்று இனந்தெரியாதோரால் எரியூட்டப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் வவுனியா கனகராயன்குளம்தெற்குப்பகுதியில்உள்ள வீடொன்றில்நேற்றுமுன்தினம்அதிகாலை இடம்பெற்றது.
வீட்டிலுள்ளோர் உறங்கிகொண்டிருந்த சமயம் வீட்டுக்குள் நுழைந்த இனம் தெரியாத நபர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிஸ்கவர்ரகஉந்துருளியை தீயிட்டுஎரித்துள்ளனர். வீட்டின் உரிமையாளர்கள் காலையில் எழும்பி பார்த்தபோது உந்துருளி முற்றாக எரிந்துள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் கனகராயன் குளம்பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடுசெய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஜ-110)

# வீதிக்குவரும் யானைகளால் பயணிக்கும் மக்கள் அச்சம்!

வவுனியா,செப்.30

மாலை நேரங்களில் வீதிக்குப் படையெடுக்கும் யானைகளால் மக்கள் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.



வவுனியா, புளியங்குளம், நெடுங்கேணி முதன்மை வீதியில் யானைகள் மாலை நேரங்களில் இவ்வாறு உலாவித் திரிகின்றன. இதனால் வீதி வழியாகப் போக்குவரத்து செய்யும் பயணிகள், வாகனச் சாரதிகள் எனப் பலரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

இதேவேளை- நெடுங்கேணிப் பகுதியில் உள்ள அங்காடிக்குள் புகுந்த யானைகள், அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மரக்கறிகளை அழித்துள்ளன. இதனால் வியாபாரிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. காட்டுக்குள் இருக்கும் யானைகள் மாலை நேரங்களிலும், அதிகாலையிலும் கிராமங்களை நோக்கிப்படையெடுக்கின்றன. இது தொடர்பில் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-110)





## மன்னார் மறைசாட்சிகளின் 475 ஆவது ஆண்டு நிறைவு

மன்னார்,செப்.30

மன்னார் மறைசாட்சிகளின் 475ஆவது ஆண்டு நிறைவு விழா தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி திருத்தலத்தில் நேற்று நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தலைமையில், திருப்பீடத்தின் இலங்கைக்கான திருத்தூதுவர் பேராயர் கலாநிதி பீற்றர் நியான்வன் றெட் மற்றும் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியைக் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து 'வித்துக்கள்' என்ற நூல் வெளியிடப்பட்டது. ஆயர்கள் தோட்டவெளியில் வேதசாட்சிகளாக சாவடைந்தவர்களில் கல்லறைக்குச் சென்று தங்கள் அகவணக்கம் செலுத்தி செபித்தனர்.

விழாவில் திருகோணமலை ஓய்வு பெற்ற ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, மறை மாவட்டங்களைச் சேர்ந்த குரு முதல்வர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (க-56,60)



## சுயதொழிலுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள்

கிளிநொச்சி,செப்.30

ஸ்கந்தபுரம் கிராமிய குழுவுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன.

கரைச்சிப் பிரதேச மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஒழுங்கமைப்பில், புன்னகை அமைப்பின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

மிளகாய் தூள் உற்பத்தி, மெழுகுதிரி தயாரிப்பு ஆகிய சுயதொழிலுக்கு 4 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

புன்னகை இணைப்பாளர் மு.நெல்சன் உதவிகளை வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-222)

## சர்வமதக் குழுவினர் வவுனியாவில் சந்திப்பு

வவுனியா,செப்.30

சர்வமதக் குழுவினருக்கு இடையிலான சந்திப்பு வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள விருந்தினர் விடுதியில் கடந்த வாரம் இடம்பெற்றது.

சந்திப்பில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து சர்வமதக் குழுவால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அரச அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோருக்கு மத நல்லிணக்கம் தொர்பான கலந்துரையாடலை மேற்கொண்டு, அவர்களினூடாக மத நல்லிணக்கச் செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்தும் சந்திப்பில் ஆராயப்பட்டன.

சந்திப்பில் இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் செயற்றிட்ட முகாமையாளர் சமன் செனவிரட்ன, வளவாளர் ரசிகா செனவிரட்ன, உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், மதகுருமார்கள், சர்வமதக் குழுவினர் கலந்து கொண்டனர். (க-ரி4)





## பரிசளிப்பு நிகழ்வு

மன்னார்,செப்.30

மன்னார், முருங்கன் பரிகாரிகண்டல் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வீதி அபிவிருத்தி அதிகார சபை மாகாணப் பணிப்பாளர் ஞான சேகரம் ஜொய்ஸ் டெல்பின் குரூஸ், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் கே.ஜே.பிறட்லி, சிறுகண்டல் பங்குத் தந்தை ஞானதிக்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(ஐ-222)



## தேர்தல் வாக்களிப்பு தொடர்பில் வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா,செப்.30

தேர்தல் வாக்களிப்புத் தொடர்பான கலந்துரையாடல் வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (பவ்ரல்) ஏற்பாட்டில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மூத்த சட்டத்தரணி கந்தசாமி தயாபரன் வாக்களிப்பு தொடர்பில் விளக்க மளித்தார்.

பவ்ரல் அமைப்பின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், வன்னி தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது அமைப்பினர் கலந்து கொண்டனர். (க-110)

# கட்சி சின்னச் சிக்கல் விரைவில் தீர்க்கப்படும்

## அபேவர்த்தன எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, செப்.30

சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடனான சின்னம் தொடர்பான பிரச்சினைகள் விரைவில் தீரும் என மகிந்த ஆதரவு அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் சின்னத்தை மாற்றியமைக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இந்தச் சின்னமானது, தற்போது அனைவருக்கும் பரீட்சாத்தியமாகியுள்ளது. சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து நாம் அனைவரும் ஒரே பயணத்தைத் தான் மேற்கொள்ளவிருக்கிறோம்.

இந்த விடயத்தில் சின்னம் தொடர்பான பிரச்சினைகள் தேவையில்லை என்பதே எமது நிலைப்பாடு. இந்தப் பிரச்சினைத் தீரும் என்றே நான் நினைக்கிறேன்-என்றார். (எ)

## தொடருந்து ஊழியருடன் இன்று தீர்க்கமான பேச்சு

கொழும்பு, செப்.30

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களின் பிரதி நிதிகளுடன் இன்று மாலை தீர்க்கமான பேச்சு நடைபெறவுள்ளது என்று போக்குவரத்து மற்றும் சிவில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.

தொடருந்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நேற்று அமைச்சர் சஜித் பிரேமதாசவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். அவர்களின் வேலை நிறுத்தத்துக்கான பிரச்சினையைக் கேட்டறிந்தார். இந்த விடயத்தை நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக அவர்களிடம் தெரிவித்தார்.

தான் அரச தலைவராகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இந்த பிரச்சினைக்குத் தீர்வை காண்பேன் என்றும் உறுதியளித்தார்.

அதனால் தொடருந்துப் பயணிகளின் போக்குவரத்துப் பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு வேலை நிறுத்தத்தை கைவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தொடருந்து ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு இன்று இரண்டு மணிமுதல் ஐந்து மணிவரை மூன்று கட்டங்களாக தொழிற் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.

பயணிகளின் நலன் கருதி மேலதிக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் தொடருந்துச் சாரதிகள் உட்பட உயர்மட்ட அதிகாரிகள் மேலதிக வேலை நேரத்துக்காக நாளாந்தம் 7 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொள்கின்றனர் என்றும் கூறினார்.

இதேவேளை- தொடருந்து ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் 300 க்கும் மேற்பட்ட தொடருந்து சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. காங்கேசன்துறை, மட்டக்களப்பு, பதுளை ஆகிய இடங்களுக்கான இரவு தபால் தொடருந்துச் சேவை நிறுத்தப்பட்டிருப்பதால் மத்திய தபால் பரிவர்த்தன நிலையத்தில் தேங்கியிருக்கும் தபால் பொதிகளை வாகனங்களில் எடுத்துச் செல்லும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தபால்திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். (எ)

## ஏழு யானைகள் உயிரிழந்தமை தொடர்பாக துரித விசாரணை

கொழும்பு, செப்.30

ஹபரணை - திகம்பதஹ - ஹிரிவடுன்ன வனப்பகுதியில் 7 யானைகள் உயிரிழந்தமை தொடர்பில் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று வனஜீவராசிகள் அமைச்சு, வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டாரவுக்கு அறிவித்துள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் இராணுவத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் அலுவிஹாரே தெரிவித்துள்ளார்.

பரிசோதனை அறிக்கையை இன்று மாலைக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளோம். எவ்வாறு இந்த இறப்பு சம்பவித்துள்ளது என்பது தொடர்பில் நாம் ஆராய வேண்டும். யானைகள் உயிரிழந்துள்ளமை தொடர்பில் எமக்கு கேள்விகள் எழுந்துள்ளன. இந்த யானைகள் கலாவெவ பகுதியிலிருந்தே இங்கு வந்துள்ளன.

இவை இங்குள்ள யானைகள் இல்லை, ஆராய்ந்து எமக்குத் தகவல் வழங்குவதற்கு இராணுவத்தினரையும் ஈடுபடுத்தியுள்ளோம்.

இராணுவத்தின் அறிக்கையும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அறிக்கையும் எமக்கு கிடைக்கும் என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் அலுவிஹாரே மேலும் தெரிவித்துள்ளார்.

ஹபரணை - திகம்பதஹ - ஹிரிவடுன்ன வனப்பகுதியில் நேற்றும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நேற்று முன்தினம் மாலை வரை 7 யானைகளின் உடல்கள் அங்கு கண்டெடுக்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளுக்காக யானைகளின் உடற்பாகங்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்படவுள்ளன என்று பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார். உயிரிழப்புக்கான காரணத்தை உறுதியாகக் கூற முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், தமது திணைக்களமும் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்யும் சாத்தியம்

கொழும்பு, செப்.30

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

தென், சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில பகுதிகளில் 75 மில்லிமீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. மத்திய, ஊவா, வட மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் 50 மில்லிமீற்றர் வரை மழை பெய்யலாம் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அதேவேளை, நாட்டைச் சூழவுள்ள சில கடற்பிரதேசங்களில் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் 70 முதல் 80 கிலோமீற்றர் வரை அதிகரிக்கும் சாத்தியமுள்ளது என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (எ)

## வேலைதேடும் பட்டதாரிகள் புதிய கட்சி ஆரம்பித்தனர்

வவுனியா, செப். 30

வவுனியா மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் 'தேசிய ஜன நாயக மக்கள் முன்னணி' என்ற பெயரில் புதிய கட்சியை நேற்று ஆரம்பித்துள்ளனர். வவுனியா கொரவப்பொத்தான வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் இது நடைபெற்றது.

தலைவராக எம்.ஆனந்தராஜா, செயலராக ஜெ.சந்திரப்பிரகாஸ், தேசிய அமைப்பாளராக ரி.ரஜனிக்காந் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதன் சின்னம் இரட்டை மின்சாரக் கோபுரம். கட்சியின் மூவர்ணக் கொடி கட்சித் தலைவரால் அறிமுகம் செய்யப்பட்டது.

அங்கு கட்சியின் தலைவர் எம்.ஆனந்தராஜா தெரிவித்ததாவது:

எமது மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இன, மத வேறுபாடு இன்றியும், ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்தி கட்சி செயற்படும். மூவின மக்களைச் சார்ந்த கட்சியாக சாதி மதங்களைக் கடந்து செயலாற்றும், பட்டதாரிகள் சங்கமானது இன்றிலிருந்து கட்சியாகச் செயற்படும். தற்போது வடக்கு மாகாணத்தைப் பிரதிபலித்துச் செயற்படும் இந்தக் கட்சி எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்துக்கு விரிவுபடுத்தப்படும். தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி கொழும்பில் ஆட்சியிலிருக்கும் கட்சியுடன் சேர்ந்து செயற்படும் என்று தெரிவித்தார்.




கட்சியின் செயலர் சந்திர பிரகாஸ் கருத்து தெரிவிக்கையில், கடந்த காலத்தில் சில கட்சிகளுக்காகத் தேர்தல் காலங்களில் பேரம் பேசலுடன் செயற்பட்டிருந்தோம். ஆனால் தேர்தலின் பின் எமது கோரிக்கைகள் அந்தக் கட்சிகளால் நிராகரிக்கப்பட்டிருந்தன. ஆகவே பட்டதாரிகள் சங்கம் புதிதாக இந்தக்கட்சியை நிறுவியுள்ளது- என்று தெரிவித்தார். (த-ரி4)

## பிரேஸில் பெண்ணின் வயிற்றில் கொக்கெய்ன்

கொழும்பு, செப்.30

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்ட பிரேஸில் நாட்டு பெண்ணின் வயிற்றிலிருந்து கொக்கெய்ன் அடங்கிய 52 வில்லைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். டோகாவில் இருந்து நாட்டுக்கு வந்த இந்தப் பெண், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதன் பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதையடுத்து பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் அந்தப் பெண் நீர்கொழும்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# விசக்கிருமியான ஞானசாரதேரரை கல்லுடன்கட்டிக் கடலில் போடுங்கள்

### கூட்டமைப்பின் சிவமோகன் எம்.பி. வலியுறுத்து



முல்லைத்தீவு, செப். 30

இன நல்லிணக்கத்துக்கு எதிராகச் செயற்படும் ஞானசார தேரரைக் கல்லுடன் கட்டிக் கடலில் போடுங்கள். பல்லின மக்கள் வாழும் இலங்கையில் ஞானசாரதேரர் போன்ற இனவாத விஷக் கிருமிகளை இருக்கவிடக்கூடாது. இருக்கவிட்டால் ஒட்டுமொத்த நாட்டையே அழித்து விடுவர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்த மதத் துறவியருக்கு தனிச் சட்டங்கள் ஏதேனும் இயற்றப்பட்டுள்ளனவா? நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் அட்டூழியம் செய்த ஞானசாரதேரர் உட்பட பிக்குகளைக் கைது செய்யாதது எதற்காக?

**தமிழர்கள் ஏற்கார்**

அறிவிலியான ஞானசார தேரர் கூறும் "இலங்கை சிங்கள- பௌத்த கொள்கை"யை ஏற்றுக் கொள்ள முடியாது. அதை தெற்கு மக்கள் ஏற்றுக் கொள்வார்களேயன்றி வடக்கு - கிழக்கு தாயக மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். அதை ஏற்க வேண்டிய எந்த அவசியமும் தமிழர்களுக்கு இல்லை. தெற்கில் குடியிருக்கும் போதே பிசாசு போல் இனவாத ஆட்டம் போடும் ஞானசார தேரர் வடக்கில் குடியேறி மீண்டும் ஒரு இனக் கலவரத்தைஏற்படுத்தமுயற்சிக்கிறாரா? ஞானசாரதேரர் உண்மையான தீட்சை பெற்ற பௌத்த துறவியா என்றும் சந்தேகம் எழுகிறது. ஏனெனில் புத்த பகவானின் பஞ்சசீலக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் எவரும் இப்படி கீழ்த்தரமான செயலில் ஈடுபட மாட்டார்கள்.

**ஞானசார தேரர் பௌத்தரா?**

அண்மையில் வவுனியா, கல்குனாமடுவில் விகாரை உள்ளே விநாயகர் ஆலயம் அமைப்பதற்கு எனது ஒதுக்கீட்டில் இருந்து நிதி வழங்கப்பட்டது. அவர்கள் பௌத்தர்களா? அல்லது ஞானசார தேரர் பௌத்தரா? அதனால்தான் கூறுகிறேன் இலங்கை இன முறுகலில் இருந்து விடுபட வேண்டுமானால் உடனடியாக ஞானசார தேரரை கல்லில் கட்டி கடலில் போடுங்கள்- என்று தெரிவித்தார். (த)

## சட்டத்தை மதிக்காத பிக்குகள் தண்டிக்கப்பட வேண்டியோரே

### இந்து இளைஞர் பேரவை வலியுறுத்து

வவுனியா.செப்.30

சட்டத்தை மதிக்காதது தவறெனின், சம்பந்தப்பட்ட பிக்குகளும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. இந்த நாட்டில் பிக்குகளுக்கென தனிச் சட்டங்கள் கிடையாது. அனைவரும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்களே என்று பன்னாட்டு இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ. ஜெ. மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீண்ட வாழ்வியல் வழிபாட்டு முறைகளையும், வாழ்வோடு இணைந்த பாரம்பரியங்களையும் கொண்டது இந்து சமயம். இந்து சமயப் பாரம்பரியம் சம்பிரதாயங்களின் அடிப்படையில் சாவடைந்த ஒருவரின் உடலை தகனம் செய்வதாயின் ஊருக்கு ஒதுக்குப்புறமாக அவைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் தகனம் செய்யப்பட வேண்டும். ஆனால் நோய்வாய்ப்பட்டு சாவடைந்த பௌத்த மதகுருவின் உடலை ஆலய வளாகத்தில் எரித்தமை மிகப் பெருந்தவறான செயலாகும். அதுவும் புனிதம் மிக்க ஆலயத்தின் அருகில் அனைத்து நீதிமன்ற சட்டங்களையும் மதியாது கணக்கிலெடுக்காது செய்துள்ளனர். இந்துக்கள் தான் அனைத்து வழிகளிலும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மன்னார், மட்டக்களப்பு, கன்னியா, முல்லைத்தீவு இப்படியே தொடர்கின்றன. இவற்றுக்கு உடனடியாகத் தீர்வுகள் காணப்பட வேண்டும். அதற்காக அனைத்து இந்துக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். நாங்கள் அமைதி காப்போமேயானால் அடுத்த எம் சந்ததிகளுக்கு நாம் நல்ல எதிர்காலத்தை உருவாக்கி கொடுக்காதவர் என்ற பழிக்கு ஆளாகி விடுவோம்- என்றுள்ளது. (க-110)

## நீராவியடியில் நடந்த அடாவடித்தனம் அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

### வவுனியா இந்துமாமன்றம் கேள்வி

வவுனியா,செப்.30

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நடந்த சம்பவம் தொடர்பாக அரசு இதுவரை நடவடிக்கை எடுக்காமை வருத்தமளிக்கிறது என்று வவுனியா இந்துமாமன்றம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்துமாமன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செம்மலை நீராவியடி விநாயகர் ஆலய வளாகத்தில் பௌத்த விகாரை அமைத்து தங்கியிருந்த நிலையில் புற்றுநோயால் உயிரிழந்த மேதாலங்க தேரரின் உடலை, நீதிமன்றின் கட்டளையையும் மீறி இந்து தர்ம நெறி முறைகளுக்கு அப்பால் முல்லைத்தீவுநீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில்தகனம் செய்ததுடன் இனம்தெரியாத காடையர்கள் மூலம் சட்டத்தரணிகளையும், பொது மக்களையும் தாக்கிய சம்மவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கையில் சட்டம், நீதி, நெறிமுறைகள் அனைத்தும் சகல இன மக்களுக்கும் பொதுவானவை. சட்டத்தின் முன் அனைவரும் சமம். இந்நிலையில் இந்து மக்களின் பூர்வீக வழிபாட்டுத் தலம் அமைந்துள்ள வளாகத்தில் இப்பாதகமான செயல் இடம் பெற்ற நிலையில், அதற்குக் காரணமானவர்கள் மீது இலங்கை அரசு இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கத்தவறியதையிட்டு நாம் கவலையடைகின்றோம்.

வன்முறைகளின் மூலம் எதனையும் சாதித்து விட முடியாது. இச்செயல்கள் அழிவையே தரும். இது எமக்கு காலம் தந்த பாடம்.

அன்பே சிவம் அன்பினால் மாத்திரமே எதனையும் சாதிக்கமுடியும். இதையே இந்து ,பௌத்த தர்மங்களும் கூறுகின்றன.

இந்த நிலையில் பௌத்த துறவியான ஞானசார தேரர்தர்மத்துக்கு மாறாக வன்முறையை கையிலெடுப்பது எமது நாட்டுக்கு உகந்ததல்ல. பலதரப்பட்ட இன மதங்களைப் பின்பற்றும் நாட்டில் மக்களைப் பாதிக்கக் கூடிய இப்படியான செயல்களைத் தடுப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கைஎடுக்காதுபோனால் இனவாத,மதவாத கருத்துக்கள் மக்கள் மத்தியில் மேலோங்கிநாடு அழிவுப் பாதையை நோக்கியே நகரும். இதனால் மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்பே இல்லாமற் போய்விடும்.

சட்டத்தையும், ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தக் கூடிய மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்யத் தவறும் பட்சத்தில் இப்படியான சம்பவங்கள் அதிகரித்து சட்டத்தின் ஆட்சி நிலை குலைந்து, நீதி நிர்வாகங்கள் அனைத்தும் நெறிமுறையில்லாமல் சீரழிந்து மக்கள் வாழ முடியாத நிலையே ஏற்படும்.

எனவே இந்தச் சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை மேற்கொண்டு, குற்றம் புரிந்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றுள்ளது. (க-110)

## நல்லூரில் பணியாற்றிய தொண்டர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

இம்முறை இடம்பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவில் இறைபணியாற்றிய தொண்டர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததுடன் சிறப்புரை ஒன்றையும் நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினர்களாகயாழ்ப்பாண மாவட்ட சாரண ஆணையாளர் ஆர். தவகோபால், பரியோவான் முதலுதவிப் படை மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை தலைவர் கு. பாலகிருஷ்ணன் உட்படப்பலர் கலந்து கொண்டனர். (ஜ)

## குருதிக் கறை படிந்தோரை மீள ஆட்சிக்கு வரவிடாதீர்

### கோடீஸ்வரன் எம்.பி. வலியுறுத்து

எருவில், செப். 30

கடந்த காலங்களிலே எங்களுடைய மக்களைக் கொன்று புதைத்து குருதிக்கறை படிந்தவர் வேட்பாளராக வந்திருக்கிறார். அப்படிப்பட்ட வேட்பாளரை எமது சமூகம் ஆதரிப்பார்களாயின் மீண்டும் இருண்ட யுகத்துக்குள் மக்கள் தள்ளப்படுவார்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப் போரில் லட்சக்கணக்கான மக்களைக் கொத்துக்கொத்தாக நிலத்துக்குள் புதைத்தார்கள். இவற்றுக்கெல்லாம் காரணமான நபர்கள் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறும் யுகம் உருவாகக்கூடாது.

கடந்தகாலத்தில் தமிழ் மக்களிடையே அள்ளி வீசப்பட்ட வாக்குறுதிகள் காலம் கடந்து இறந்துபோகின்றன. அப்படிப்பட்டவர்களைத் தெரிவு செய்யாமல் உண்மையான அர்த்தபுஷ்டியுள்ள வேட்பாளரைத் தெரிவு செய்யவேண்டும்.

ஏழை மக்களோடு மக்களாக செயற்படுகின்ற அனைத்து மக்களையும் சரியாகப் பார்க்கின்ற சிறந்த வேட்பாளரையே வெற்றியடையச் செய்யவேண்டும்.

அரசதலைவர் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் எப்படி இருக்க வேண்டும், அவரின் சேவை எப்படி இருக்க வேண்டும், அவர் சிறுபான்மைச் சமூகத்துக்கு என்ன செய்கின்றார், என்ன செய்யப் போகின்றார் என்ற கேள்விகள் எங்கள் மத்தியில் எழுகின்றன.

வடக்கு-கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், சிறுபான்மை மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை மிக இலகுவாக கையாள்பவராகவும் இருக்க வேண்டும்- என்றார். (த)

# அறநெறிக் கல்வி காலத்தின் தேவை

## சாந்தி எம்.பி. வலியுறுத்து

மன்னார், செப்.30

போருக்குப் பின்னர், எமது கலை, கலாசாரம், பண்பாடுகளைப் புகட்டும் அறநெறிப் பாடசாலைகளை மாணவர்கள் பயன்படுத்த வேண்டும். பெற்றோர்களும் மாணவர்களை ஊக்கப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் தலைமன்னார், மன்னார் வீதியில் அமைந்துள்ள லிங்கேஸ்வர ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது: நாம் எமது பிள்ளைக்கு எவ்வளவு சீதனம் சேர்த்து வைத்திருக்கின்றோம். எவ்வளவு தூரம் பிள்ளைகளைப் படிப்பித்து வைத்திருக்கின்றோம் என்பது பெரிய விடயமல்ல. எமது பிள்ளைகளை எவ்வளவு தூரம் பிள்ளைகளாக வளர்த்து வைத்திருக்கின்றோம் என்பதைத் தான் பார்க்க வேண்டும். மன்னார் மாவட்டத்தில் சைவத்தை வளர்த்தெடுப்பதற்கும், அதை நிலை நாட்டுவதற்கும் பல போராட்டங்களை, பல சவால்களை எதிர் கொள்கின்றோம். இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு இன்று எத்தனை குடும்பங்கள் நல்ல சூழலில் இருக்கின்றது என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கின்றது.

வீட்டில் பொழுது மறையும் நேரத்தில் சுவாமி அறையில் படத்துக்கு விளக்கு ஏற்றி, நெற்றியில் திருநீறு பூசுவோம். இப்பொழுது எத்தனை வீடுகளில் இந்த நிலை தொடர்கிறது. இது கேள்விக்குறியே. ஆறு மணி யாகியதும் வீடுகளில் தொடர் நாடகங்கள்.

நாம் ஆயிரம் கட்டடங்களைக் கட்டலாம், பெருந் தொகை நிதியைக் கொண்டு வரலாம். ஆனால் குடும்பச் சூழலை சரியாக அமைக்காவிடில் நாம் அடுத்த அடியைத் தூக்கி வைக்க முடியாது.

அறநெறிப் பாடசாலைக்குச் செல்லும் நேரத்தில், தங்கள் பிள்ளைகளை அனுப்பாது வேறு பாடங்களுக்கு அனுப்பி வைக்கும் நிலையையே நாம் காணுகின்றோம். இந்த நிலை மாற்றம் அடைய வேண்டும். ஆன்மிகம் மற்றும் ஒழுக்கமான பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் உட்பட ஒவ்வொருவரும் அக்கறை கொள்ள வேண்டும்-என்றார்.

நிகழ்வில் இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் மு.கதிர்காமநாதன், மன்னார் இந்துக் குருமார் பேரவைத் தலைவர் சிவசிறி மஹாதர்மகுமாரக் குருக்கள் கலந்து கொண்டனர். (க-60)

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைத்துச் செயற்படுக

## மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு அரச தலைவர் மைத்திரி அறிவுறுத்து

கொழும்பு, செப்.30



அரச தலைவர் தேர்தலை வெற்றிகரமாக நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

அரச தலைவர் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அரச தலைவர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று அவரது ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வித குற்றச்சாட்டுக்களுக்கும் உள்ளாகாத வகையில், பக்கசார்பற்ற முறையிலும், சுயாதீனமான முறையில் கடமைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரச தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி விக்ரமரத்ன, மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பிரதிபொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள் எனப் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ள பின்னணியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (எ)

# தற்போதைய ஆட்சியாளரே மிகவும் மோசமானவர்கள்

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, செப்.30

நாட்டு மக்களை ஏமாற்றி ஆட்சி செய்துவரும் தற்போதைய ஆட்சியாளர்களே மிகவும் மோசமானவர்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பொரளையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேருவளையில், முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் எமது காலத்தில் மேற்கொளெப்பட்டிருந்தன. இந்தச் சம்பவத்தின்போது நான் நாட்டில் இருக்கவில்லை. அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சநாட்டில் இல்லை.

அந்தச் சம்பவத்துக்குக் காரணமானவர்கள் இன்று அமைச்சுப் பதவிகளை வகித்து வருகிறார்கள். இவ்வாறானவர்கள் தான் உண்மையில் பயங்கரமானவர்கள். இவர்களின் உண்மையான முகங்கள் இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றன. நாம் என்றும் சிறுபான்மையின மக்களுக்கு எதிராகச் செயற்பட்டது கிடையாது. அவர்களுக்கான முழுமையான பாதுகாப்பை வழங்க நாம் என்றும் தயாராகவேஇருக்கிறோம். அதற்கான பொறுப்பையும் நாம் எடுக்கின்றோம்-என்றார். (எ)



# நியமனம் இடைநிறுத்தம் கண்டித்துப் போராட்டம்

மன்னார், செப். 30

கடந்த வாரம் வழங்கப்பட்ட கருத்திட்ட உதவியாளர் நியமனங்கள் தற்காலிகமாக கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நிறுத்தி வைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவற்றை வழங்குமாறும் கோரியும் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

கடந்த 16ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தில் கருத்திட்ட அலுவலர்களாக நியமிக்கப்பட்டு, தனிப்பட்ட நியமனக் கடிதங்கள் கிடைக்கப் பெற்று, மாவட்டச் செயலகத்தில் மூன்று நாள்கள் ஒப்பமிட்டபோதும் தமது நியமனங்கள் கடந்த 25 ஆம்திகதிதேர்தல்ஆணையாளரால் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அரசியல்காரணமாகவோ தேர்தல் காரணமாகவோ குறித்த நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் தேர்தல் முடிந்த பின்னர் மீள குறித்த நியமனம் வழங்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்ட பின்னரே நாங்கள் எமது கோரிக்கையை நிறைவு செய்வோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (த-56)

# மைத்திரிக்கு எதிரான மனு ஒக்.9 இற்கு ஒத்திவைப்பு

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணை எதிர்வரும் 9ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுதாபனத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்காக அரச தலைவரால் வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவித்தலை இல்லாமல் செய்ய உத்தரவிடுமாறு கோரி குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

தம்பர அமில தேரர் மற்றும் பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு கடந்த வெள்ளிக்கிழமை, நீதிபதிகள் புவனேக அலுவிஹரே, மூர்டு பெர்னாண்டோ, எஸ். துரைராஜா ஆகியோர் முன் விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மனு மீதான விசாரணை ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டது. (ஒ,5)

# ரணில், சஜித் இடையே புரிந்துணர்வு அவசியம்!

## தெவரப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, செப். 30

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் சஜித் வெற்றிபெறுவார் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் தெவரப்பெரும.

இது தொடர்பில் தெவரப்பெரும மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை தலைமை அமைச்சர் பிரேரித்துள்ளார். இது சிறந்த தீர்மானம். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த நாட்டில் மறுக்க முடியாத ஒரு தலைவர். அவர் கட்சியின் தலைவர். அவர் பல தடவைகள் இந்த நாட்டில் தலைமை அமைச்சராகப் பதவி வகித்தவர். கோத்தபாயவுக்கு சிங்கள, பௌத்த மக்களின் வாக்குகள் மாத்திரமே உள்ளன.

இருப்பினும், சஜித் பிரேமதாசவுக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மக்களின் வாக்குகள் காணப்படுகின்றன-என்றார். (ம)

# ரணிலுடைய திட்டம் இம்முறை சரிவராது

## மகிந்த கூறுகின்றார்

கொழும்பு, செப்.30

ஆளும் தரப்பின் அரச தலைவர் வேட்பாளர் யாராக இருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையில் மாற்றமில்லை. நல்லாட்சி அரசு என்ற பெயரில் ஆட்சியமைத்த மைத்திரி, ரணில் ஆகியோரது நிர்வாகத்தையே மீண்டும் அமைச்சர் சஜித் பிரேமதாச ஊடாக செயற்படுத்திக் கொள்ள தலைமை அமைச்சர் ரணில் முயற்சிக்கின்றார். தலைமை அமைச்சரின் அரசியல் திட்டம் இந்த முறை வெற்றி பெறாது என்று எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள கண்காட்சி காட்சிப்படுத்தல் அரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும் போராட்டத்துக்குப் பின்னர் ஐக்கிய தேசிய கட்சி அரச தலைவர் வேட்பாளரை அறிவித்துள்ளது. கட்சி ரீதியில் விரைவாக ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளமை தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரம சிங்கவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். நல்லாட்சி என்ற பெயரில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசின் கொள்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. கடந்த நான்கு வருட காலமாக அரசு தேசிய வளங்களை பிற நாட்டுக்கு விற்பதற்கும், அரசியல் பழி வாங்களுக்கு காலத்தைச் செலவிடுவதிலே கவனம் செலுத்தியது. பெயரளவிலே மக்களுக்கு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. மறுபுறம் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் வீதிக்கு இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் வேட்பாளராக போட்டியிட்டால் மக்கள் நிச்சயம் அவரை புறக்கணிப்பார்கள். அதன் காரணமாகவே அவர் பொது வேட்பாளர் ஊடாகத் தலைமை அமைச்சர் பதவியை தனதாக்கிக் கொள்ள முயற்சிகளை ஆரம்பத்தில் இருந்து மேற்கொண்டு வெற்றியும் பெற்றார்- என்றார். (எ)

# அமெரிக்கப் பயணத்தை நிறுத்திய மைத்திரிபால!

கொழும்பு, செப்.30

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. பொதுச்சபையின் 74 ஆவது கூட்டத்தொடரின் பொது விவாதம், செப்ரெம்பர் 24ஆம் நாள் ஆரம்பித்தது. இந்த விவாதம் இன்றுடன் முடிவடைகிறது. இந்த கூட்டத்தொடரில் பங்கேற்க மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டிருந்தார். அதற்கானஒழுங்குகளைஅரசதலைவர் செயலகம் மேற்கொண்டிருந்தது.

கடைசி நேரத்திலேயே, அரச தலைவரின் பயணம் நிறுத்தப்பட்டுள்ளதுஎன்றுஅறிவிக்கப்பட்டு, இலங்கைக் குழுவுக்குவெளிவிவகாரச்செயலர்ரவிநாதஆரியசிங்க தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதில் இருந்து அரச தலைவர் விலகிக் கொண்டதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தால், நாட்டின் மிக முக்கியமான அரசியல் நகர்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்நிலையில், அவரால் நாட்டில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரங்களைக் கருத்தில் கொண்டே, அமெரிக்கப் பயணத்தை மைத்திரிபால சிறிசேன கடைசி நேரத்தில் நிறுத்தியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (எ)

# நிரந்தர அரசியல் தீர்வை விரைவுபடுத்தவேண்டும்

## வலியுறுத்துகிறார் ஜெயசேகரன்



யாழ்ப்பாணம், செப்.30

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கை அரசும், பன்னாடுகளும் விரைவுபடுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இ.ஜெயசேகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் வளாகத்தில் பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டமை மற்றும் சட்டத்தரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆலய வளாகத்தில் பிக்குவின் உடலை எரித்தமை சட்டத்துக்கும், நீதிக்கும் புறம்பான செயல். இந்த நாட்டின் சட்டத்துக்கும், நீதிக்கும் எல்லா மக்களும் கட்டுப்பட்டவர்களே? இதில் எவருக்கும் விதி விலக்கில்லை என்பதை அரச தலைவரும், தலைமை அமைச்சரும், முதன்மை நீதியரசரும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பல விடயங்களில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக சட்டத்தை மீறி சில பௌத்த பிக்குமார் மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள் கண்டிக்கப்பட வேண்டியவை. நீராவியடிப் பிள்ளையார் ஆலய விடயத்தில் முற்று முழுதாகச் சட்டமும், நீதியும் மீறப்பட்டுள்ளன.

இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களும் சட்டத்துக்கு கட்டுப்பட்டவர்கள் என அரசு கருதினால் உடனடியாகச் சட்டத்தை மீறிச்செயற்பட்ட பௌத்த பிக்குகளுக்கு எதிராகவும், அவர்களுக்குத் துணை நின்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகவும் உடனடியாகச் சட்ட நடவடிக்கை வேண்டும்.

இதன் மூலமே நீதித்துறை மீது சகல மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும். போர் முடிவுற்ற பின்பு நாங்கள் போரில் வென்று விட்டோம் என்ற மமதையில் தமிழ் மக்கள் மீதும், இந்து ஆலயங்கள் மீதும் அடக்கு முறைகள், அடாவடித்தனங்கள், அத்துமீறல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களுக்கு பல வகையில் ஆத்திரம் ஊட்டும் நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர். இதை இலங்கை அரசும், பன்னாடுகளும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. போரின் போது இலங்கை அரசுக்கு ஆதரவை தெரிவித்த உலக நாடுகள் போர் முடிவுற்ற பின்பு 10 வருடங்கள் கடந்தும் தமிழ் மக்களுக்குரிய தீர்வைப் பெற்றுத்தரவில்லை.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் மூத்த குடிமக்கள். இந்த மக்களின் கலை, கலாசாரம், பண்பாடுகள், ஆட்சி அதிகாரங்கள், பாரம்பரிய தமிழ் மக்களின் பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காகவே தமிழ் மக்கள் கடந்த 70 வருடங்களாகப் போராடுகிறார்கள். எனவே தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை வழங்க இலங்கை அரசும், பன்னாடுகளும் விரைவாகச் செயற்படவேண்டும் - என்றுள்ளது. (க)

# தற்கொலைதாரியின் உடற்பாகங்கள் காத்தான்குடி மையவாடியில் புதைப்பு

கொழும்பு, செப். 30



மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட மொஹமட் ஆசாத்தின் உடற்பாகங்கள் காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசல் மையவாடியில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் புதைக்கப்பட்டது.

உடற்பாகங்களை, காத்தான்குடி பிரதேச செயலர் மற்றும் கிராம அலுவலர் பொறுப்பேற்று கடந்த வெள்ளிக்கிழமையே பள்ளிவாசல் மையவாடியில் புதைக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த தற்கொலைக் குண்டுதாரியின் தலை மற்றும் உடற்பாகங்கள் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. இந்த உடற்பாகங்களை அரச செலவில் புதைக்குமாறு மாவட்டச் செயலருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது.

இதனையடுத்து மட்டக்களப்பு புதூர் ஆலையடி மயானத்தில் குறித்த உடற்பாகங்களை புதைப்பதற்கு முயற்சித்த போது பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து பல்வேறு இடங்களில் உடற்பாகங்களை புதைக்க முற்பட்டபோதும் அந்தந்த பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் சில உள்ளூராட்சி மன்றங்கள், மாநகரசபைகள் இதனை தமது பிரதேசத்தில் புதைப்பதற்கு எதிராக தீர்மானம் எடுத்திருந்தனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்தில் இரவோடு இரவாக இந்த உடற்பாகங்கள் புதைக்கப்பட்டன. இதனையடுத்து பொதுமக்கள், அரசில்வாதிகள் இதற்கு எதிராக வீதியில் இறங்கி போராடினர். கள்ளியங்காடு இந்து மயானத்தில் புதைக்கப்பட்ட உடற்பாகங்களை நீதிமன்ற உத்தரவுக்கமைய மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு, மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்ட நிலையில், இதனை பொருத்தமான இடத்தில் மாவட்டச் செயலர் ஊடாக புதைக்குமாறு நீதிவான் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு கட்டளையிட்டார். இதற்கமைய குறித்த உடற்பாகங்கள் கடந்த வெள்ளிக்கிழமை புதைக்கப்பட்டுள்ளன. (ஒ.5)

# உயிரிழந்த நிலையில் யானைகள் மீட்பு

கொழும்பு, செப்.30

ஹபரணை ,ஹிரிவதுன்ன வாவிக்கு அருகில் நேற்று முன்தினம் நான்கு யானைகள் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்திருந்த நிலை யில் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமையும் மற்றும் நேற்று முன்தினமும் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட யானைகளின் தொகை 7 ஆக உயர்ந்துள்ளது. யானைகளின் உயிரிழப்புக்குக் காரணம் தொடர்பாக வன விலங்கு அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து ஆராய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (எ)

# சமூக வலைத்தளங்கள் மூலம் போலிப் பரப்புரை

## மகிந்த ராஜபக்ச குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.30

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச மீது சேறு பூசுவதற்குச் சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தொடர்பாகப் போலியானபரப்புரைகள்மேற்கொள்ளப்படுகின்றன. கோத்தபாயமீதுசேறு பூசுவதற்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

ஆனால் , பொதுமக்களை இவ்வாறான பொய்ப் பரப்புரைகள் மூலம் தவறாகவழிநடத்தமுடியாது. கோத்தபாய ராஜபக்ச உடல்நலப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளார் எனச் சித்தரிக்கும் விதத்தில் சமூக ஊடகங்களில் படங்களை வெளியிடுகின்றார்.

கோத்தபாயவின் உடல்நிலைக்கு ஏதாவது பாதிப்பா எனக் கேட்டு எனக்குப் பல தொலைபேசி அழைப்புக்கள் வந்துள்ளன. பொய்யான தகவல்களை மக்கள் நம்பக்கூடாது என்று கூறியுள்ளார். (எ)



# ஊழல் அதிகரித்துள்ளதால் முன்னேற முடியாதுள்ளது

## கொழும்புப் பேராயர் கருத்து

கொழும்பு, செப்.30

ஊழல் அதிகரித்து காணப்படுவதால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாத நிலமை உள்ளது என்று கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுமுதலாளிகள் முதல் உயர் இடங்களில் உள்ளவர்கள்வரை ஊழல் பாதையிலேயே பயணிக்கின்றனர். அதற்கு எதிராகச் செயற்படாவிடின் இலங்கையை முன்னேற்றப் பாதையின் கீழ் கொண்டு செல்ல முடியாது. நாம் எவ்வளவுகூறினாலும் மீண்டும் மீண்டும் செய்யக்கூடாத விடயங்களையே செய்கின்றனர். முதுகெலும்பு இல்லை என்று நான் ஏற்கனவே கூறியுள்ளேன்.

**மத வாழ்க்கையை முதுகெலும்பாக வாழ்வதன் முக்கியத்துவத்தை எம் மக்கள் மறந்து விட்டார்கள். நாம் சமுதாயத்தைச் சுத்தம் செய்யவேண்டும்.**

மத வாழ்க்கையை முதுகெலும்பாக வாழ்வதன் முக்கியத்துவத்தை நம் மக்கள் மறந்து விட்டார்கள். நாம் சமுதாயத்தை சுத்தம் செய்ய வேண்டும். ஒரு சிந்தனைப் புரட்சி தேவை. உயிர்த்தஞாயிறுபயங்கரவாததாக்குதல்களின் போது இறந்த உடல்களுடன் கத்தோலிக்க தேவாலயங்களை முதன்முதலில் பார்வையிட்டபோது அதிர்ச்சியடைந்தேன்.

எனது மதக் கடமைகளை முறையாக நிறைவேற்றாதமையினால்தான், இந்த நிலமை ஏற்பட்டது என என்னை நானே குற்றஞ்சாட்டிக் கொண்டேன்- என்றார். (எ)

# மாகாண சபை அதிகாரத்தை பறித்தெடுத்தவர் பிரேமதாசவே

## விக்கி இதை அறியாமலுள்ளார் என்பது வெட்கமாகவுள்ளது என்கிறார் தவராசா

யாழ்ப்பாணம், செப். 30

13ஆம்திருத்தச்சட்டத்தின்மூலம் மாகாணசபைகளுக்குக்கிடைத்த அதிகாரப் பகிர்வையும் மாகாண சபைச் சட்டத்தில் பிரதேச செயலகங்களை உருவாக்கியதன் மூலமாகப் பறித்தெடுத்தவர் பிரேமதாச என்பதைக் கூட அறியாத ஒருவரே எமது மாகாணத்துக்கு முதலமைச்சராக இருந்தவர் என்பதனை எண்ணி வெட்கப்படுகின்றேன் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித்தலைவர்சி. தவராசாதெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கான பதில் என முன்னாள்முதலமைச்சர்விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் ஆங்கில மொழியில் அனுப்பி வைத்துள்ளார். அது தொடர்பில் தவராசா நேற்று அனுப்பிய வைத்த செய்திக்குறிப்பில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்குக் கிடைத்த பல அதிகாரங்களைப் பறித்தும் சில பகிர்வையும் மாகாணசபைச்சட்டத்தில்இல்லாமல்செய்ய மாற்றுச் சட்டங்களை உருவாக்கியவர் பிரேமதாசவே. மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்களைப் பறித்தெடுத்தார். அதனாலேயே மாகாண சபை வலுவிழந்தது. 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திருத்தச் சட்டத்தை சமர்ப்பிக்கும்போது மாகாண சபைச் சட்ட வரைபிலேயே சமர்ப்பிக்கப்பட்டது. அதில் ஆளுநருக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டது.

பிரேமதாசா 1992ஆம் ஆண்டு நாடு பூராகவும் இருந்த உதவி மாவட்டச் செயலர் பணிமனைகளைபிரதேசசெயலகங்களாகத் தரமுயர்த்தி மாகாண சபையிடம் இருந்த மேலும் பல அதிகாரங்களை பறித்தெடுத்தார். இதன் மூலம் மாகாண சபையின் கீழ் இருந்த பல செயலகங்கள் பிரதேச செயலகங்களின் கீழ் சென்றன.

அதில் கலாசார அலுவலர்கள், விளையாட்டு அலுவலர், சமூக சேவை, கிராமிய அபிவிருத்தி, சிறுவர்பாதுகாப்பு, சிறுகைத்தொழில் அபிவிருத்தி போன்றவற்றின் அலுவலர்களுடன் காணி அலுவலர்கள் போன்றவர்களும் உள்ளடங்குவர். இந்த அலுவலர்கள் மாகாண சபையின் அலுவலர்கள்.

இவற்றையெல்லாம் செய்த பிரேமதாசாவின்நடவடிக்கைகள் தொடர்பில் அறியாதவரே முதலமைச்சராக 5 ஆண்டுகள் ஆட்சி செய்தமை கவலைக்குரியது.

இவ்வாறு செய்தவரின் மகனான சஜித் பிரேமதாச எந்தளவுக்கு தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை வழங்குவார் என்பதில் சந்தேகமே உள்ளது.

சஜித் பிரேமதாச நடைமுறைச் செயற்பாட்டாளர் என்றும் அரச தலைவராகத் தெரிவானால் திறமையான அரசதலைவர் என்பதனை நிரூபிப்பார் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இன்றும் தமிழ் மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் முக்கிய திணைக்களங்களில் ஒன்று இவர் வசமே உள்ளது. அதாவது சஜித் பிரேமதாசவே இன்றும் தொல்லியல் திணைக்களத்தின் அமைச்சர்.

இதனால்முன்னாள்முதல்வரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமுமான சி. வி. விக்னேஸ்வரனின் பதிலைப்பார்த்து கவலை அடைகின்றேன்- என்றுள்ளது. (த-105)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் மக்களுடன் சந்திப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முல்லைத்தீவு குமுழமுனை மக்களை நேற்றுச் சந்தித்தனர்.

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டபகுதிகளில்நிலவும்மக்களின் குறைபாடுகள், காணி அபகரிப்புகள், சட்ட விரோதமற்றும்வெளிமாவட்டமீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள், அரச தலைவர் தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் மக்களுடன் கலந்துரையாடப்பட்டன.

சந்திப்பில்நாடாளுமன்றஉறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம். ஏ. சுமந்திரன், சாந்தி சிறீஸ்கந்தராசா, சி. சிவமோகன் ஆகியோரும், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான து. ரவிகரன் மற்றும், ப. சத்தியலிங்கம், கே. சயந்தன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சி. லோகேஸ்வரன், ம. தொம்மைப்பிள்ளை, வை. கெங்காதரன், கி. சிவலிங்கம் மற்றும் பிரதேசத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (க-246)



# போதைப்பொருளைக் கண்டறியும் உபகரணத்தை வழங்கியது சீனா

கொழும்பு, செப். 30

போதைப்பொருள்கள் மற்றும் வெடிபொருள்களைக் கண்டறியக்கூடிய 750 மில்லியன் ரூபா பெறுமதியான அதிநவீனஉபகரணங்களை சீன அரசு இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. சீனத் தூதுவர் அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் உத்தியோகபூர்வமாக இந்த நவீன உபகரணத்தைக் கையளித்துள்ளார். (ம)

### மானிய விலையில்

# உ.கிழங்கு விதைகள் வழங்கவென 45 மில்லியன் ரூபா அரசு ஒதுக்கீடு

### ஒவ்வொருவருக்கும் தலா 200 கிலோ

அச்சுவேலி, செப். 30

**யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் இந்த வருடம் விதை உருளைக்கிழங்கு வழங்குவதற்கு 45 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் அரச தலைவர் செயலகம் 22 மில்லியன் ரூபாவும் கொழும்பு விவசாய அமைச்சு 23 மில்லியன் ரூபாவும் ஒதுக்கியுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்தது.

யாழ்ப்பாண மாவட்ட உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 'சசி' ரக விதை உருளைக்கிழங்கு கடந்த காலங்களில் நல்ல விளைச்சலைக் கொடுத்திருப்பதால் இந்த வருடம் 'சசி' ரக விதை உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

280 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படவுள்ளது. விதை உருளைக்கிழங்கின் இறக்குமதி விலையில் 50 வீதத்தைப் பயனாளிகள் ரொக்கமாக செலுத்தி விதை உருளைக்கிழங்கைக் கொள்வனவு செய்ய வேண்டும். இந்த வருடமும் நான்கு பெட்டிகள் (200 கிலோ) ஒவ்வொரு விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. விதை உருளைக்கிழங்கின் விலை கடந்த வருடங்களிலும்விட இந்தமுறை அதிகரித்திருப்பதாக அறியப்படுகின்றது.



விதை உருளைக்கிழங்குகள் பயனாளிகள் தெரிவில் சில தவறுகள் குறைபாடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளையடுத்து இந்த வருடம் பயனாளிகள் தெரிவில் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், கிராம அலுவலர் மற்றும் விவசாய சம்மேளனம், உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பரிந்துரைகளுடன் பயனாளிகள் தெரிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த வருடம் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரிய கால வேளையில் நடுகை செய்வதற்கு விதை உருளைக்கிழங்கை வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண மாவட்டச் செயலக விவசாய பிரிவு மேற்கொண்டு வருகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-11)

## சிறிகஜன் பற்றிய அறிக்கையை 18க்கு முன் சமர்ப்பிக்க உத்தரவு

யாழ்ப்பாணம், செப்.30

புங்குடுதீவு மாணவி வன்புணர்வுக்குப் பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் முக்கிய குற்றவாளியை விடுவிக்க உதவியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் இரண்டாவது சந்தேக நபரான முன்னாள் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தலைமறைவாகியுள்ளமை தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்துவரும், ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கு முன்னர் மன்றில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

புங்குடுதீவு மாணவி படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விடுவித்து உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உபபொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சுவிஸ்குமார் என்பவரை சட்டமுறையற்ற வகையில் பொலிஸ் காவலில் இருந்து விடுவிக்க உதவியதன் மூலம் தண்டனைச் சட்டக் கோவை 209ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றமொன்றைப் புரிந்தமை மற்றும் அதற்கு ஒத்துழைத்தன் மூலம் 109ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 209ஆம் பிரிவின் கீழான குற்ற மொன்றைப் புரிந்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவருக்கும் எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றப் பத்திரிகையில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா உட்பட 30 பேர் வரையில் சாட்சிகளாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

முதலாவது சந்தேக நபரான வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க முன்னிலையானார். இரண்டாவது சந்தேகநபர் தொடர்ந்து தலைமறைவாகியுள்ளதால் அவர் மன்றில் முன்னிலையாகவில்லை. வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் முன்னிலையானார்.

வழக்கில் இரண்டாவது சந்தேகநபரான முன்னாள் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தலைமறைவாகியுள்ளமை தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கடந்த தவணையில் உத்தரவிட்டிருந்தது. அதுதொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவு சார்பில் முன்னிலையான அதிகாரியிடம் மன்று கேள்வி எழுப்பியது.

விசாரணைகள் நிறைவடையவில்லை என்று அதிகாரி மன்றுரைத்தார். விசாரணையை விரைவுபடுத்தி உரிய அறிக்கையை வரும் 18ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் அன்று வரை வழக்கு விசாரணைகளை ஒத்திவைத்தார்.(எ-37)

# நகரங்களுக்கு நகரும் மாணவர்களால் கிராமப் பாடசாலைகளுக்கு நெருக்கடி

*தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு*

கொடிகாமம்,செப்.30

கிராமப் பாடசாலைகளில் பௌதிக வளங்கள் இல்லை என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டால், மாணவர்களின் தொகை விவரம் கேட்கப்படுகிறது. மாணவர்கள் குறைவாக இருப்பதால் உரிய தேவைகளைப் பெற முடியாது.

இதனால் கிராமப்புற மாணவர்கள் நகரப் பாடசாலைகளை நோக்கிச் செல்கின்றனர். மாணவர் தொகை வீழ்ச்சியடையும் போது, கிராமப் பாடசாலைகளுக்கு இத்தகைய நெருக்கீடுகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதில் அவர் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

தென்மராட்சிப் பிரதேசத்தில் அதிகமான பாடசாலைகளுக்கு பௌதிக வளங்கள் இல்லை. உரியவர்களிடம் கதைத்தால் எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள் என்று கேட்பார்கள். அதிக மாணவர்கள் இருக்கின்ற பாடசாலைகளே அபிவிருத்தியில் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

தென்மராட்சி வலயத்தில் 58 பாடசாலைகள் இயங்குகின்றன. 58 பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 13 ஆயிரம். ஆசிரியர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஆயிரத்து155. இலங்கையில் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆளணி வீதத்தைப் பார்த்தால் ஒரு ஆசிரியருக்கு 17 மாணவர்கள் என்ற வீதத்தில் இருக்கும். தென்மராட்சி வலயத்தில் ஏறக்குறைய ஒரு ஆசிரியருக்கு 12 மாணவர்கள் இருக்கும். ஆனால், இந்தப் பாடசாலையில் 62 மாணவர்கள் உள்ளனர். மூன்று மாணவனுக்கும் ஒரு ஆசிரியர் என்ற நிலை காணப்படுகிறது.

இந்தப் பாடசாலையில் எந்தவொரு பாடத்திலும் ஆசிரியர் பற்றாக்குறை இல்லாதிருக்கும் முறையில் ஆசிரியர்களை நியமித்துள்ளோம். எங்களுடைய நோக்கம் பின்தங்கிய, பொருளாதார வசதி அல்லது போக்குவரத்து வசதி குறைந்த பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் கற்க வேண்டும் என்ற அடிப்படையிலே நியமித்திருக்கின்றோம்.

மாணவர்கள் நல்ல அடைவைப் பெற வேண்டுமானால், ஆசிரியர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும்.பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

பாடசாலையில் இருக்கின்ற வளங்களை வைத்து எங்களுடைய நோக்கம் செயற்பாட்டை சரியாக நாம் வெளிப்படுத்துவோமாக இருந்தால் இந்தப் பாடசாலையை நோக்கி பல்வேறு இடங்களில் இருந்தும் மாணவர்கள் வருவார்கள்.

இந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற ஏனைய மாணவர்களும் பாடசாலையை நோக்கி வரக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். மாணவர்கள் நகர்ப்புறத்தை நோக்கிச் செல்கின்ற போது கிராமப்புறத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இப்படியான நெருக்கீடுகள் ஏற்படும்- என்றார்.(க-159)




## பேருந்து மோதி உந்துருளியில் பயணித்தவர் காயம்

சாவகச்சேரி,செப்.30

வீதியால்சென்றுகொண்டிருந்த உந்துருளியை, பின்னால் பயணித்த அரச பேருந்து மோதியது. அதில் உந்துருளியில் பயணித்த நபர் காயமடைந்தார்.

இந்த விபத்து சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் ஏ -9 முதன்மை வீதியில் நேற்றுக் காலை நடந்தது.

சாவகச்சேரியை நோக்கி உந்துருளியில் குறித்த நபர் சென்று கொண்டிருந்தபோது, நுணாவில் கிழக்கு வைரவர் கோயிலுக்கு முன்பாக விபத்து நடந்துள்ளது.

அராலி தெற்கு சங்கரத்தையைச் சேர்ந்த நபர் விபத்தில் காயமடைந்தார்.அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-9)

## சிறுவர் தினமும் சேவை நயப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,செப்.30

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் சிறுவர் தினமும், முதியோர் தின சேவை நயப்பு விழாவும், நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும்நிகழ்வில், முதன்மை விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியர் ஞான திருக்கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (க)



## கிளைமோர்கள் மீட்கப்பட்டன

முல்லைத்தீவு, செப். 30

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுதந்திரபுரம்பகுதியில்தனியார் ஒருவரின் நிலத்தை நேற்றுமுன்தினம் உழவு செய்யும்போதுகடந்தகால போரின் போது புதைக்கப்பட்ட ஒரு தொகுதி வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு வீட்டின் உரிமையாளரால் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் 8 கிளைமோர் குண்டுகளையும், 60 ரிக்னெட்டர்களையும் அடையாளம் கண்டனர்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அதனை அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஒ.5,ரி3)

## முன்னாள் ஆயப் பணிப்பாளருக்கு 8 ஆம் திகதி வரை விளக்கமறியல்

கொழும்பு, செப். 30

முன்னாள் ஆயப் பணிப்பாளர் நாயகம் ஜகத் பீ விஜேவீர மற்றும் முன்னாள் மேலதிக பணிப்பாளர்நாயகம்தாரகசெனவிரத்னஆகியோரைவிளக்கமறியலில் வைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர்கோத்தபாயவின் ஆலோசனை மற்றும் கோரிக்கைக்கு அமைவாக அநுராதபுரம் 'சந்த ஹிரு சேய' தூபியில் வைப்பதற்காக தங்கத்திலான சமாதி நிலை புத்தர் சிலையைஅமைப்பதற்கு யாழ். மாதகல் கடலில் கைப்பற்றப்பட்ட ஒரு தொகை தங்கத்தில் 8 கிலோவை கடற்படைக்கு வழங்கிய குற்றச்சாட்டில் முன்னாள் ஆயப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் தாரக செனவிரத்ன ஆகியோரை நிதிக் குற்றப் பிரிவினர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்திருந்தனர்.

இந்தநிலையில், இவர்களைகொழும்புகோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம்சனிக்கிழமைமுற்படுத்தியபோது எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க குறிப்பிட்டசிலைஅமைப்பு தொடர்பானவழக்குவிசாரணைகளின்போதுமேற்படி இருவரையும் நீதிமன்றில்முற்படுத்துமாறு உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்.

எனினும், ஆயப் பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் கடந்த ஒருவாரகாலமாக தமதுஇல்லங்களைவிட்டு வெளியேறி, மறைந்திருந்த நிலையில் முன்னாள் பணிப்பாளர் சிறிஜயவர்த்தனபுரமருத்துவமனையிலும், மேலதிக பணிப்பாளர் பதுளை மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்தேஅவர்கள்கைதாகியிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

(ஒ.5,22,71)

## ஹெரோய்ன் வைத்திருந்ததாக வவுனியாவில் இளைஞன் கைது

வவுனியா, செப். 30

வவுனியா, தேக்கவத்தை பகுதியில்ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தார்என்றுதெரிவித்து இளைஞர் ஒருவரை வவுனியா பொலிஸ் நிலைய போதைத் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாகநேற்றுமுன்தினம்தேக்கவத்தைபகுதிக்குச் சென்ற பொலிஸார், இளைஞனிடம்சோதனைகளை மேற்கொண்டனர். இதன்போதே அவரிடமிருந்து 520 மில்லிகிராம் ஹெரோய்னை கைப்பற்றியதாகப் பொலிஸார் கூறுகின்றனர். (ஒ.5,110)

### 5 அம்சக் கோரிக்கையை ஏற்காவிட்டால்

# அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொள்ளுங்கள்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தமிழர் மரபுரிமை பேரவை கோரிக்கை

முல்லைத்தீவு, செப். 30

அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைக்க வேண்டுமென்றும், அதை அரசுநிறைவேற்றத்தவறினால், அரசுக்கு வழங்கும் ஆதரவை கூட்டமைப்பு விலக்கிக் கொள்ள வேண்டுமென்றும்தமிழர் மரபுரிமை பேரவை வலியுறுத்தியுள்ளது. அத்துடன், கூட்டமைப்பின்செயற்பாடுகள்குறித்துவிமர்சனங்களையும் முன்வைத்துள்ளது.



தமிழர் மரபுரிமை பேரவைக்கும், தமிழ் அரசு கட்சிக்குமிடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. முல்லைத்தீவு கோவில்குடியிருப்பிலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன், திருமதிசாந்திசிறிஸ்கந்தராசா, சிவமோகன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், கேசவன் சயந்தன், சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவர்கள் வணபிதா ஆம்ஸ்ரோங்அடிகளார், நவநீதன், மருத்துவர் க.சுதர்சன், நீராவியடிப் பிள்ளையார்ஆலயநிர்வாகத்தினர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழர்மரபுரிமை பேரவை பிரதிநிதிகள் உரையாற்றியபோது, நீராவியடிப் பிள்ளையார் ஆலய சர்ச்சை நடந்து நீண்டநாளாக மௌனமாக இருந்து விட்டு, சட்ட விவகாரங்களிலும் சம்பந்தப்படாமல் இருந்துவிட்டு, இப்பொழுது கலந்துரையாட வருவதற்கு அதிருப்தி தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் சட்டபூர்வமான உதவிகளை உங்களிடம் கோரவில்லை, அரசியல்ரீதியாக நீங்கள் செய்ய வேண்டியவற்றை செய்ய வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு என்று தமிழர் மரபுரிமை பேரவையினர்தெரிவித்தனர்.

அரசஅனுசரணையுடன்கொழும்பு அரச நிர்வாக கட்டமைப்புக்களால் வடக்கு - கிழக்கு பகுதிகள் மீது மேற்கொள்ளப்படுகின்றதிட்டமிட்ட அடிப்படைஉரிமை மீறல்கள்தொடர்பாக பின்வரும்அவசரநியாயபூர்வமான கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் தமிழ் மக்களின் பூர்வீக ஆலயமாகும். இவ்வாலயத்தைத் திட்டமிட்டு ஆக்கிரமித்து பௌத்த விகாரை அமைப்பதைஉடன்நிறுத்தகாத்திரமான அரசியல் அழுத்தங்களை வழங்க வேண்டும்.

வடமாகாணத்தில் அரசிதழில் பிரசுரம்செய்யப்பட்டதொல்லியல்பிரதேசங்கள், நம்பகத்தன்மையான தமிழ்த் தொல்லியல் ஆய்வாளர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், யாழ்ப்பாணப் பல்கலைகழகம், குறித்த பிரதேசங்களின் உள்ளூர் நிர்வாக மற்றும் கிராம மட்ட மக்களின்பங்களிப்புக்கள்உடன்அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு இறுதிசெய்யப்படும்வரை, அரசிதழ் அறிவித்தலில் குறிப்பிட்ட இடங்களில் தற்போதுள்ள இடங்களை விட மாற்றங்கள் திரிபுபடுத்தல்கள் புதிய கட்டுமானங்கள் மேற்கொள்ளப் படாது பேணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அரசாணை ஒன்றினைஉடன்வெளியிடகுறித்த அமைச்சிடம் இருந்து எழுத்துமூலமான வாக்குறுதி பெறப்பட வேண்டும்

வடமாகாணத்தில்மகாவலிஎல்அபிவிருத்தி வலயம் மூலம் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களமயமாக்கல் தற்போதும்தொடர்ந்து இடம்பெறுவதால் குறைந்தபட்சம் 2007 ஆம் ஆண்டுஅரசிதழ்அறிவித்தல்மீளப்பெறப்படுவதுடன் 1988 ஆம் ஆண்டு அரசிதழ் அறிவித்தல் எல்லைக்கிராம தமிழ் மக்களின் பங்குபற்றலுடன் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். வரும் நாள்களில்மகாவலி அதிகாரசபையினூடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டு மாகாண திணைக்களங்களூடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஜி. பி. எஸ். தொழில்நுட்பத்தை பயன்படுத்தி2009ஆம்ஆண்டின் பின்னர் அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட ஒதுக்கக் காடுகள் தொடர்பான எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்

வனஉயிரிகள் திணைக்களத்தால் 2009 ஆம் ஆண்டு அரசிதழ் பிரசுரம் செய்யப்பட்ட தேசிய பூங்கா மற்றும் இயற்கை இடங்கள் மக்களின் குடியிருப்பு வாழ்வாதாரம் என்பவற்றுடன் தொடர்புடையது.

ஆகையால் இவற்றுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் மீள் எல்லை நிர்ணயம்செய்யப்படவேண்டும்என்பதுடன்மக்கள் குடியிருப்புக்கள் கலாசாரம் வாழ்வாதாரம் என்பன பாதிக்கப்படா வண்ணம் அரசாணை ஒன்று உடன் வெளியிடப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நியாயபூர்வ கோரிக்கைகள் தொடர்பாக அரசு செவிசாய்க்க தவறும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்கள்அரசுக்குவழங்கும்ஆதரவைமீள்பரிசீலனைசெய்ய வேண்டும் என்று விநயமாக கேட்டுக் கொள்கிறோம் என்று குறிப்பிட்டனர். தமது கோரிக்கைகளை எழுத்துமூலமாககூட்டமைப்பினரிடம்வழங்கினர்.

(ஒ.5,105,246)

## ரணில்...

எதற்காக இந்த அவசர சந்திப்பு இடம்பெறுகின்றது என்பது தொடர்பில் எந்தத் தகவலும் தெரியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளதால், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளதாக அறியமுடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்ற சகல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் திரும்பத் திரும்பக் கூறிவருகின்ற நிலையில், ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் எழுத்துமூல உடன்பாட்டை மேற்கொள்ள முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச அறிவித்திருந்தார். அவர் அவ்வாறு உடன்பாட்டுக்கு மறுத்தால் அவரை ஆதரிப்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாகவே கூறவுள்ளது.

இன்றைய சந்திப்பில் அரச தலைவர் தேர்தல் தொடர்பிலோ அல்லது சஜித் பிரேமதாச கலந்துகொண்டாலோ இந்த விடயத்தை நேரடியாகக் கூறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை முடிவு செய்துள்ளது.

கடந்த தடவை ஆதரிக்கும்போது எழுத்துமூல உடன்பாடு மேற்கொள்ளப்படவில்லை. அது சரியான முடிவு. அப்போது அப்படியொரு நிலமை இருந்தது. அவ்வாறு எழுத்துமூல உடன்பாடு மேற்கொள்ளப்படாதது இப்போதும் சரியான முடிவு. ஆனால் நிலமை இப்போது வேறு. புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் எங்களின் நிலைப்பாடு என்ன என்பது நாட்டுக்கே முழுமையாகத் தெரியும். புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் எவ்வளவோ விடயங்களில் நாங்கள் விட்டுக் கொடுத்துள்ளோம். இதற்காக எமது மக்களின் எதிர்ப்பையும் நாம் சம்பாதித்துள்ளோம். இவ்வாறான நிலமையில் எங்களுடன் உடன்பாடு செய்து கொள்வதும் அதனைச் சிங்கள மக்களிடம் சொல்வதும் பிரச்சினைக்குரியதாக இருக்காது இதனை இன்றைய சந்திப்பில் கூட்டமைப்பு சுட்டிக்காட்டும் என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ.5)

## யாருமே...

பெற்றது. இதில் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் முன்னாள் அரச தலைவர் அமரர் ரணசிங்க பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பிலும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ச சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் சார்பிலும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் சார்பிலும் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ளார்கள்.

இந்தப் பிரதான மூன்று கட்சிகளின் வேட்பாளர்களுடனும் அந்தக் கட்சிகளின் தலைமைகளுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்தனியாகப் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றது. அதேவேளை, அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் கருத்துக்களையும் கேட்டறிவோம்.

இந்தப் பேச்சுக்கள் மற்றும் சந்திப்புக்களின் பிரகாரம் எந்த வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நாம் எடுப்போம். அவசரப்பட்டு தீர்மானம் எடுக்கமாட்டோம். அதேவேளை, எவரும் எதிர்பாராத தீர்மானத்தையும் நாம் எடுக்கக்கூடும் - என்றார்.

கெருடாவில் நற்பணி மன்ற மண்டபத்தில் நற்பணி மன்றத் தலைவர் வெ.பிறேமதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன், பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ.5,22,173)

## கோத்தாவின்...

மக்கள் ஆதங்கம் வெளியிட்டனர்.

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில், கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் பணிமனை நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கு மக்களை ஏற்பாட்டாளர்கள் ஏமாற்றி அழைத்து வந்துள்ளனர்.

விதவைகள், மாற்றுத் திறனாளிகள், முதியோர் ஆகியோருக்கு உதவித் தொகை வழங்கப்படவுள்ளதாக ஆசை வார்த்தை கூறி, பொதுமக்களை ஏற்பாட்டாளர்களை அழைத்து வந்துள்ளனர். ஆனால், அவ்வளவு பொதுமக்களையும் வைத்து ஒளிப்படங்களை எடுத்து பெரும் எடுப்பில் பணிமனையை திறந்து வைத்துள்ளனர்.

'உதவித்தொகை மட்டுமில்லை, எங்களுக்கு சாப்பாடு கூட தராமல், ஒரு கப் ஜூஸை மட்டும் தந்து ஏமாற்றி விட்டார்கள்' என்று அதில் கலந்து கொண்ட பொதுமக்கள் விசனம் வெளியிட்டனர். (ஒ.5)

## மொட்டுச்...

தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் குருநாகல் மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அரச தலைவருக்கான அதிகாரங்களை மகிந்த ராஜபக்ச அதிகரித்துக்கொண்டார். இதனை மக்கள் நிராகரித்தனர். எனக்கும் கட்சியைவிட்டு வெளியேறிய வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் அன்று எடுத்த முடிவு பிழையெனில் அரச தலைவர் தேர்தலில் மக்கள் என்னை நிராகரித்திருப்பார்கள். அவ்வாறு நடைபெறவில்லை. மாற்றத்துக்காக மக்கள் வாக்களித்தனர்.

கடந்துள்ள ஐந்தாண்டுகளில் நான் என்ன செய்துள்ளேன் எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். முதலாவதாக ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் நாட்டு மக்களுக்கு வழங்கினேன். ஆனால், அந்த சுதந்திரத்தை சிலர் இன்று தவறாகப் பயன்படுத்துகின்றனர்.

எனக்கு முன்னர் நிறைவேற்று அதிகார அரச தலைவர் பதவியை வகித்த ஐவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகளில் ஒன்றேனும் எனக்கு எதிராக இல்லை. கொலைகள், அரசியல் பழிவாங்கல், அரசியல் தலையீடு, அதிகார முறைகேடு என்று எனக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவில்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையைப் பறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்கு அன்று முயற்சித்தனர். அதன்பின்னரும் பல தடவைகள் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. கட்சி பல கூறுகளாகப் பிளவுபட்டது. பண்டாரநாயக்கவின் குடும்ப உறுப்பினர்கள்கூட புதிய கட்சியை ஆரம்பித்தனர். ஆனால், சுதந்திரக் கட்சி விழவில்லை. ஏழை மக்களின் மனம் அறிந்த கட்சி என்பதாலேயே இன்னும் எமது கட்சி செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

அதேவேளை, ரணிலுக்கும் எனக்கும் இடையில் தனிப்பட்ட ரீதியில் எவ்வித பிரச்சினை கிடையாது. அரசியல் கொள்கைகள் காரணமாகவே முரண்பாடுகள் ஏற்பட்டன. ரணிலின் ஊழல்மிக்க லிபரல்வாத அரசியல் பயணம் பண்டாரநாயக்கவின் கொள்கைக்கு முரணானது. எனவே, ரணிலை விரட்டிவிட்டு மகிந்தவை தலைமை அமைச்சராக்கினேன். நாடாளுமன்றத் தேர்தலுக்கும் அழைப்பு விடுத்தேன். ரணிலின் ஊழல் ஆட்சியால் ஒரே நாளில் ஐந்து அரசிதழ் அறிவித்தல்களையும் வெளியிட வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. உலகில் வேறு எந்த தலைவர்களும் இவ்வாறு செய்திருக்கமாட்டார்கள்.

மகிந்த தரப்புக்கு ஆட்சியமைக்க வழிசமைத்துக் கொடுத்தேன். ஆனால், பெரும்பான்மையை அவர்களால் நிரூபிக்க முடியாமல்போனது. இது எனது தவறு அல்ல. மகிந்த தரப்பினர் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதற்குக்கூட எமது கடிதம்தான் காரணம் என்பதை சிலர் இன்று மறந்துவிட்டு கதைக்கின்றனர்.

தாமரை மொட்டு கட்சிக்காரர்களுக்கும் எமக்கும் இடையில் கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சுகள் கடந்த சில மாதங்களாக இடம்பெற்று வருகின்றன. நேற்றுக்கூட (நேற்றுமுன்தினம்) மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகிய மூவருக்கும் எனக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது நாடாளுமன்றக்குழு, மையச் செயற்குழு ஆகியவற்றின் நிலைப்பாட்டை நான் தெளிவுபடுத்தினேன். தேசிய வேலைத்திட்டமொன்று முன்வைக் கப்பட்டால் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஆதரவளிக்கலாம். ஆனால், மொட்டு சின்னத்துக்கு வாக்களிக்கமுடியாது எனக் கூறினேன்.

எனவே, பொது சின்னத்தில் போட்டியிட முன்வருமாறு அழைப்பு விடுத்தேன். கூட்டணி அமைப்பதாயின் நம்பகத்தன்மை இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கே இறுதியில் பாதிப்பு ஏற்படும். கட்சியின் அடையாளம் மற்றும் ஆதரவாளர்களைப் பாதுகாத்துக்கொண்டு எம்மால் கூட்டணி அமைக்க முடியாது. தமக்குத் தேவையான ஆட்சியை அமைத்துக்கொள்வதற்காக வெளிநாட்டு தூதரகங்கள் சில முயற்சிக்கின்றன. இதற்கு நாம் ஒருபோதும் உடன்படமாட்டோம் - என்றார். (ஒ.5,22)

## நீதிமன்றத் தீர்ப்பை...

மட்டத்திலும் ஏற்படுத்தும். நீதிமன்றத் தீர்ப்பை மீறிய நபர்கள் முறையாகக் கையாளப்படுவதுடன் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு மாறாக குறித்த துறவியின் பூதவுடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்வதற்குத் துணையாக இருந்து நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்றத் தவறிய பொலிஸாருக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

27ஆம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தின் பிரதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு நேற்று மாலை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீதிமன்றக் கட்டளையை மீறி உடலம் ஆலயத்தின் தீர்த்தக்கேணிக்கு அண்டிய பகுதியில் தகனம் செய்யப்பட்டது. தீர்த்தக்கேணியில்தான் தெய்வத்தின் பல்வேறு தேவைக்காக புனித நீர் சேர்த்து வைக்கப்படுகின்றது. இந்தச் செயலால் ஆலயமும் அதன் பூமியும் தனது புனிதத் தன்மையை இழந்துள்ளது. சைவ மக்கள் தங்களுடைய நெருக்கமான உறவினர் இறந்த பிறகு குறைந்தது ஒரு மாத காலம் வரையில் ஆலயத்தினுள்ளோ அதன் பூமிக்கோ செல்வதில்லை

நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்காக அவ்விடத்தில் பிரசன்னமாகி இருந்த பொலிஸார் நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு மாறாக குறித்த துறவியின் பூதவுடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்வதற்குத் துணையாக இருந்தனர்.

இதன்பிரகாரம், பின்வரும் கோரிக்கைகளை விடுக்க விரும்புகின்றேன்.

நீதிமன்றத் தீர்ப்பை மீறிய நபர்கள் முறையாகக் கையாளப்படுவதுடன் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பை நடைமுற்றைப்படுத்துவதற்கு மாறாக குறித்த துறவியின் பூதவுடலை ஆலய வளாகத்தில் தக்னம் செய்வதற்குத் துணையாக இருந்து நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்றத் தவறிய பொலிஸாருக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளானது சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் அமைப்புகளின் இயலாமையை எடுத்துக்காட்டுவதுடன் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத நீதிமன்ற அவமதிப்பு குற்றம் வரை சென்றுள்ளது. இந்த விடயங்கள் விசாரணை செய்யப்பட வேண்டும். மேலும், அண்மைக்காலங்களில் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டம் நிலைநாட்டப்படாத விதிவிலக்கு கலாசாரம் வலுப்பெற்று வருகின்றமையை நான் சுட்டிக்காட்ட வேண்டும். மனிதாபிமான மற்றும் மனித உரிமைகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்கு எதிராக முறையான விசாரணைகளோ முறையான நடவடிக்கைகளோ எடுக்கப்படவில்லை. நீதிமன்றத்தை அவமதித்த நபருக்கு தங்களால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தை மீறி செயற்பட்ட நபரொருவருக்கு எவ்வித முறையான விசாரணைகளும் நடத்தாமல் அத்தகைய சட்ட மீறல்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உயர் நிலை புதவி வழங்கப்பட்டுள்ளது.

நான் மேலதிக விவரங்களைத் தற்போது குறிப்பிட விரும்பவில்லை. நான் குறிப்பிடும் விடயங்கள் தொடர்பில் நீங்கள் விளங்கிக்கொள்வீர்கள். நீராவியடிப் பிள்ளையார் ஆலய சம்பவம் தொடர்பில் முறையான சுயாதீனமான விசாரணைகள் இடம்பெறாத பட்சத்தில், தொடர்ந்தும் இத்தகைய விதிவிலக்கு கலாசார நிலமை தொடர்வதை ஊக்கப்படுத்துவதாக அமையும். அதேவேளை நாட்டுக்கும் எல்லா மக்களுக்கும் மிகப் பாரதூரமான விளைவுகளை உள்நாட்டிலும் பன்னாட்டு மட்டத்திலும் ஏற்படுத்தும்.

எனவே, சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெற்று, நீதிமன்றத் தீர்ப்பை மீறிய நபர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்த விரும்புகின்றேன் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5,22)




# லொறி – பேருந்து மோதல் சீனாவில் 36 பேர் சாவு

பீஜிங், செப்.30
சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் பாரவூர்தி – பேருந்து மோதிய விபத்தில் 36 பேர் சாவடைந்தனர். இந்த விபத்து அங்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.
70க்கு மேற்பட்டோர் பயணம் செய்த பேருந்தின் சக்கரத்தில் காற்றுப் போனதால் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த பாரவூர்தியுடன் வேகமாக மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த விபத்தில் சாவடைந்தவர்கள் தவிர 36 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

# காஷ்மீரில் நான் இருந்தால் ஆயுதம் ஏந்தியிருப்பேன்!

## ஐ.நாவில் இம்ரான் கான் உரை



நியூயோர்க், செப்.30
இந்திய இராணுவம் காஷ்மீர் மக்களை ஒடுக்கி வரும் சூழலில் நான் காஷ்மீரில் இருந்திருந்தால் நிச்சயம் ஆயுதம் ஏந்தியிருப்பேன் என்று பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நகரில் நடந்து வருகின்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தில் உரையாற்றியபோதே இம்ரான் கான் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
நான் பதவியேற்ற பிறகு இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டேன். அதற்கு இந்தியாவிடம் இருந்து எந்தச் சாதகமான பதிலும் வரவில்லை. இந்தியாவில் தேர்தல் நடந்த காலகட்டத்தில், தேர்தலுக்காக மோடி அரசு சில நடவடிக்கைகள் எடுத்ததை நாங்கள் புரிந்து கொண்டோம். தேர்தல் முடிந்து மீண்டும் ஆட்சியைப் பொறுப்பேற்ற பிறகும், இந்தியா - பாகிஸ்தான் இடையே அமைதி நிலவ நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் மோடி நிராகரித்து வருகிறார். காஷ்மீரில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று இந்த உலகம் கவனிக்க வேண்டும். அங்கு 80 லட்சம் காஷ்மீரிகளை இந்திய அரசு சிறை வைத்துள்ளது. நான் இந்த நிலையில் அங்கு இருப்பதாகக் கற்பனை செய்து பார்க்கிறேன். 55 நாள்களாக வீட்டுக்குள் அடைக்கப்பட்டு, தினமும் பாலியல் வன்புணர்வு மற்றும் கொடுமைகளைப் பற்றி மட்டுமே கேட்டு கொண்டிருந்தால், நான் எப்படி வாழ நினைப்பேன்? காஷ்மீரில் இருந்திருந்தால் நானே ஒரு துப்பாக்கியை எடுத்திருப்பேன்," என அவர் ஆவேசமாகப் பேசி முடித்தார். இந்திய இராணுவத்தினர் தற்போது காஷ்மீரில் நடந்து கொள்வதைப்போலவே 1980களில் ஈழத் தமிழர்கள் விடயத்திலும் நடந்துகொண்டார்கள் என்று அரசியலவதானிகள் கருத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.



# பிரேசிலில் மீண்டும் சூழல் மாசடைவு!

## கடற்கரை முழுவதும் எண்ணெய்

அமேசன் காட்டுத்தீயை அடுத்துப் பிரேசிலில் மீண்டும் ஒரு சூழல் மாசடைவுப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. பிரேசிலின் வட கிழக்குப் பகுதிக் கடற்கரையில் பெரிய அளவில் எண்ணெய் ப்ரவி உள்ளது. இது தொடர்பாக விசாரணையும் முடுக்கி விடப்பட்டு உள்ளது. அந்த எண்ணெயைப் பரிசோதித்ததில் அது பிரேசிலில் தயாரிக்கப்பட்டது இல்லை எனத் தெரியவந்துள்ளது. மீன்களுக்கு இந்த எண்ணெய் பரவலால் பாதிப்பு உண்டானதா எனத் தரவுகள் இல்லை. ஆனால், இப்போது வரை ஆறு கடல் ஆமைகள், ஒரு கடற்பறவை ஆகியன இறந்துள்ளன.
எண்ணெய் பரவியுள்ள பகுதிகளில் துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. அமேசன் மழைக் காடு அமைந்துள்ள மரேனோப் பகுதியிலும் இந்த எண்ணெய் பரவி உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சவூதியின் படைகள் சிறைப்பிடிப்பு ஹவுத்தி ஆயுததாரிகள் கைவரிசை

சவூதியின் படைகளைச் சிறைப்பிடித்து வைத்துள்ளதாக ஹவுத்தி ஆயுததாரிகள் தெரிவித்தனர். சவூதி – ஏமன் எல்லையில் நடந்த பெரும் தாக்குதலை அடுத்து, இந்தத் தகவல் வந்துள்ளது. அந்தத் தாக்குதல் நடந்த சவூதியின் நஜ்ரான் எனும் நகரத்தின் அருகே சவூதியின் குறித்த படைகள் சரண் அடைந்ததாக ஆயுததாரிகளின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். தாங்கள் பிடித்த சிப்பாய்களில் பலர் கொல்லப்பட்டதாகவும் அவர் கூறினார். ஆனால், சவூதி அரசு இது குறித்து எந்தவித தகவலையும் வெளியிடவில்லை. சவூதிப் படைகளைப் பெருமளவில் பிடித்த இந்த நடவடிக்கைதான் தங்களின் ஆயுதப் போர் வரலாற்றில் மிகப் பெரியது என்று ஹவுத்தி ஆயுததாரிகள் மேலும் தெரிவித்தனர். இந்தச் சிறைப்பிடிப்பில் பெரிய அளவில் உயிர்ச்சேதத்தையும், ஆயுதங்களையும் சவூதிப் படைகள் இழந்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# மக்களோடு மக்களாக வானூர்தியில் இம்ரான் கான்

இஸ்லாமாபாத், செப்.30
ஐ.நா. பொதுக்குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு ஆயத்தமான பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான், மக்கள் பயணிக்கின்ற சாதாரண வானூர்தியில் சவூதி அரேபியாவுக்குப் புறப்பட்டார்.
அவர் பயணிப்பதற்கு ஆயத்தமாக இருந்த பிரத்தியோக வானூர்தியில் கோளாறு ஏற்பட்டதாலேயே அவர் இவ்வாறு மக்களுடன் பயணித்தார். இம்ரான்கானுடன் பாகிஸ்தானின் அயலுறவுத்துறை அமைச்சர் ஷா முகமது குரேஷி, செயலர் சோஹைல் முகமது உள்ளிட்ட அதிகாரிகள் பயணித்தனர்.



இந்தோனேசியாவின் சேரம் தீவில் கடந்த புதன்கிழமை உண்டான 6.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது. அதன் பின்னர், மாலுக்கு மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6.8 ஆக பதிவானது.



# 200 டொல்பின்கள் கரை ஒதுங்கின மேற்கு ஆபிரிக்கக் கரையில் சோகம்

லிஸ்பன்,செப்.30

மேற்கு ஆபிரிக்கத் தீவொன்றின் கடற்கரையில், கிட்டத்தட்ட 200 வரையான டொல்பின் மீன்கள் இறந்து, கரை ஒதுங்கின. இந்தச் சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.



இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

ஆபிரிக்காவின் மேற்கில் அமைந்துள்ள போன் விஸ்டா என்னும் தீவின் கடற்கரையில் 200 டொல்பின்கள் இறந்த நிலையில் கரையில் ஒதுங்கின. பொதுமக்களும் சுற்றுலாப் பயணிகளும் அவற்றில் சிலவற்றை எடுத்து மீண்டும் கடலுக்குள் சேர்த்தனர். எனினும் அவை மீண்டும் மிதந்து கரைக்குத் திரும்பின.

இறந்த 136 டொல்பின்கள், பெரும் குழிதோண்டப்பட்டுப் புதைக்கப் பட்டன. இந்த டொல்பின்கள் இறந்ததற்கான காரணத்தைத் அறிவதற்காக 50 டொல்பின்களில் இருந்து பரிசோதனைக்காக மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதைவிட 4 டொல்பின்கள் உச்சபட்ச உறை நிலையில் பதப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த டொல்பின்கள் இறந்ததற்கான காரணத்தை ஆராய்வதற்காக ஸ்பெய்ன் நாட்டின், லொஸ் பாமாஸ் பல்கலைக்கழகத்தில் இருந்து நிபுணர்கள் வரவழைக்கப் பட்டிருக்கிறார்கள். கடலில் கொட்டப்படும் பிளாஸ்ரிக் உள்ளிட்ட கழிவுகள், கால நிலை மாற்றம் உள்ளிட்ட பல காரணிகளால், கடல்வாழ் உயிரிகள் உயிரிழந்து வருவதாகச் சூழல் ஆர்வலர்கள் குற்றம் சாட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

## நட்சத்திரத்தை சுற்றிவரும் மிகப் பெரிய கோள்



லண்டன்,செப்.30

மிகப் பெரிய கோள் ஒன்று தன்னைவிட மிகவும் சிறியதான நட்சத்திரம் ஒன்றைச் சுற்றி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

வானியல் கோட்பாடுகளின்படி, சாத்தியமற்றது என்று கருதப்படும் இந்த நிகழ்வை வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சூரியக் குடும்பத்திலுள்ள யூப்பிற்றார் கோளை ஒத்த இது, தன்னை விட மிகவும் சிறிய நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது.

அடிப்படைக் கோட்பாட்டுக்கு எதிராக அமைந்துள்ளதால் இந்த விடயம் விஞ்ஞானிகளிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்த ஆய்வு முடிவுகள் 'சயன்ஸ்' எனும் சஞ்சிகையில் பன்னாட்டு விஞ்ஞானிகள் குழுவால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஸ்பெய்னில் உள்ள தொலை நோக்கிகளைப் பயன்படுத்தி இந்தக் கோள் கண்டறியப்பட்டுள்ளதும் பூமியிலிருந்து சுமார் 284 ரில்லியன் கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ள இந்தக் கோள், சூரியக் குடும்பத்தில் அமைந்துள்ள கோள்களின் அமைப்பைப் போன்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க இராணுவம் வான் தாக்குதல் லிபியாவில் ஐ.எஸ். ஆயுததாரிகள் சாவு!

திரிபோலி,செப்.30

லிபியாவில் அமெரிக்க இராணுவம் நடத்திய வான் தாக்குதலில் 17 ஐ.எஸ்.ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். லிபியா அரச படைகளுடன் இணைந்து அமெரிக்க இராணுவத்தின் 'ஆபிரிக்க கொமாண்டிங்' குழு நடத்திய வான் தாக்குதலிலேயே இந்த ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.

பொதுமக்களை அச்சுறுத்தி வரும் பயங்கரவாத அமைப்புகள் லிபியாவில் காலூன்ற இனி இராணுவம் அனுமதிக்காது என்றும் - அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றும்- அமெரிக்க இராணுவத் தரப்பில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டது.



**பின்னணி :** லிபியாவில் 2011ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சியின்போது, முக்கிய அரசியல் தலைவரும், முன்னாள் லிபிய அதிபருமான முவம்மர் கடாபி கொல்லப்பட்டார். கடாபியின் மறைவுக்குப் பிறகு லிபியாவில் ஐ.எஸ். அமைப்பு வலுவாகக் காலூன்றியது. அதன் பின்பு பல ஆண்டுகளாக அங்கு தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. அமெரிக்க இராணுவம் லிபிய அரச படைகளுடன் இணைந்து செயற்படுகிறது.



## ஈரானுடனான வர்த்தகத்தை நிறுத்திக்கொள்ளமாட்டோம்

### துருக்கி அதிபர் தெரிவிப்பு

அங்காரா,செப்.30

ஈரானிடமிருந்து கச்சா எண்ணெயைத் துருக்கி தொடர்ந்து வாங்கும் என்றும் ஈரானுடான வர்த்தகத்தை நிறுத்தாது என்றும் துருக்கியின் அதிபர் எர்டோகன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈரானுடனான உறவை முறித்துக் கொள்வது என்பது முடியாத ஒன்று. ஈரானிடமிருந்து தொடர்ச்சியாக நாங்கள் கச்சா எண்ணெயை வாங்குவோம். அமெரிக்காவின் அச்சுறுத்தல் காரணமாகத் தனியார் நிறுவனங்கள் ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அஞ்சுவதாகவும் எர்டோகன் மேலும் தெரிவித்தார். கடந்த சில ஆண்டுகளாகவே அமெரிக்காவின் அச்சுறுத்தலை மீறித் துருக்கி தொடர்ந்து ஈரானுக்குத் தனது ஆதரவை அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.



# கவிழ்ந்தது அகதிகள் படகு குழந்தை உட்பட 7பேர் சாவு!

எதேன்ஸ்,செப்.30

கிரேக்கக் கடற்பகுதியில் பயணித்த அகதிகளின் படகு ஒன்று கவிழ்ந்ததில் குழந்தை உட்பட 7 பேர் சாவடைந்தனர். பலர் காணாமற் போயினர். கிரேக்கத்தின் ஏஜியன் கடற்பகுதியில் இந்தப் படகு கவிழ்ந்தது. காணாமற்போயுள்ளவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது. கண்டெடுக்கப்பட்ட சாவடைந்த உடலங்களை ஆராய்ந்து பார்த்தும் அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றில் நடக்கும் உள்நாட்டுப் போர் காரணமாக சிரியா, ஏமன் போன்ற நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் உயிரைப் பணயம் வைத்து கடல் மார்க்கமாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல விளைகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தலைமன்னார் வாலிபர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது




மன்னார்.செப்.30

மன்னார் மாவட்டத்துக்கு உட்பட்ட 23 வயதுக் குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந் தாட்டப் போட்டியில் தலைமன்னார் வாலிபர் அணி கிண்ணம் வென்றது.

டயலொக் ஜனாதிபதி தங்க கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் பொது உள்ளக விளை யாட்டரங்கில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் தலைமன்னார் வாலி பர் அணியை எதிர்த்து சென்.மேரிஸ் அணி மோதியது. 5செற்கள் கொண்ட போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்த வர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர்.

முதலாவது செற்றில் சென். மேரிஸ் அணி 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால் அடுத்த மூன்று செற்களி லும் தலைமன்னார் வாலிபர் அணி பலத்த போராட்டத்தில் 25:21, 26:24, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினர். (422-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.செப்.30

முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சிலா வத்தை இளம் பறவை கள் விளையாட்டுக் கழ கத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு வடமாகாணம் ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந் தாட்டத் தொடரின் ஆட் டங்கள் இளம் பறவை கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் புதுக்குடியி ருப்பு சுப்பறாங் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரண்டாவது ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு விக் னேஸ்வரா விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மூன்றாவது ஆட்டத்தில் செம்மலை உதயசூரி யன் .விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

நான்காவது ஆட்டத்தில் இரணைப்பாலை சென் .அன்ரனிஸ் விளையாட் டுக் கழகஅணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட் டுக் கழக அணி மோத வுள்ளது. (23)

- - - - - -

யாழ்ப்பாணம், செப்.30

புத்தூர் கலைமதி விளை யாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் புத்தூர் கலைமதி விளை யாட்டுக் கழக மைதானத் தில் இடம் பெற்று வரு கின்றன. இதில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் 'ஏ' பிரிவு அணிக ளுக்கான அரையிறுதி யாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட் டுக் கழக அணி மோத வுள்ளது. (23)

## கலைமதி - கலையரசி இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப்.30

புத்தூர் கலைமதி விளையாட் டுக் கழகம் நடத்தும் கரப்பந் தாட்டச் சுற்றுத் தொடரில் புத்தூர் கலைமதி விளையாட் டுக் கழக அணி இறுதியாட் டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை மின் ஒளியில் இடம் பெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக் கான அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீ வன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்க ளைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளை யாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்கு தகுதி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் 'பி' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் தொண்டமானாறு கலைய ரசி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டி லிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் தொண்ட மானாறு கலையரசி விளை யாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது. (23)






## யங்ஸ்ரார் வி.க. மகுடம் சூடியது

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 24ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு நடத்திய அமரர் சாந்தன், யூட் கசன் ஞாபகார்த்தமாக 17ஆவது வருடமாக மின் ஒளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதா னத்தில் மின் ஒளியில் இரவு 7 மணி யளவில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கோல்டன் பிரதேர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சிலாவத்தை இளம் பறவை கள் விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகா ணம் ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிலா வத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து அலம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அலம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு விக் னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது .இரண்டு அணிகளும் தலா ஒவ் வொரு கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல் வியை தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் புதுக்குடியி ருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## தமிழ் யுனைட்டெட் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம் செப்.30

வடக்கு- கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுத் தொட ரில் தமிழ் யுனைட்டெட் அணி மூன்றாமிடத்தை தனதாக்கி யது.

நேற்றுமுன்தினம் சனிக்கி ழமை யாழ்ப்பாணம் துரை யப்பா விளையாட்டு மைதா னத்தில் மின் ஒளியில் இடம் பெற்ற மூன்றாம் இடத்துக் கான ஆட்டத்தில் நொதேன் எலைட் அணியை எதிர்த்து தமிழ் யுனைடெட் அணி மோதி யது. இதில் இரண்டு அணி களும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ய ஆட் டம் சமநிலையில் முடிவடைந் தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட் டது. இதில் தமிழ் யுனைட்டெட் அணி 4:2 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது.



# லெகன்ஸை வீழ்த்தி கிரானடா வாகை

ஸ்பானியாக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியொன்றில் கிரானடா அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

கிரானடா - லெகன்ஸ் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்த 28ஆவது நிமிடத்தில் கிரானடா அணி வீரர் ரொட்றிக் டிஷா அருமையான கோல் ஒன்றைப் போட்டார். லெகன்ஸ் அணி வீரர்கள் கோல் போடுவதற்கு முயற்சித்த போதிலும் அது கைகூடவில்லை. முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற கணக்கில் கிரானடா அணி முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இரு அணி வீரர்களும் கோல்கள் போடுவதற்கான முற்சிகள் தோல்வியடைய இறுதியில் கிரானடா அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

லெகன்ஸ் அணி 15 தடவைகள் எதிரணியின் கோல் கம்பங்களை நோக்கி பந்தை அடித்த போதிலும் கோல்கள் போடுவதற்கான முயற்சிகள் எதிரணியால் முறியடிக்கப்பட்டது. பந்தை அதிகமான நேரம் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தும் லெகன்ஸ் அணி வீரர்களால் கோல் அடிக்க முடியாமல் போனது துரதிர்ஷ்டமே.

## நேபாள வீரர் பரஸ் கட்கா புதிய சாதனை

பன்னாட்டு ரி- 20 போட்டியில் சேஸிங்கின்போது சதம் அடித்த முதல் தலைவர் என்ற சாதனையை நேபாள கிரிக்கெட் அணித் தலைவர் பரஸ் கட்கா படைத்துள்ளார்.

சிம்பாப்வே-நேபாளம்- சிங்கப்பூர் ஆகிய அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு போட்டி, சிங்கப்பூரில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் சிங்கப்பூர் நேபாள அணிகள் மோதின. இதில் நேபாள அணியின் தலைவர் பரஸ் கட்கா அதிரடியாக விளையாடி 49 பந்துகளில் சதமடித்தார். அவர் மொத்தம் 52 பந்துகளில் 106 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். இதன் மூலம் பன்னாட்டு ரி-20 கிரிக்கெட் வரலாற்றில் சேஸிங்கில் சதம் அடித்த முதல் தலைவர் சாதனையை அவர் பெற்றார்.

ஏற்கனவே ஒரு நாள் போட்டியில், சதம் அடித்த முதல் நேபாள வீரர் என்ற பெருமையை பெற்றுள்ள இவர், ரி-20 போட்டியிலும் சதமடித்த முதல் நேபாள வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

## ரியல் மட்ரிட் - அத்தி. மட்ரிட் ஆட்டம் சமநிலையில்

ஸ்பானியாக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியொன்று சமநிலையில் முடிவடைந்தது.

ரியல் மட்ரிட் - அத்திலெட்ரிக் மட்ரிட் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் முட்டி மோதிக் கொண்டு கோல்களை போடுவதற்கு எத்தணித்த போதும் இரு அணி வீரர்களாலும் அது முடியால் போக முதல் பாதி ஆட்டம் எந்தவித கோல்களும் அடிக்கப்படாது நிறைவுற்றது.


இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த முதல் ரியல் மட்ரிட் வீரர்கள் எதிரணியின் கோல் கம்பங்களை நோக்கி 14 தடவைகள் பந்தை முன்னகர்த்திய போதும் அவர்களின் கோல் போடுவதற்கான முயற்சிகள் எதிரணியால் தகர்க்கப்பட்டன. இறுதியில் இரு அணிகளாலும் கோல்கள் எதுவும் பெற முடியாமல் போக 0:0 என்ற கணக்கில் ஆட்டம் நிறைவுற்றது.




## பிலிஸ்கோவா அதிர்ச்சி தோல்வி

சீனா பகிரங்க ரென்னிஸ் போட்டி சீனாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு போட்டியொன்றில் கரோலினா பிலிஸ்கோவா தோல்வியடைந்து வெளியேறினார்.

கரோலினா பிலிஸ்கோவா - ஒசாற்றா பின்கோவை எதிர்கொண்டார். முதல் சுற்றில் ஒசாற்றா பின்கோ 7:5 என்ற கணக்கில் கைப்பற்றி முதல் சுற்றிலேயே பிலிஸ்கோவாவுக்கு சவால் விடுத்தார். இதனை முறியடிக்கும் விதமாக இரண்டாம் சுற்றை பிலிஸ்கோவா 6:3 என்ற கணக்கில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டி மிக விறுவிறுப்பாக காணப்பட்டது. இருவரும் ஒருவொருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்ற வகையில் ஆடினர். இறுதியில் ஒசாற்றா பின்கோ 7:5 என்ற கணக்கில் பிலிஸ்கோ வாவை வீழ்த்தி வெற்றி பெற்றார்.



## சாமரி அத்தபத்து புதிய சாதனை

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இடம்பெற்ற பன்னாட்டு ரி-20 போட்டியில் இலங்கை அணியின் தலைவி சாமரி அத்தபத்து சதம் பெற்றுச் சாதனைபடைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணியானது மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 போட்டிகளில் விளையாடி வருகிறது.

இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற முதலாவது போட்டியில் அணியின் வெற்றிக்காக சளைக்காது போராடிய இலங்கை அணித் தலைவி சாமரி அத்தபத்து அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி, 66 பந்துகளில் 6 ஆறு ஓட்டங்கள், 12 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 113 ஓட்டங்களைக் குவித்தார். எனினும் இந்தப்போட்டியில் இலங்கை அணி தோல்வியைத் தழுவியிருந்தது.

பெண்களுக்கான ரி-20 கிரிக்கெட் அரங்கில் சதம் விளாசிய முதல் இலங்கை வீராங்கனை என்ற சாதனையை சாமரி அத்தபத்து பதிவு செய்தார்.

சாமரி அத்தபத்து கடந்த 2017ஆம் ஆண்டு இடம்பெற்ற பெண்களுக்கான உலகக் கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 178 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வன்னியின் பெரும் சமர் நேற்று ஆரம்பம்

முல்லைத்தீவு, செப்.30

வன்னியின் பெரும் சமர் என்று வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் இடையிலான 9 ஆவது கிளி-முல்லை நட்புக் கிண்ணத்துக்கான கடினப் பந்து துடுப்பாட்ட போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய அணியினர் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர். அதன்படி முதலாவது இன்னிங்ஸுக்கு களமிறங்கிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கோபிதன் 6 இலக்குகளையும், யசிக்குமார் 4 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 53 பந்துப் பரிமாற்றங்களில் 185 ஓட்டங்களைக் குவித்தது. யசிக்குமார் 85 ஓட்டங்களையும், பிரவிந்தன் 21 ஓட்டங்களையும், கோபிதன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

120 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி நேற்றைய ஆட்ட நேர நிறைவில் 3 இலக்குகளை இழந்து 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் கோபிதன் 2 இலக்குகளையும், பிரனித் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து பி.ப. 2.30 மணிக்கு பழைய மாணவர்களுக்கான ரி-20 ஆட்டமும் அதனைத் தொடர்ந்து பரிசளிப்பும் நடைபெறவுள்ளது. (ஒ.23)

## காணி தேவை

கோண்டாவிற்சந்திக்கும் இராசபாதை வீதிச்சந்திக்கும். இராசபாதை வீதிச்சந்திக்கும் முடமாவடிச்சந்திக்கும் இடையில் வீதியோரமாக காணித் துண்டுகள் இருப்பின் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**077 672 7941**

குறைந்த செலவில் உலகின் முதல்தர பல்கலைக்கழகங்களில் இணைய பின்லாந்து ( Finland) விரையுங்கள்



அனுமதி :- தை / மாசி - 2020

கல்வியின் பின் வேலைவாய்ப்புடன் வதிவிட அனுமதியும் பெறலாம். பெற்றோர், மற்றும் கணவன்/ மனைவியும் செல்லும் வாய்ப்பு.

வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களின் அனுமதியுடன் கூடிய Student Visa பெற

021 314 4242, 077 768 7821

எங்கள் சேவைக்கு எதுவித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.

Aspirations Education
No.204, Sir Pon. Ramanathan Road, Jaffna.
Email :- jaffna@aspirations.edu.lk
www.aspirations.edu.lk

## சிறுநீரகம் தேவை

35 வயதுடைய பெண் ஒருவரிற்கு O/AB குருதி வகையைச் சேர்ந்த சிறு நீரகம் உடன் தேவை. உதவ விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

**077 291 2503, 077 335 3005**

## சமையல் ஆள்கள் தேவை

பரந்தனுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடைப்பட்ட இடத்தில் உள்ள Hotel ஒன்றுக்கு சமையலாளர், றொட்டிவேலையாள்கள் தேவை. (முன் அனுபவம் விரும்பத்தக்கது) சலுகை : தங்குமிடவசதி, உணவு.

**076 981 9241**

THE WORLD CLASS
MBA
LINCOLN UNIVERSITY COLLEGE
QUEST INTERNATIONAL UNIVERSITY PERAK
Be a world class professional



Fuly accredited MBA recognised by UGC
Eleven subjects and research
Excellent panel of lecturers
Industrial Visit
Affordable price
Pay in monthly installments
September Intake
Weekend OR Weekday
For more information:
0777 174 443
BLC CAMPUS
23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk


## தவறிவிடப்பட்டுள்ளது

யாழ் நகரிலிருந்து காரைநகர் செல்லும் கல்லுண்டாய் வீதியில் கோயில் படங்கள் கொண்ட மூன்று அல்பம் தவறிவிடப்பட்டுள்ளது. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்

**077 738 5701,077 933 2058**

## மரண அறிவித்தல்

### அருணாசலம் சோதிலிங்கம்



1ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் சோதிலிங்கம் கடந்த (27.09.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் திருப்பதியம்மா தம்பதியரின் அன்பு மகனும் பரமலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சாந்தகுமாரி (சாந்தா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் (ராசா), மகாலிங்கம் (குருமன்) மற்றும் அமிர்தலிங்கம் (அமுதன்), மணிமேகலை (தேவா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அருணந்தி., யோகநாதன், லலிதாம்பிகை காலஞ்சென்றவர்களான றங்கன், கலா மற்றும் வசந்தலீலா, ஐங்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஜந்தன், சாரங்கன், சுவஸ்திகா, அருணன், முகுந்தன், குமுதன், வினோதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தினேஸ், அன்பழகன், வேணுஜன் மற்றும் கௌசிகா, யசோதரை, விஜயகாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிந்துஜா, அட்சயா, வினுசாந், சுஜானி, பவிந்தன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2019) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P:- 077 383 7508

தகவல்
குடும்பத்தினர்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.